Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 16/50


දිනමුරසු වාරමලර් ஆக. 08-14.2004

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 574



# ஆன்மீகம்



## ஆனந்தமய கோசம்

மனிதனுக்கு ஐந்து கோசங்கள் உள்ளன. அவை அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்பவை. ஞானம் பெறுவதற்குப் புனித நூல்களைப் படிக்கவோ சான்றோர் உபதேசங்களைக் கேட்கவோ தேவையில்லை. விஞ்ஞானமய கோசத்தின் அநுபவங்களை நீ பெற்றதும் ஆனந்த மய கோசத்தின் அநுபவத்தை நீ பெறுவாய். நீரிலிருந்து வெளிப்படும் நீர்க்குமிழி நீரால் போஷிக்கப்பட்டு முடிவில் நீரில் கரைவது போல மனிதனும் ஆனந்தத்திலிருந்து உருவாகி, ஆனந்தத்தால் போஷிக்கப்பட்டு முடிவில் ஆனந்தத்தில் கரைகிறான். ஆனால், இதனை அறியாமல் காலம், பணம், ஆற்றல் இவற்றில் ஆனந்தத்தை தேடியலைவதிலே வீணடிக்கிறான்.

- எஸ். அகிலா, 1 ஆம் பிரிவு, மண்டூர்.

## மகத்தான கிருபை

கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; எபேசியர் 2:8 மகத்தான கிருபை. ஆம் பிரியமானவர்களே! பரலோகத்திலிருந்து தேவகுமாரன் பூமிக்கு வந்து எனக்காக மரித்தார். கிருபை என்றால் என்ன? தகுதி இல்லாத ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் தகுதிக்கும் மிக மேலானது என்பதாகும். ஆம் சகோதரனே! சகோதரியே! எம்முடைய நற்செயல்களினால் அல்ல, தான தர்மங்களினால் அல்ல, எம்முடைய பரிசுத்தத்தினால் அல்ல. அவருடைய கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தராகிய இயேசு எனக்காக மரித்தார். என் பாவங்கள், சாபங்கள் எல்லாவற்றையும் கல்வாரி சிலுவை மரணத்தினாலே போக்கிவிட்டார். என்னை நீதிமானாக்க உயிர்த்தெழுந்து இன்றைக்கும் சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறார் என விசுவாசிக்கிற நாம், அவருடைய கிருபையினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். ஆம் "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" ரோமர் 1:17 ஆண்டவரே! என்னுடைய எந்தச் செயல்களினாலும் அல்ல, உம்முடைய கிருபையினாலே என்னை வழி நடத்தியருளும் சுவாமி! என்று கேட்போமாக.

- சகோ: போல் ஜோன், தெல்தெனிய.

## லைலத்துல் கத்ரு இரவில் விழித்திருந்து வணக்கம் புரிய வேண்டும்

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருநாள் தமது தோழர்களிடம் "முற்காலத்தில் பனீ இஸ்ராயீல் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் மாதங்கள் விழித்து இருந்து வணக்கம் புரிந்தார்கள்" என்று சொல்லிக் காட்டும்போது ஸஹாபாக்கள், "நாயகமே! இறைவன் நம்மை அறுபது எழுபது வயதுதானே இவ்வுலகில் வாழச் செய்துள்ளான். இந்த சொற்ப வயதில் நாம் எவ்வாறு ஆயிரம் மாதங்கள் நின்று வணங்க முடியும். அந்தப் பாக்கியம் நமக்குக் கிடைக்காதா?" என்று வேதனைப்பட்டார்கள். உடனே நாயகம் (ஸல்) அவர்கள் "நீங்கள் ரமழான் மாதத்தில் உள்ள லைலத்துல் கத்ரு இரவில் விழித்து இருந்து வணக்கம் புரிவது ஆயிரம் மாதங்கள். வணங்குவதை விடச் சிறந்தது" என்று கூறினார்கள்.

- முஹம்மது ஹஸனி, புதிய வீதி, கல்முனை - 07.

---

**கவிதைப் போட்டி இல. 571** **பரிசுக்குரிய கவிதை**



**இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

## தேடி எடு

மீண்டும்
சோதனைகளும்,
சோதனைக் சாவடிகளுமா?
தேடி எடு
ஒப்பந்தத்தின் பின்
மறந்துவிட்ட
அடையாள அட்டையை.

- எஸ். ஸ்ரீ,
போதனா வைத்தியசாலை,
மட்டக்களப்பு.

## தீர்வு காண வழி தேடு

எதிர்க் கருத்தை அழிப்பதற்கு
ஏந்த வேண்டாம் குண்டுகளை
மாற்றுக் கருத்தை மன்றத்தில் ஏற்று
அனைவரையும் அணைத்து
அவர்களுடன் இணைந்து
எல்லோர்க்கும் இசைவான
இறுதித் தீர்வுதனை
விரைவிலே காண்பதற்கு
வழிகளைத் தேடுங்கள்.

– சீ. தங்கவடிவேல்,
அரசினர் வைத்தியசாலை,
மட்டக்களப்பு.

## சுருந்தவம்

மாதவம் செய்திங்கே
மங்கையராய்ப்
பிறந்து,
எம் மண்ணில்
காவலரண் கடக்கக்
கடுந்தவம்
புரிகின்றோம்!

– திருமதி. ஷோபனா
தயாபரன்,
கரவெட்டி கிழக்கு.

## வதந்தி

"ஈழத்தில் சமாதானமென்று
ஊடகங்கள் மூலம் அறிந்தேன்
ஆதலால் - அடையாள அட்டையை
கவனத்தில் கொள்ளவில்லை!"
"பேச்சாலும், எழுத்தாலும்
சமாதானத்தை தரலாம்
நடைமுறைப்படுத்துவது......?"

– ஏ.எப்.எம். றியாட்,
இல. 391/A–07, முள்ளிப்பொத்தானை.

## நோக்காதே

யுத்த நிறுத்தம் எனக் கூறினாலும் - இந்த
யுவதி செய்த வேலைக்காக
சட்டத்தைக் காக்க வந்த பொலிஸாரே!
சந்தேகம் கொண்டு நோக்காதே
எல்லாப் பெண்களையும்!

– ஜே. இருதயராஜ்,
லுனுகலை.

## குண்டா?

மார்புக் குண்டா அல்லது
இடுப்புக் குண்டா?
இலக்கு யாருக்கு?

– வி. சில்வெஸ்டர்,
மூதூர்.

**கவிதைப் போட்டி இல.574**



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 14.08.2004

கவிதைப் போட்டி இல.574
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

## சாபக்கேடு

சண்டை தீர்ந்து
சமாதானம் நிலவும்
என்றதோர் நப்பாசையில்
சிறிது காலம் ஓய்வெடுத்த
சோதனைச் சாவடிகள்
மீண்டும் விழித்தெழுந்தது
குறிப்பாக பெண்ணினத்திற்கு
பெரியதோர் சாபக்கேடாகும்.

– கேக்கே – டீன்,
பழைய சந்தை,
ஏறாவூர்.

## நிம்மதி தொலைந்து போச்சு!

பெண்ணே!
இன்று நடப்பதோ
சமாதானப் பேச்சு
நீ நடத்த நினைப்பதோ
மனித குண்டு வீச்சு
தலைநகர்த் தமிழரின்
நிம்மதி மூச்சு
இன்றுடன் இங்கே
தொலைந்து போச்சு.

– செ. தர்சினி,
கொழும்பு.

## கதவு மூடப்பட்டுவிட்டதா?

திறந்து விடப்பட்ட
கதவுகள் - இன்று
மீண்டும் மூடப்பட்டதனாலா
இந்த அபலைப் பெண்ணிடம் - மீண்டும்
இவர்கள் அடையாள அட்டை
கேட்கின்றனர்!

– றிஷீ, சாய்ந்தமருது.

## எதிரொலி

தலைநகர்த் தாக்குதலின்
எதிரொலி
தலைநகரில் தமிழர்களெல்லாம்
தற்கொலைக்
குண்டுதாரிகளாம்.

– ப. சிறிதரன்,
மாமாங்கம்.

---

# உங்கள் பக்கம்

## கும்புறுப்பிட்டி கிராமம் இருள் சூழ்ந்துள்ளது

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டிப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மின்சாரப் பிரச்சினையும் ஒன்று. இந்தக் கிராமத்து அனேகமான மக்கள் மிகவும் வறுமையானவர்கள். தங்களின் சொந்தப் பணத்தைக் கொண்டு மின்சாரம் பெறும் வசதியற்றவர்கள். மாணவர்கள் நிறையப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். தங்கள் வீடுகளில் இருந்து கல்வி கற்காமல் மின்சார வசதி உள்ள கிராமத்திற்கு சென்று கல்வி கற்கின்றார்கள். ஆகவே, எமது கிராமத்திற்குப் பொறுப்பான அதிகாரி அவர்களே! உங்களால் முடிந்தளவு உதவியினை எமது மக்களுக்குச் செய்து எமது கிராமத்திற்கு வெளிச்சத்தைத் தாருங்கள் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

- இவ்வண்ணம்
கே. சாந்தி,
கும்புறுப்பிட்டி.

## மாவடிப்பள்ளி தபாலகம் சீராக இயங்குவதில்லை

மாவடிப்பள்ளி கிராமத்தில் இருக்கும் தபாலகம் சீராக இயங்குவதில்லை. அதாவது காலை 8.00 மணிக்குப் பிறகு திறக்கப்படுகின்றது. இதனால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள். வேறு இடங்களைத் தேடிப் போகின்றார்கள். இந்தத் தபாலகத்தைப் பிரதான வீதியில் அமைக்குமாறு வேண்டுகின்றோம். அங்கு இருக்கும் தொலைபேசியை அவர்களின் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்துகின்றார்கள். எங்கள் கிராம முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் ஒரு முடிவைப் பெற்றுத் தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- இங்ஙனம்,
உண்மையுள்ள சமூக தொண்டன்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


---

# வாசக[ர்] சாலை



## சுவையோ சுவை!

இதழுக்கு இதழ் - இனிமை சேர்க்கும் இன்பமான முரசே!

உனது இதழ் 570 சுவையோ சுவை.

அரசியல் விடயங்கள் அசத்திச் சென்றன. "முஸ்லிம் காங்கிரஸின் எதிர்காலம் என்ன?" ஸ்தாபகர்களின் பேட்டி - உண்மை நிலையை எடுத்துக் கூறியது. ஹுசைன் பின் ஹமீதுக்கும் முரசுக்கும் பாராட்டுக்கள்.

தேன்கிண்ணம் கொண்டுவந்த கவிதைகள் அனைத்தும் அருமையே! சிறப்புக் கவிதையும - கவிஞரும் பகுதியில் "மாலதி மைத்ரியின்" மூன்று கவிதைகளும் மிக அருமையாகவே இருந்தன.

முரசு இப்போதெல்லாம் வாசர்களின் ஆக்கங்களோடு அவர்களின் முகவரியையும் பிரசுரிப்பதையிட்டு நன்றிகளையும் - பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

– புதிய காத்தான் – முஸம்மில்.
குவைத்.

## என்றும் வாழ்க!

அன்பின் என் இனிய முரசே! வாரம் தோறும் உன் வருகைகள் சந்தோசமாக உள்ளது. அதனுள் வரும் அம்சங்களும் மிகச் சுவை. அதை பழசு புதுசு என்று வேறுபடுத்த முடியாது. அனைவருக்கும் உன் சேவை தேவைப்படுகிறது. முரசே! உனக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

– பி. நவராணி,
வினாயகபுரம்.

## குன்று நிகர் தினமுரசே!

அன்புசால் ஆசிரியருக்கு வணக்கம்! என்றும் எமது வளர்ச்சியிலே அக்கறை காட்டி வரும் "குன்று நிகர் தினமுரசே! குவலயத்தில் நீ வாழி!!" நாம் ஆசிரிய குழாமின் அன்புக்கும் ஆதரவிற்கும் நன்றிக்கடன் பட்டுள்ளோம். என்றும் "தினமுரசு" வானுயரப் புகழடைய வாயார வாழ்த்துகின்றோம்!!

– நன்றியுடன், யாழமீர் மர்சூன்,
மொறட்டுவ.

## வசந்தமாய் வரும் தினமுரசே!

ஒவ்வொரு வாரமும் வசந்தமாய் வந்து எங்கள் கரங்களில் தவழ்ந்து இன்ப வெள்ளத்தில் மூழ்கடிக்கும் தினமுரசே! உன் படைப்புக்களைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை என்றுதான் கூற வேண்டும். இருந்தாலும் பாராட்டாமல் இருக்க முடியாது. சிந்திக்கவும் சிரிக்கவும் வைக்கும் சிந்தியா பதில்கள், கவிதை சுவைக்க தேன் கிண்ணம், அறிவுத் தேடலை விருத்தி செய்ய குறுக்கெழுத்துப் போட்டி போன்ற உன் படைப்புக்கள் வெற்றிக் கொடிகட்டிப் பறக்கின்றன. உன் சேவை இன்று போலவே என்றும் தொடர எனது கோடானுகோடி வாழ்த்துக்கள்.

– முஹம்மட் பாரிஸ்,
இல. 114, அரசடித் தோட்டம்,
நிந்தவூர் – 22.

## காலக் கண்ணாடி முரசு!

முரசின்
பக்கங்களை சுவைத்த
பொழுது தேனீர்
கோப்பைக்குள் இரத்தம்
என்ற கட்டுரை
வியப்பில் ஆழ்த்தியது.
எமது மக்கள் பட்ட
துயரம்
அண்மைக்காலங்களாக
நடந்த விடயங்களை
நேரில் பார்ப்பது போன்ற
உணர்வும் ஏற்பட்டது.
மற்றும் ஏனைய
ஆக்கங்களும் பயனுள்ள
விதத்தில் அமைந்தன.
அத்துடன் நலமாக
வாழ்வோம் பகுதி
அனைவருக்கும்
பயனுள்ள விதத்தில்
அமைவதால்
தொடர்ந்தும் பயனுள்ள
தகவல்களை முரசு
எமக்குத் தருமெனத்
தொடர்ந்தும்
காத்திருக்கிறோம்.

– ராஜன்.

# கொழும்பிலும் கிழக்கிலும் இடம்பெறும் அரசியல் கொலைகளை நிறுத்துக!

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பிரேரணை கொண்டுவர தீவிர முயற்சி

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியிலும் இதனை மையமாக்க் கொண்டு வடக்கு - கிழக்குக்கு வெளியிலும் இடம்பெறும் அரசியல் படுகொலைகள், மரண அச்சுறுத்தல்கள், பழிவாங்கும் நடவடிக்கைகள், தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்த ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைப்பதற்கான முயற்சிகள் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள தமிழ்ப் புத்திஜீவிகளால் மேற்கொள்ளப் படுகின்றன. கிழக்கிலும் கொழும்பிலும் அண்மைக் காலங்களில் ஜனநாயக வழிக்குத் திரும்பிய முன்னாள் ஆயுததாரிகளையும், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் மிலேச்சத்தனமாக வேட்டையாடும் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதையடுத்தே இக் கோரிக்கை பரவலாக எழுந்துள்ளதாக 'ஆசிய ட்ரிபியூன்' தெரிவித்துள்ளது. இந்தப் பைத்தியக்காரத்தனமான படுகொலைகளை இனியும் தொடராமல் தடுத்து நிறுத்து வதற்கான அழுத்தங்களைச் சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டுமென்றும், இது தொடர்பான பிரேரணையை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுவருவதற்கான முன்முயற்சிகள் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப் படுகின்றன. இலங்கையில் அதிகரித்துவரும் அரசியல் படுகொலைகளை உடனடியாக நிறுத்துவதற்கான நடவடிக் கையை இலங்கை அரசாங்கமே மேற் கொள்ள வேண்டுமென்றும், இது தொடர்பான பிரேரணை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு வரப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்படுமென்றும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றன. "அரசியல் ரீதியாக மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைக் கொல்வது பெரும்பாலும் நாளாந்த நிகழ்வாகிவிட்டது. ஹிட்லரின் பாசிஸ ஆட்சிக் காலத்தில் வர்ணிக்கப்பட்டதைப் போன்று கொல்லப் படுபவர்களைத் துரோகிகளாக வர்ணிக்கும் ஊடக கலாசாரம் இங்கு வளர்ச்சி பெற்று வருகிறது" என்றும் இவ் விடயத்தில் அக்கறை செலுத்துவோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறி வைத்துத் தற்கொலைத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டமை, மட்டக்களப்பு சிறைச்சாலைக்குள் கருணா அணி முக்கியஸ்தர்கள் இருவர் சுட்டுக் கொல்லப் பட்டமை, ஜனநாயக வழிக்குத் திரும்பிய ஏழு தமிழ் இளைஞர்கள் கொட்டாவவில் சுட்டுக் கொல்லப்பட்டமை, புளொட் மோகன் கொலை உட்பட இடம்பெற்ற பல பயங்கரவாதச் சம்பவங்கள் இனியும் இடம்பெறாமல் தடுப்பதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் இடம்பெற வேண்டுமென வற்புறுத்தப்படுகிறது. புலிகளின் மிகப் பிரதான எதிரிகளான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும், கருணா அம்மானையும் தேடி ஆறு கொலைக் குழுக்கள் வன்னியிலிருந்து கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த ஒவ்வொரு கொலைக் குழுவும் ஒவ்வொரு தலைவரின் கீழ் செயற்படுவதாகவும், இதில் அங்கம் வகிப்பவர்கள் குறி தவறாது சுடுதல், நவீன ரக ஆயுதங்களைக் கையாளுதல், தற்காப்புக் கலை, தற்கொலைக் குண்டுத் தாக்குதல் போன்றவற்றில் தேர்ச்சி பெற்றவர்களென்றும் புலனாய்வுத் தகவல்கள் கூறுகின்றன. இக் கொலைக் குழுக்கள் குறிவைத்துள்ள அமைச்சர் டக்ளஸ் மற்றும் கருணா ஆகியோரின் நடமாட்டங்களைக் கண்டறிவதற்காக கணினி அமைப்புடன் கூடிய நவீன கருவிகள் பயன்படுத்தப் படுவதாகவும் தெரியவந்துள்ளது. கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புற வீதிகள், மூலை முடுக்குகள் பற்றிய விபரங்களைக் கணினியில் இக் குழுக்கள் பதிவு செய்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் தொடரும் அரசியல் படுகொலைகள் சமாதானப் பேச்சுவார்த்தையை மட்டுமல்ல, யுத்த நிறுத்தத்தையே பாதிக்கக் கூடிய ஆபத்து இருப்பதாக அண்மையில் நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் கூறியிருந்தார். அரசியல் படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம், புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று தன்னைச் சந்தித்த பிரிட்டிஷ் தூதுவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது. தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் அரசியல் விவகார மற்றும் சட்டத் துறை ஆலோசகராகப் பணிபுரிந்த பேராசிரியர் நிக்கலஸ் ஹேசம், இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை நிலைபற்றிக் குறிப்பிடுகையில், "யுத்த நிறுத்தம் தொடர்கிறது, சமாதானப் பேச்சு தடைப்பட்டுள்ளது. என்றாலும் நிலைமை ஆபத்தானது" என்று குறிப்பிட்டதையும் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தும் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## யாழ்ப்பாணத்துக்கு தபால் பொதிகள்

வவுனியாவில் கடந்த பல மாதங்களாகத் தேங்கிக் கிடந்த சுமார் 40 ஆயிரம் கிலோ எடையுள்ள யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் அமைச்சரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமுமான கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மேற்கொண்ட முயற்சியை அடுத்து கடற்படையினரால் கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்குரிய தபால் பொதிகளைத் தரை மார்க்கமாக எடுத்துச் செல்வதில் புலிகள் ஏற்படுத்திய தடங்கல்களை அடுத்து தபால் மா அதிபர் விடுத்த வேண்டுகோளின் பேரில், கடற்படைத் தளபதியுடன் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு அமைய இவை கடல் மார்க்கமாக எடுத்துச் செல்லப் படவுள்ளன.

## பிரிட்டிஷ் தூதுவர் கண்டனம்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்து அண்மையில் நடத்தப்பட்ட கொள்ளுப்பிட்டி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முயற்சி குறித்து இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் ஸ்டீவன் எவான்ஸ் தமது கண்டனத்தையும் கவலையையும் தெரிவித்தார். கடந்த 29ஆம் திகதி அமைச்சரை அவரது கொழும்பு வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேசியபோதே தூதுவர் இதனை வெளியிட்டார். புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் அரசியல் படுகொலைகள் மற்றும் வன்செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் புலிகள் மீது சர்வதேச சமூகம் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமென அமைச்சர் கேட்டுக்கொண்டார். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அரசாங்கம் விட்டுக் கொடுப்போடு இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், புலிகளோ வடக்கு - கிழக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் இடைஞ்சல்களை ஏற்படுத்துவதோடு மாற்றுக் கட்சிகளுக்கும் தொடர்ந்தும் மரண அச்சுறுத்தலை விடுத்து வருகின்றரென்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

## சிவராம் மீது மீண்டும் சீறுகிறது

### ஜனநாயகத் தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு

"கொட்டவவில் எட்டுப் பேர் மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து "தமிழ் நெற்" இணையத்தள ஆசிரியரான டி.சிவராமை விசாரணைக்கு உட்படுத்துமாறு ஜனநாயகத் தமிழ் ஊடகவியலாளர் அமைப்பு பொலிஸ் மா அதிபருக்கு விடுத்த கோரிக்கை, ஊடகவியலாளர்களின் உரிமைகளில் தலையிடும் செயலெனக் கூறுவது முழங்காலுக்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப் போடும் ஒரு முயற்சியாகும்" என்று மேற்படி அமைப்பின் செயற்குழு உறுப்பினரான ஆனந்தரூபன் தெரிவித்தார். "ஊடகவியலாளர்கள் தமது செய்தி மூலத்தை எவருக்கும் வெளியிட வேண்டிய கடப்பாடுடையவர்கள் அல்லர் என்பதையும் அப்படி அவர்களிடம் செய்தி மூலத்தைக் கேட்கும் உரிமை எவருக்கும் இல்லையென்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் பத்திரிகையாளர்களென்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு படுகொலைக் கலாசாரத்துக்குத் தூபமிடுபவர்கள் மீதும் அவற்றுக்கு ஒத்தாசை வழங்கி வக்காலத்து வாங்குபவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். ஜனநாயக வழிக்குத் திரும்பிய ஏழு தமிழ் இளைஞர்களை கொட்டாவவில் மிலேச்சனத் தனமாகச் சுட்டுக் கொன்றுவிட்டு அம் பாறைக்குத் தப்பிச் சென்றவர்கள் பிரபா அணிப் புலிகள்தான் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. அந்தப் பிரபா அணியின் ஊடகப் பேச்சாளர் போலவும் ஊதுகுழல் போலவும் செயற்படுபவர் சிவராம். அது மட்டுமல்ல, பிரபா - கருணா பிளவுக்குப் பின்னர் கருணா விரோதப் போக்கை எடுத்துக்கொண்ட சிவராம், பிரபா அணிப் புலிகளின் எந்தவொரு படுகொலையையும் கண்டித்த வருமல்லர். காலஞ்சென்ற நடேசனைப் போல, பிரபா அணியை ஆதரிக்கவும் அதற்காக எழுதவும் பிரசாரம் செய்யவும் சிவராமுக்கு இருக்கும் உரிமையை நாம் கேள்விக்குறியாக்கவில்லை. படுகொலைகள் நிகழ்ந்து சில மணி நேரத்துக்குள்ளேயே சிவராமுக்குத் தகவல் கிடைத்திருக்கிறதா? அல்லது இந்தப் படுகொலைகள் நிகழப் போவது குறித்து முன்கூட்டியே சிவராம் அறிந்திருந்தாரா? இக் கொலைகளுக்கு அவர் உடந்தையாகவும் ஊக்குவிப்பாளராகவும் இருந்தாரா? இது பற்றிய உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டுமானால் சிவராம் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். கொட்டாவப் படுகொலைகளை, புலிச் சார்பு ஊடகவியலாளரான சிவராம் கண்டிக்க மாட்டாரென்பது எமக்குத் தெரியும். பத்திரிகையாளர் என்பதற்காக சிவராமை விசாரணைக்கு உட்படுத்து என்று நாம் கோரவில்லை. இப் படுகொலைகளோடு ஏதாவது விதத்தில் சிவராம் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பதைக் கண்டறிவதற்காகக் கட்டாயம் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று நாம் மீண்டும் கோருகிறோம். படுகொலைகளுக்குப் பக்கவாத்தியம் வாசிப்போர் யாராக இருந்தாலும் சட்டத்தின்முன் நிறுத்துங்கள் என்பதே எமது கோரிக்கையாகும்" என்றும் ஆனந்தரூபன் கூறினார். கொட்டாவப் படுகொலைகள் குறித்த செய்தி சிவராமின் "தமிழ்நெற்" இணையத்தளம் வெளியிட்ட பின்னரே இது குறித்துப் பொலிஸாருக்கும் அயலவர்களுக்கும் தெரியவந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

வீரகேசரி பத்திரிகையின் முன்னாள் மட்டக்களப்பு நிருபரான நித்தியானந்தன் என்பவர் புலிகளிடம் பயிற்சி பெற்ற ஆயுதப் போராளியென்பதையும் அவர் ஆயுதப் படையினருடனான ஒரு மோதலிலேயே பலியானார் என்பதையும் சுட்டிக் காட்டிய ஆனந்தரூபன், இந்த வகையில் நாம் சிவராமையும் சந்தேகிக்கிறோம் என்றும் கூறினார்.

## வர்த்தகர்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணப் பகுதிப் புலி முக்கியஸ்தர்களுக்கும் திருநெல்வேலிச் சந்தையிலுள்ள வியாபாரிகளுக்குமிடையே கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற வாக்குவாதத்தில் வர்த்தகர்கள் சிலர் தாக்குதலுக்கு இலக்கானார்கள். புலிகள் வர்த்தகர்களிடமிருந்து வரி, கப்பம் அறவிடுவதை எதிர்த்து மகஜரொன்றினைத் தயாரித்து அதில் கையொப்பம் வாங்கும் செய்லில் ஈடுபட்டிருந்தவர்களை ஆபாச வார்த்தைகளால் திட்டிய புலிப் பிரமுகர்கள், மகஜரைப் பறித்துக் கிழித்தெறிந்தனர். 1985ஆம் ஆண்டு ரெலோ இயக்கத்தினர் மீது புலிகள் நடத்திய மனித வேட்டையின்போது நான்கு ரெலோ இயக்கச் சிறுவர்களை உயிரோடு பெற்றோல் ஊற்றி எரித்துக் கொன்ற புலிகளின் அடாவடித்தனத்தை வர்த்தகர்கள் புலிகளுடனான வாக்குவாதத்தின்போது குத்திக் காட்டியமை அவர்களை ஆத்திர மூட்டியிருக்கிறது.

## வைகோவின் கப்சா

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வார்சிங்கை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ சில தினங்களுக்கு முன்னர் புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது, உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள வேண்டாமென்று கோரவில்லையென்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. இதேபோன்று புலி இயக்கம் மீதான தடையை நீக்குமாறும் அவர் கோரிக்கை விடுக்கவில்லையென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. பெங்களூரில் கடந்த 25ஆம் திகதி பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்ற உலகத் தமிழர் பேரவை நடத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல் பிரதியொன்றினையே வைகோ நட்வார்சிங்கிடம் கையளித்தாரெனத் தெரிவிக்கப்படுகிறது. உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்ய வேண்டாமெனக் கோரும் தீர்மானமொன்று அம் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டமை குறிப்பிடத் தக்கது. வைகோ பி.பி.சி. தமிழ்ச் சேவைக்கு அளித்த பேட்டியில், "உத்தேச இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக் கோரினீர்களா?" என்று பேட்டியாளர் கேட்டபோது, "புலிகள் சார்பாக நான் கோரிக்கைகளை முன்வைத்திருப்பேன் என்பது சொல்லியா தெரிய வேண்டும்" என்று மழுப்பிப் பதிலளித்தார் வைகோ.

## சொத்துக்களை முடக்கச் சட்டம்

"அவுஸ்திரேலியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட திட்டங்களுக்கமைய சொத்துக்கள் முடக்கப்பட வேண்டிய பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் புலிகள் இயக்கத்தின் பெயரும் இடம்பெற்றிருப்பதாக அவுஸ்திரேலியாவின் சட்ட மா அதிபரான பிலிப்ஸ் ரட்டொக் எம்.பி. தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1373 ஆவது தீர்மானத்துக்கமைய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் அல்லது அமைப்புகளின் நிதிகள், ஆதனங்கள் மற்றும் பொருளாதார வளங்கள் ஆகியவற்றை உடனடியாகவே முடக்க முடியுமென்றும் அவர் கூறினார்.

## மீண்டும் லண்டன் ரி.பி.சி. ஒலிபரப்பு

லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் ரி.பி.சி. என்றழைக்கப்படும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மீண்டும் அஞ்சல் செய்ய ஆரம்பித்துள்ளது. முன்னர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையூடாக இரவு ஏழு மணி முதல் எட்டு மணி வரை இந் நிகழ்ச்சி ஒலிபரப்புச் செய்யப்பட்டு வந்தது. அண்மைய சில வாரங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்த ஒலிபரப்பு, கடந்த 21ஆம் திகதியிலிருந்து தென்றல் சேவையில் இரவு எட்டு மணி முதல் ஒன்பது மணி வரை ஒலிபரப்பாகி வருகிறது. சந்திப்பு - புலத்திலும் நிலத்திலும் என்ற தலைப்பில் ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியில் முன்னரைப் போல் தமிழ் மக்களின் அரசியல், சமூக வாழ்வோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் விமர்சனங்கள் இப்போது இடம்பெறுவதில்லை. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த நிகழ்ச்சி முன்னர் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்ததென ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்திருந்த போதிலும் உண்மை அதுவல்லவென விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ரி.பி.சி. இலங்கைத் தமிழ் அரசியல் பரப்பில் இடம்பெற்ற, இடம்பெறுகின்ற அராஜகங்கள், அடாவடித்தனங்களைக் கடுமையாக விமர்சித்து வந்ததால் சஞ்சலத்துக்குள்ளான ஆயுதக் குழுவொன்று நோர்வே மூலமாக விடுத்த அழுத்தம் காரணமாக இந்த நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப்பட்டு மாற்றம் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமரர் அமிர்தலிங்கத்தின் பதினைந்தாவது வருடாந்த நினைவு தினத்தையொட்டிய பல விடயதானங்களை ரி.பி.சி. ஒலிபரப்புச் செய்திருந்தது. அமிர்தலிங்கத்தைக் கொன்றவர்கள் புலிகளேயென்று அவரது மனைவி மங்கையர்க்கரசி கூறியதையும், கூட்டணியின் தற்போதைய தலைவர் ஆனந்தசங்கரியின் பேட்டியையும், படுகொலை செய்யப்பட்ட தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோரின் இறுதி அஞ்சலிக் கூட்டம் யாழ். நகரில் நடைபெற்றபோது, அதில் அமிர்தலிங்கம் அவர்கள் ஆற்றிய உரையையும் ரி.பி.சி. ஒலிபரப்புச் செய்தமை குறிப்பிடத் தக்கது. "வழி தவறிய தமிழ் இளைஞர்கள் ஆலாலையும் தர்மரையும் சுட்டுக் கொன்றமை வேதனைக்குரியது. எனக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் அஞ்சி ஓடுபவன் நானல்ல" என்று அமிர் அந்த அஞ்சலிக் கூட்டத்தில் ஆற்றிய உரை புலிகளின் சிந்தனையைத் தட்டிவிட்டிருக்கும் எனினும் ரி.பி.சி.யின் அரசியல் விமர்சனங்கள், நிகழ்ச்சிகள் வழமை போல ஏனைய நாடுகளுக்கு முன்னைய அலைவரிசைகளில் ஒலிபரப்பாகிறது என்பது குறிப்பிடத் தக்கது.

## கைக்குண்டு வீச்சு

வாழைச்சேனையிலுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்தின் மீது பிரபா அணிப் புலிகள் கடந்த மூன்றாம் திகதி அதிகாலை நடத்திய கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் நான்கு பேர் காயமுற்றனர். சந்தனம் கந்தசாமி, மீரா மொஹிதீன் ஹுசேய்ன், கிருஷ்ணசாமி கிருஷ்ணராஜா, ஹை முஹமது சமீம் ஆகிய நால்வருமே காயமுற்றவர்களாவர். கைக்குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளொன்றில் தப்பிச் சென்றுவிட்டனர்.

## தமிழரசுக் கட்சியினருக்கு சவால்

ஜனாதிபதியிடம் எழுத்து மூல உத்தரவாதத்தை எதிர்பார்க்கும் அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு - கிழக்கில் வாழும் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் புலிகள் மேற்கொள்ளும் அநாவசியத் தலையீடுகளை தடுத்து நிறுத்துவார்களா? கப்பம் வசூலிப்பு, பேச்சுச் சுதந்திரமின்மை, தொழில் முயற்சிகளில் தலையீடு போன்ற புலிகளின் செயற்பாடுகளுக்கு முடிவு காண்பார்களா? அரசியல் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற உறுதிப்பாட்டை நிலை நிறுத்துவார்களா? என்று ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

அவசர மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வதற்காக இடைக்கால நிர்வாகம் அவசியமெனப் புலிகள் குரல் எழுப்பத் தொடங்கி சுமார் பதினாறு மாதங்கள் கழிந்து விட்டன. இடைக்கால நிர்வாகத்துக்காகப் புலிகள் தமது யோசனைகளைக் கையளித்து சுமார் பத்து மாதங்கள் பறந்து விட்டன. இந்த இடைக்கால நிர்வாகம் இல்லாமலேயே இவ்வளவு காலமும் வாழ்ந்த மக்கள், போர் இல்லாத சூழலில் இறுதித் தீர்வுகாண பேச்சு நடப்பதையே எதிர்பார்க்கின்றனர். புலிகள் குறுக்கு வழியில் அதிகாரத்தைப் பெறுவதற்காகவும், அதனூடாக மக்களை மேலும் துன்பங்களுக்கு உள்ளாக்கவுமே இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை வலியுறுத்துகின்றனர். புலிகளின் பிரச்சினை வேறு. மக்களின் எதிர்பார்ப்பு வேறு என்ற எமது நிலைப்பாடு இதன் மூலம் மீண்டும் உறுதியாகிறது. புலிகளுடன் அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசுவதற்கு முன்பாக அரசியல் படுகொலைகளுக்கு முடிவு காண்பதும், புலிகளின் அராஜக செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதும் அவசியம். புலிகளிடமிருந்து இந்த உத்தரவாதத்தைப் பெற்று நிலைநாட்ட அகில இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முயற்சி எடுப்பதன் மூலமாகவே யுத்தத்தை நோக்கி வழி நடத்தும் புலிகளின் பாதையிலிருந்து மக்களை விடுவிக்க முடியுமெனவும் அவர் கூறினார்.

## புகார்

பிரசித்திபெற்ற மட்டக்களப்பு, தாந்தாமலை முருகன் ஆலய உற்சவத்தின் போது ஒரே இரவில் 35 சிறுவர்கள் பயிற்சிக்கெனப் பிடித்துச்செல்லப்பட்டமை குறித்து யுனிசெப் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்துப் பெற்றோர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

# முரசம்

## துயிலும் உடன்படிக்கையும் தொடரும் படுகொலைகளும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

கடந்த மாதம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் அதிகபட்ச வன்முறைகளைக் கொண்ட மாதமாகக் கழிந்து போனது. இச் சம்பவங்களால் மட்டுமல்ல, சம்பவங்களின் வகையிலும் உச்சநிலை வன்முறை புலப்படுகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்னர் கடந்த மாதம் ஏழாம் திகதி முதன்முறையாகத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், விவசாய சந்தைப்படுத்தல், இந்து விவகார அமைச்சரும், கல்வி, வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவைக் குறிவைத்தே இந்தத் தற்கொலைக் குண்டுதாரி அனுப்பப்பட்டிருந்தார். எனினும் இலக்குத் தவறிய அக் குண்டு கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் வெடித்து 4 பேரைப் பலி கொண்டது.

தொடர்ந்து கிழக்கில் ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர் ரவீந்திரன் சிரமதானமொன்றைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இவரும் ஒரு ஈ.பி.டி.பி கட்சி உறுப்பினராவார். இவரது படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்துக் கொழும்பில் இவரது பூதவுடலடங்கிய பெட்டியுடன் நோர்வே தூதரகத்தின் முன்னால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஜூலை 13ஆம் திகதி நடைபெற்றது. இதுவே யுத்த நிறுத்தத்தின் பின் இத்தகைய சம்பவங்கள் குறித்து தலைநகர் கொழும்பில் நிகழ்த்தப்பட்ட முதலாவது எதிர்ப்பு நடவடிக்கையுமாகும்.

இதைத் தொடர்ந்து கொழும்பு மாலபே பகுதியிலமைந்திருந்த வீடொன்றில் உறங்கிக்கொண்டிருந்த கருணா அணியைச் சார்ந்தவர்களான எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இப்படித் தொகையான அளவில் படுகொலைகள் நடைபெற்றதும் யுத்த நிறுத்தத்தின் பின் இதுவே முதற் சம்பவம்.

அத்துடன் நிற்கவில்லை. புலனாய்வுத் துறையுடன் சேர்ந்தியங்கிய புளொட் மோகன் எனப்படுபவர் கொழும்பு பம்பலப்பட்டி வீதியொன்றில் பகிரங்கமாகச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது படுகொலைகள் எல்லை மீறிச் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. யுத்த நிறுத்த உடன்படிக்கையும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு ஏற்பாடுகளும் பயனற்றவையாகிப் போயுள்ளன. கண்காணிப்பாளர்கள் என்பவர்கள் ஏளனத்துக்குரியவர்களாக ஆகிவிட்டார்கள். என்ன சம்பவம் நிகழ்ந்தாலும் அவர்கள் என்ன பதில் கூறுவார்களென்பதை இப்போதே எழுதி வைத்துவிட முடியும் என்றாகிப்போயுள்ளது. அவர்கள் இச் சம்பவங்கள் யுத்த நிறுத்த மீறல்கள் என்று இன்னும் தெரியவில்லை என்றே எடுத்ததற்கும் கூறுகிறார்கள்.

அவர்களைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்த மீறலென்பது ஒன்றில் புலிகளின் தரப்புக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மீறலாக இருக்க வேண்டும். ஏனைய தரப்புகள் மீதோ, பொதுமக்கள் மீதோ மேற்கொள்ளப்படும் மீறல்களை இவர்கள் யுத்த நிறுத்த மீறல்களாகக் கொள்ளத் தயாராயில்லை. ஆனால், யுத்த நிறுத்த உடன்படிக்கை அப்படிச் சொல்லவில்லை. இருப்பினும் இவர்கள் அப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். இதனால் ஏற்பட்டு வரும் பாரதூரமான நிலைமைக்கு நிச்சயம் இவர்களும் பதில் சொல்ல வேண்டியவர்களே!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

நரன்

# ஜனாதிபதியின் சமாதான அறிவிப்பு

# தேக்க நிலை மாறுமா?

ஜனாதிபதி அண்மையில் மீண்டும் பேச்சுவார்த்தைக்கான அழைப்பினை விடுத்திருந்தார். அதில் தாம் இடைக்கால நிர்வாக சபை குறித்தும் பேசத் தயார் என்று கூறியிருந்தார்.

இந்த அறிவித்தல் தொடர்பாகப் புலிகள் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால், தென்னிலங்கையில் இந்த அறிவித்தலையடுத்துப் புதிய பல கருத்துக்கள் அரசியல் வட்டாரங்களில் வெளிவரத் தொடங்கியிருந்தன.

புலிகளின் ஐ.எஸ்.ஜி.ஏ. எனப்படும் இடைக்கால நிர்வாக அதிகார சபை குறித்து ஜே.வி.பி. தமது நிலைப்பாட்டினைத் தெரிவித்திருந்தது. புலிகளின் வரைபிலுள்ள அதிகார சபையானது தனி நாடொன்றுக்கான ஏற்பாடேயெனவும் அதனால் அந்த வரைபை அங்கீகரிக்குமுகமான பேச்சுவார்த்தைகள் எதையும் தாம் ஏற்கப்போவதில்லையெனவும், பேச்சுவார்த்தைகள் எதையும் தாம் ஏற்கப் போவதில்லையெனவும், அவ்வாறான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் மேற்கொண்டால் தாம் அரசாங்கத்திலிருந்து விலகிக்கொள்வர் எனவும் கூறியிருந்தது.

ஆனால், ஜே.வி.பி. ஐ.எஸ்.ஜி.ஏ.ஐ எதிர்க்கின்றபோதிலும், புலிகளுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்தக் கூடாதெனக் கூறவில்லை. அது புலிகளை அனைத்துத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், முதன்மையான தரப்பாக ஏற்று அவர்களுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்துவது தவிர்க்க இயலாததெனக் கூறியிருந்தது. இந்த வகையில் ஜே.வி.பி.யின் கூற்றானது புலிகள் முன்வைத்துள்ள ஐ.எஸ்.ஜி.ஏ. வரைபை அங்கீகரிக்கும் பேச்சுவார்த்தைகளை மட்டுமே நிராகரிப்பதாகத் தொனிக்கிறதேயன்றி எந்தவொரு பேச்சுவார்த்தைகளையுமல்ல.

இதேவேளை அரசாங்கத்துக்கு எதிராகச் செயற்பட்டு வரும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியோ, அரசாங்கம் புலிகளின் ஐ.எஸ்.ஜி.ஏ. வரைபையிட்டுப் பேச்சுவார்த்தை நடத்தினால் தாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதாகத் தெரிவிக்கின்றது.

அதாவது, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சியான ஜே.வி.பி. எதிர்க்க, எதிர்க்கட்சியான ஐ.தே.க. ஆதரவளிக்க முன்வருகின்றது. உண்மையில் எதிர்க்கட்சி ஆதரவளித்தால், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தாராளமாகக் கிடைக்கும். முழு அரசியல் யாப்பு மாற்றத்தையே செய்து இனப் பிரச்சினைக்கு முற்றுமுழுதான தீர்வு காண முடியும். இனப் பிரச்சினைக்கு மட்டுமல்ல, ஏனைய பிரச்சினைகளுக்கும்தான். ஆனால் இப்போது ஐ.தே.க. வழங்கத் தயாராகவுள்ள ஆதரவு எத்தகையது? எதுவரைக்கும்? எந்த நோக்கத்தைக் கொண்டது? என்ற கேள்விகள் உள்ளன. அத்துடன் இந்த வார்த்தை எவ்வளவு தூரம் உண்மை என்பதும் கேள்விக்கிடமானது.

உண்மையில் புலிகள் முன்வைத்துள்ள இந்த ஐ.எஸ்.ஜி.ஏ. இடைக்கால அதிகார சபைக்கான வரைபு ஐ.தே.க. ஆட்சிக்காலத்தில் ஐ.தே.க. அரசாங்கத்திடமே முன்வைக்கப்பட்டது. அதுவும், புலிகளுடன் ஐ.தே.க. அரசாங்கம் நடத்திவந்த பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முறிவையடுத்து, புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபைக்கான கோரிக்கைக்கு, ஐ.தே.க. அரசாங்கம் சமர்ப்பித்த ஒன்றன்பின் ஒன்றான இரு வரைபுகளையும் புலிகள் அடுத்தடுத்து நிராகரித்ததையடுத்து, புலிகளால் தயாரிக்கப்பட்ட இவ் வரைபு முன்வைக்கப்பட்டது. அதாவது, ஐ.தே.க.வினால் புலிகளின் எதிர்பார்ப்பை ஈடுசெய்யக் கூடிய வரைபொன்றை வழங்க முடியாது போயுள்ளதென்பது முதலில் தெளிவாகிறது. அவ்வாறு வழங்க முடியாது போனது ஏன் என்ற காரணமும் ஐ.தே.க.வுக்கு நன்கு தெரியும். அதாவது தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றாமல் இவ்வாறான ஒரு இடைக்கால நிர்வாகத்தைச் சட்டப்படி வழங்க முடியாது. அதனால் சட்ட அதிகாரங்களுக்குள் தயாரிக்கப்பட்ட ஐ.தே.க.வின் வரைபுகளால் புலிகளின் எதிர்பார்ப்புக்கு ஈடுகட்ட முடியவில்லை. அதனால்தான் திரும்பத் திரும்பத் தயாரித்து அனுப்பப்பட்டும் அவை புலிகளால் எடுத்த எடுப்பிலேயே நிராகரிக்கப்பட்டன. எனவே, தற்போதைய அரசியல் யாப்பினுள் இன்றைய அரசாங்கத்தாலும் புலிகளின் எதிர்ப்புக்களை ஈடுகட்டுகின்ற ஒரு இடைக்கால நிர்வாகத்தை வழங்க முடியாதென்பது ஐ.தே.க.வுக்குத் தெரியும். இதேவேளை கடந்த ஐ.தே.க. அரசாங்கத்துக்குப் புலிகள் முன்வைத்த ஐ.எஸ்.ஜி.ஏ. இடைக்கால அதிகார சபை வரைபையிட்டு அவ் அரசாங்கத்தின் கருத்து எவ்வாறிருந்தது? அந்த அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அவ்வரைபானது தமது வரைபிலிருந்து அடிப்படையிலேயே வேறுபட்டிருப்பதாகக் கூறினார். அந்த அடிப்படையிலேயே வேறுபட்ட வேறுபாடு என்ன? ஆம்! அது இலங்கையின் தற்போதைய யாப்புக்கு வெளியே இருந்தது.

இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. ஏனெனில், புலிகளே தற்போதைய யாப்பிற்கு உட்பட்டு தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு தேட வேண்டாமெனத் தெரிவித்திருந்தனர். தாம் இந்த யாப்புக்குக் கட்டுப்பட்டவர்களோ, கடமைப்பட்டவர்களோ இல்லையென்பதே அவர்களின் நிலைப்பாடு. ஆனால், பதவியில் அமரும் அரசாங்கங்கள் இந்த யாப்புக்குக் கட்டுப்பட்டுத்தான் செயலாற்ற வேண்டும். அது அரசாங்கத்தின் தலையெழுத்து, தங்களுடையதல்ல என்பது புலிகளின் பார்வை. அரசாங்கத்தின் யாப்புகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்சென்று தாம் தீர்வை யாசிக்கத் தேவையில்லை. தீர்வு காண வேண்டுமென்ற தேவை அரசாங்கத்துக்கிருந்தால் அது தமது யாப்பையும் கட்டுப்பாடுகளையும் மாற்றிக்கொண்டு எமது எதிர்பார்ப்புகளை வழங்கக் கூடிய தன்மை கொண்டதாக எம்மிடம் வரட்டும் என்பதே புலிகளின் கருத்தாக இருக்கிறது.

எனவேதான் புலிகள் தாம் தயாரித்த ஐ.எஸ்.ஜி.ஏ. இடைக்கால நிர்வாக வரைபில் இலங்கையின் யாப்புக் குறித்தோ, இலங்கையின் இறைமை மீறப்படுகிறதா என்பது குறித்தோ, ஏன் அண்டை நாடான இந்தியாவின் கரிசனை குறித்தோ அக்கறை செலுத்தவில்லை. அவர்கள் வேறு எதைப் பற்றியும் கவலைப்படாமல் தமக்கு எது தேவையென்று கருதினார்களோ அதை அப்படியே முன்வைத்தார்கள்.

அதனால் புலிகளின் ஐ.எஸ்.ஜி.ஏ. இடைக்கால நிர்வாக வரைபில் கூறப்பட்ட பல விடயங்கள் பெரும் சர்ச்சைக்குரியனவாயின. அவை இலங்கை அரசியல் வட்டாரங்களில் மட்டுமன்றி, சர்வதேச வட்டாரங்களிலும், குறிப்பாக இந்தியா, ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றிலும் சுட்டிக்காட்டப்பட்டன.

ஐரோப்பிய யூனியன் சார்பில் கருத்து வெளியிட்ட தென்னாசிய விவகாரங்களுக்கான அதன் அமைச்சர் கிறிஸ் பற்றன், இவ் வரைபு ஒஸ்லோ உடன்பாடுகளுக்கு மாறாக அமைந்துள்ளதாகவும், இவ் வரைபில் புலிகள் தமக்கான கடற்படை மற்றும் கடல்வள உரிமைகளைக் கோரியிருந்த, வகையிலான சமஸ்டி அமைப்பொன்றை, தான் உலகில் நிலவும் எந்தச் சமஷ்டி அமைப்புகளிலும் காணவில்லையென்றும் கருத்துக் கூறியிருந்தார். அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜும், இவ் வரைபு ஒஸ்லோ உடன்பாடுகளுக்கு அப்பால் சென்றுள்ளதாகக் கருத்துக் கூறியிருந்தார். அப்போதைய இந்திய அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கன்வர் சீ பால், பாக்கு நீரிணையில் மூன்றாவது கடற்படையொன்று செயற்படுவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென்று கூறியிருந்தார்.

இந் நிலையில் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்களின் எதிரொலிப்புகள் எவ்வாறமைந்திருக்குமென்பதை எவரும் அனுமானிக்க முடியும். அப்போது எதிர்க்கட்சியாக இருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி இவ் வரைபை நிராகரித்தது. சிஹல உறுமய, ஜே.வி.பி. ஆகியவையும் நிராகரித்தன. ஆளும் கட்சியாக இருந்த ஐ.தே.மு.வின் கூட்டணியில் அங்கம் வகித்த முஸ்லிம் காங்கிரஸ் இதில் முஸ்லிம்களின் அபிலாசைகள் பிரதிபலிக்கப்படவில்லையென்றும், முஸ்லிம்களின் பிரதிநிதித்துவம் திருப்தியளிக்கும் வகையில் முன்மொழியப்படவில்லையென்றும் குறை கூறியது. காங்கிரஸ் தமது சார்பிலான வரைபொன்றை முன்வைக்கப்போவதாகவும் கூறியது.

அப்போதைய ஆளும் கட்சியான ஐ.தே.க. புலிகளின் ஐ.எஸ்.ஜீ.ஏ. வரைபில் கூறப்பட்டுள்ளவற்றை வழங்க வேண்டுமானால் கூட, அதற்கு அரசியல் யாப்பை மாற்றியமைத்திருக்க வேண்டும். தற்போதைய யாப்பின்படி இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதானால் தற்போதைய மாகாண சபைக்கான ஒரு இடைக்கால நிர்வாக சபையென்ற வகையிலேயே வழங்க முடியும்.

ஆனால் புலிகளோ, மாகாண சபைகளை ஒதுக்கிவிட்டு பிறிதான அதிகாரமிக்க நிர்வாக அமைப்பொன்றையே இவ் வரைபில் கோருகிறார்கள். இவ் வரைபை இங்கு முழுமையாக ஆராய முடியாவிடினும் அதில் சர்ச்சைக்குரியதாகவுள்ள முக்கிய விபரங்களைக் குறிப்பிடலாம்.

புலிகளின் ஐ.எஸ்.ஜி.ஏ. வரைபில் கோரப்பட்டுள்ள வடக்கு-கிழக்குப் பிரதேசத்துக்கான தனியான தேர்தல் ஆணையாளர், தனியான கணக்காளர் நாயகம் என்பவற்றை தற்போதைய அரசியல் யாப்பின் பிரகாரம் வழங்க முடியாது. மேலும் கடற்பரப்புக்கும் கடல் வளங்களுக்கும் தமது கட்டுப்பாட்டிலான கடற்படையொன்றிற்கும் புலிகள் கோரியுள்ள உரிமை இலங்கையின் இறைமையைக் கேள்விக்குள்ளாக்கிவிடுமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை இந்தியாவும் ஆட்சேபிக்கும் நிலைமை உள்ளது. இதை விட, நில உரிமையை முழுமையாகக் கோருகின்ற அதேநேரம், நிலத்தை வெளிநாடுகளுக்கு விற்க அல்லது குத்தகைக்கு விடவும் இங்கு உரிமை கோரப்பட்டுள்ளது. அதுபோல், வெளிநாட்டுக் கடன்களை நேரடியாகப் பெற, வெளிநாட்டு வர்த்தகத்தில் நேரடியாக ஈடுபட, வடக்கு - கிழக்கில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள வெளிநாட்டு முதலீடுகள் உட்பட அனைத்திலும் ஆளுமை செலுத்தவும் உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் அதிகாரம் கோரப்பட்டுள்ளது.

இவை யாவும் இலங்கையின் தற்போதைய யாப்புக்குள் அடங்காதவை. அத்துடன் இவற்றில் சில தனி நாடொன்றை நோக்கிய அம்சங்களெனத் தென்னிலங்கையில் சந்தேகிக்கப்படுபவை.

எனவே, ஐ.தே.க். தம்மால் எதுவும் கூற முடியாது போன அதே ஐ.எஸ்.ஜி.ஏ. வரைபு குறித்து தற்போதைய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துமாயின் தாம் ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளதானது, உண்மையில் இத் தீர்வை வழங்குவதை நோக்கமாகக் கொண்டதா அல்லது இதனடிப்படையில் இடைக்கால நிர்வாகத்தை வழங்க முடியாமல் திண்டாடும் நிலைக்கு இவ்வரசாங்கத்தை இட்டுச்செல்வதற்கா என்பது அனுமானிக்கக் கூடியது. அத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஆதரவளிப்பதென்பது அதன் வாயிலாக ஈட்டப்படும் தீர்வை ஏற்றுக் கொள்ளத் தயாரென்பதாக அர்த்தப்படாது. ஆதலால் எத் தருணத்திலும் அது தனது ஆதரவைக் கைவிடும் காரணமொன்றைக் கூறுவது சிரமமல்ல.

மேலும், இதில் ஐ.தே.க.வின் குறி அரசாங்கத்திலிருந்து ஜே.வி.பி.யை விலக வைப்பதே! தற்போது நடந்து முடிந்துள்ள இரு தேர்தல்களிலும் ஐ.தே.க.வை மண் கவ்வ வைத்தது. பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டின் பலமே. எனவே, பேச்சுவார்த்தை குறித்த விடயத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுப்பதாகப் பாசாங்கு செய்து, ஜே.வி.பி.யை



மேலும் கடுமையான நிலைப்பாட்டுக்குத் தள்ளி அரசாங்கத்தை இக்கட்டுக்குள்ளாக்கி அதன் கூட்டினுள் முறிவை ஏற்படுத்துவதே ஐ.தே.க.வின் தந்திரோபாயமாக உள்ளது.


ஆனால், இவ்வளவு வெளிப்படையான இந்தத் தந்திரோபாயத்தை ஆளும் கட்சியினர் இலகுவாகவே கிரகித்துக்கொள்வர். ஆனாலும் இது ஐ.தே.கவுக்கு மக்கள் மத்தியில் தன்னை சமாதானப் பிரியராக காட்டிக் கொள்ளவும் தேசிய நலனில் சம்பந்தப்பட்ட விடயத்தில் கட்சி பேதம் பார்க்காததாகவும் காட்டிக்கொள்ள உதவலாம்.

இதேவேளை இது விடயத்தில் ஹெல உறுமய அரசாங்கத்துக்கு உதவ முன்வந்துள்ளது மற்றொரு விடயம். பாராளுமன்றத்தில் தமிழ்க் கட்சிப் பிரதிநிதி கஜேந்திரன் ஆற்றிய உரையையடுத்து அது இம் முடிவை மேற்கொண்டது. கஜேந்திரனின் இக் கன்னியுரையை ஹன்சாட்டிலிருந்து நீக்கும்படி பிரதி சபாநாயகர் உத்தரவிட்டாரென்பது குறிப்பிடத் தக்கது. ஆக, இப்போதுள்ள கேள்வி, ஜனாதிபதியின் இப் புதிய அழைப்புக்குப் பிறகாவது பேச்சுவார்த்தைக்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பதே. ஆனால், இதில் ஐ.தே.க. தெரிவிக்கும் ஆதரவின் தன்மை, ஜே.வி.பி.யின் நிலைப்பாடு என்பவற்றுடன் புலிகள் தரப்பில் உள்ள நிலைமையும் சாதகமானதாக இல்லை. புலிகள் ஜனாதிபதியின் அழைப்பைப் பெரிதாகப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மென்மேலும் அரசாங்கத்தில் அதிருப்தி தெரிவித்துச் செல்லும் போக்கையே அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள். தமது ஐ.எஸ்.ஜி.ஏ.ஐத் தவிர மாற்று வழி எதையும் அவர்கள் பரிசீலிக்கத் தயாராக இல்லை. அத்துடன் தற்போது கருணா விவகாரமே அவர்களுக்கு முதன்மையான விடயமாக மாறியுள்ளது. அதற்கு முற்றுப்புள்ளி காணும் வரை யுத்த நிறுத்த மீறல்கள் பற்றிக் கூட அவர்கள் கரிசனை கொள்ளப்போவதில்லை என்று புலப்படுகிறது.

இந் நிலையில் அண்மைய காலப் பகுதியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் எதுவும் புலப்படவில்லை. ●

**2002** பெப்ரவரி 22ஆம் திகதி ஐ.தே. முன்னணி அரசுக்கும் புலிகளுக்கும் இடையே கைச்சாத்தான போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம், இருபது ஆண்டுகளாக யுத்தத்தால் மயானமாகிக்கொண்டிருந்த இலங்கையில் சமாதானம் பிறக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. கூடவே காலப்போக்கில் மீண்டுமொரு யுத்தக் கிடங்கிலேயே கொண்டுபோய் விடும் எனவும் பலர் அவநம்பிக்கை கொண்டுமிருந்தனர். இப்படி இரு வேறு கோணங்களில் நினைக்குமளவுக்குக் காரணங்களும் இல்லாமலில்லை. மறைந்த பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது அவருடன் சமரசப் பேச்சுக்கு இணங்கிப் போவதைப் போல் காட்டிக்கொண்டு இந்திய அமைதி காக்கும் படையைத் திருப்பி அனுப்பவும், புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அமைப்புகளைக் கொன்று குவிக்கவும் அதை வாய்ப்பாகப் பயன்படுத்தினர். பின்னர், தற்போதைய ஜனாதிபதியுடன் சமரசப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் நினைத்த அளவில் செயற்பட முடியாததால் சமரசப் பேச்சு முறியடிக்கப்பட்டதும் வரலாறு.

# படுகொலைகளை அனுமதிக்கும் யுத்த நிறுத்தம்!



கடந்த 31.07.2004 பம்பலப்பிட்டியில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான புளொட் மோகன்

தற்போது நடைமுறையிலிருக்கும் போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வரலாற்றில் ஒரு தடவையும் இல்லாதளவு புலிகளுக்கு வாய்ப்பைக் கொடுத்துள்ளது. சக்தி வாய்ந்த வானொலிக் கருவியை இறக்குமதி செய்யவும், விமானப் பாகங்களைக் கொண்டுவரவும், ஆயுதங்களைக் கொண்டு வரவும், வெளிநாடுகளுக்குச் சென்று நிதி கையாளுகைகளை நேரடியாக நெறிப்படுத்தவும் இது உதவியுள்ளது. தொடர்ந்தும் உதவி வருகிறது.

இவை எல்லாவற்றையும் விட மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும், தம்மை நேரடியாக விமர்சிப்பவர்களையும், இல்லாதொழிக்கவும் கிடைத்த வாய்ப்புத்தான் மகா பெரியது.

இந்த இல்லாதொழிப்பு நடவடிக்கை எதிர்பார்த்ததை விடவும் மிகப் புத்திசாலித்தனமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தரப்பாரையும் கொலை செய்வதற்கும் ஒவ்வொரு புதிய அமைப்பு உருவாக்கப்படுகிறது. இல்லாவிட்டால் இனந்தெரியாத நபர் என உருமறைப்பு செய்யப்படுகிறது. இது பற்றித் தமிழ்க் கட்சி ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூறும்போது, "யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது புலிகளின் நடமாட்டத்தைக் கிரகித்து நடந்துகொள்ள முடிந்தது. இப்போதோ புலிகள் மிக அண்மித்து தங்கள் கொலைத் திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள். யுத்த நிறுத்தமே படுகொலை அதிகரிக்க வாய்ப்பாக உள்ளது" எனத் தெரிவித்தார்.

படுகொலையான ஒரு மாற்றுக் கருத்துக் கொண்டவரின் மனைவி ஒருவரிடம் பேசியபோது அவர் கூறிய விடயம் வியப்பானது.

*"எனது கணவர் நல்லவர். இயக்கங்களுடைய அராஜகத்தை வெறுத்தார். தனக்குச் சரியென்று பட்டதைத் துணிந்து செய்தார். அவரிடம் துவக்கு இருந்த காலகட்டத்தில் புலிகள் அவரின் கண்ணில் படவே பயந்தனர். இந்த யுத்த நிறுத்த காலத்தில் எனது கணவர் நிராயுதபாணியானார். அதைப் பயன்படுத்திக்கொண்டு புலிகள் அவரைச் சுட்டுவிட்டு ஓடியதை எனது கண்களால் கண்டேன்"* என்றார்.

புலிகள் இயக்கத்திலிருந்து கருணா பிரிந்து சென்ற பின்னர் சுமுக வாழ்வுக்குத் திரும்பிய இளைஞர் ஒருவரின் தாயார் கூறும்போது கண்கள் பனித்தன.

*"தம்பி! ராசா! என்ர மகன் நல்லாப் படிச்சவன். அவன் விரும்பிப் போகயில்லை. அவனைப் பிடிச்சுக்கொண்டுதான் போனாங்கள். பின்னர் அவனும் அவையளோடை இருந்திட்டான். கருணா அம்மான் விலத்தின பிறகு என்ர பிள்ளையும் வீட்ட வந்தவன். நான் மண்டாடின கடவுள் என்ர வேண்டுதலைக் கைவிடயில்லை. என்ர பிள்ளையைத் திருப்பித் தந்திட்டான் எண்டு சந்தோசப்பட்டேன். நாசமாப் போனவன்கள் திரும்பவும் பிடிச்சிட்டுப் போனாங்கள். கேள்விப்பட்டு இரவாயிற்றுதே காலையில போய் கதைச்சு எடுத்துப்போடுவன் எண்டுதான் இருந்தனான். சுட்டுப் போட்டாங்கள் எண்டு செய்தி வந்தது. துரோகி எண்டதால சுட்டிச்சினமாம். என்ர பிள்ளை யாருக்குத் தம்பி துரோகம் செய்தவன்? இந்த அநியாயத்தைக் கேக்க ஒருத்தரும் இல்லயா தம்பி ?"* என்று அழுதபோது யுத்த நிறுத்த ஒப்பந்தம் எப்படித் தன்னுடைய வேலையைக் காட்டுகிறது என்று தெரிந்துகொள்ள முடியும். மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் சுடப்படும்போது "சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் இதைச் செய்கிறார்கள். படுகொலைகளுக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை" என்று முற்றாக நிராகரிக்கும் புலிகள், அண்மைக் காலமாகப் புலி உறுப்பினர்கள் சுடப்பட்டபோது, அதைக் கருணா அணியினர் இராணுவத்தின் ஆதரவுடன் செய்வதாக அப்பட்டமாகக் கூறினர்.

**ஒருவர் படுகொலை செய்யப்படும்போது, யார் கொலை செய்யப்பட்டார், யாரால் கொலை செய்யப்பட்டார் என்பதற்கப்பால் - நடந்துள்ள படுகொலையானது சமாதான முயற்சிகளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தப்போவதில்லை எனவும் யுத்த நிறுத்தத்தைப் பாதிக்காது எனவும் பொறுப்புவாய்ந்த வட்டாரங்கள் கூறிவிடுகின்றன.**

தமக்கு எதிர்த் தரப்பு மீது சந்தேகமெனக் குற்றம் சுமத்தும் புலிகள் ஏனைய படுகொலைகளின் போது படுகொலையானவருக்கு புலிகளே நேரடி அச்சுறுத்தல் சக்தியாக இருந்துள்ளனர் என்பதை மறந்து அதை முற்றாக நிராகரிப்பதை எந்த வகையில் நியாயமாகப் பார்க்க முடியும்.

ஒரு வாதத்துக்கு புலிகளின் நிராகரிப்புகளை ஏற்றுக்கொண்டாலும் நடைபெறும் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களை இதுவரை ஏன் எவராலும் இனங்காட்ட முடியவில்லை. அரச தரப்பு, கொலையாளிகளைக் கண்டுபிடிப்பதில் கவனயீனமாக நடந்து கொள்கின்றன என வைத்துக்கொண்டாலும் காற்றுப்புக முடியாத இடத்திலும் புலிகள் புகுவார்கள் என்று கூறும் புலிகளால் ஏன் கொலையாளிகளை இனங்காண முடியவில்லை.

இவ்வாறான படுகொலைகளை அனுமதிக்கும் கலாசாரம் இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சரியாக அவதானித்திருந்தால் புரிந்துகொள்வது எளிது. ஒருவர் படுகொலை செய்யப்படும்போது, யார் கொலை செய்யப்பட்டார், யாரால் கொலை செய்யப்பட்டார் என்பதற்கப்பால் - நடந்துள்ள படுகொலையானது சமாதான முயற்சிகளுக்கு எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தப்போவதில்லை எனவும் யுத்த நிறுத்தத்தைப் பாதிக்காது எனவும் பொறுப்புவாய்ந்த வட்டாரங்கள் கூறிவிடுகின்றன.

பொறுப்புவாய்ந்த வட்டாரங்கள் எனும்போது அரசு, புலிகள், போர் நிறுத்த கண்காணிப்புக் குழு என்பவையேயாகும். அரச தரப்பு இப்படிக் கூறுவதற்குக் காரணம் படுகொலை சம்பவமானது யுத்த நிறுத்தத்துக்குப் பாதிப்பானது. இது சமாதான முயற்சிகளைப் பின் தள்ளும் எனத் தெரிவித்தால் சர்வதேச நாடுகள் நம்பிக்கை இழந்து உதவி வழங்கல்களை முடக்கும் என்ற பயம். தவிர, புலிகள் கோபமடைந்து யுத்தத்தை ஆரம்பித்தால் அரசியல் வாழ்வு பாதிக்கப்படும் என்பதும் ஒரு காரணம். இதனாலேயே பூசி மெழுகி அறிக்கை விடுவது மட்டுமல்லாமல், திராணியற்றும் போயுள்ளது.

கண்காணிப்புக்குழுவும், நோர்வேயும் மேற்படி படுகொலைகளைக் கண்டித்தால் புலிகளுடன் பேச்சு நடத்த முடியாமல் போகும். ஒரு தரப்பு மீது குற்றம் சுமத்தும்போது மறுதரப்போடு பக்கம் சார்ந்து போனதாகக் கருதப்படும் என்பது போன்ற பயம்.


சர்வதேச நாடுகளின் கண்டனங்களை மதித்து நடக்க வேண்டிய நிலையிலிருக்கும் அரச தரப்பை விடவும் தன்னிச்சையாகச் செயல்படும் புலிகளை இணக்கப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டியதே இவ்விரு அமைப்புகளும் உள்ள பாரிய பொறுப்பு. இப்படி அவரவர் தமது இருப்பை 'சுதாகரித்துக்கொள்ள' எடுத்துக்கொண்ட முயற்சியே படுகொலைகள் தொடர வாய்ப்பாக அமைகிறது.

இவர்கள் ஏன் கண்டுகொள்கிறார்களில்லை; குற்றவாளியை அம்பலப்படுத்துகிறார்களில்லை? இவர்கள் சரியாக நடந்து கொள்வதாக இருந்தால் மீண்டும் யுத்தம் வெடிக்கும்? பரவாயில்லையா? என்று யாரோ யோசிப்பது புரிகிறது. மீண்டும் ஒரு யுத்தம் வரவேண்டுமென்பதல்ல எமது நோக்கம். யுத்த நிறுத்தமே நிழல்யுத்தம் ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறதே! இதற்கு என்ன முடிவு என்பதுதான் இங்கே கேள்வி.

யுத்த நிறுத்த காலமானது அவ்வப்போது படுகொலைகள் புரிய வாய்ப்பளிக்கிறதா அல்லது படுகொலைகளை அனுமதிப்பதனூடாகவே யுத்த நிறுத்தத்தைப் பாதுகாக்க முடியும் என வரைவிலக்கணம் கொண்டுள்ளதா? மக்களின் இந்தக் குழப்பமான - ஆனால் நியாயம் செறிந்த - கேள்விக்கு யார் பொறுப்பு? வாய்ந்த பதில் தர முன் வருவார்கள்?

அலசுவது
**மதியுகி -**

# அதிரடி அய்யாத்துரை



**நாட்டு** நிலைமை மோசமாகிப் படுமோசமாகிப் படு.... படு... எண்டாகிக் கொண்டிருக்குது. விலைகள் உயருது. கொலைகள் மலியுது. பேப்பர்களுக்கு தினந்தினம் ஒரு திறில் செய்திக்குப் பஞ்சமில்லாமல் கிடக்குது. சில செய்தி வெப்தளங்கள், கொலை நடந்தது வெளியில தெரிய முன்னரே செய்தி வெளியிட்டு அசர வைக்குது. கொலைச் செய்திய வெளியிட்ட கையோட கொலையுண்டவர் கொல்லப்பட வேண்டியவர்தான் எண்டு சொல்லாமல் சொல்லுற, - ஏன், சொல்லிச் சொல்லுற - கட்டுரைகள் கூட ரெடிமேடாகத் தயாரிக்கப் பட்டிருந்து நிரல் நிரலா வெளியிடப்படுகுது. முந்தி 'நியூ டெல்லி' எண்டொரு படம் வந்தது. அதில, குறிப்பிட்ட ஒரு பத்திரிகையில கொலை நடந்திருக்கிறதா செய்தி வரும். அதப் பாத்துத்தான் மற்றவைக்கு இப்பிடி ஒரு விஷயம் நடந்திருக்கெண்டே தெரிய வரும். கடைசியில பாத்தால் அது அந்தக் கொலையாளியின்ர பத்திரிகை. இந்த வெப்சைட்டிலயும் கொலைக்கு முந்திச் செய்தி வாறதப் பாக்க ஆச்சரியமாத்தான் கிடக்கு. என்ன மாய்மாலமோ தெரியேல்லை.

**புளொட்** மோகன் படுகொலைச் செய்தியப் பாத்தியளோ? நட்ட நடு ரோட்டில சுட்டுக் கொலை! சமாதான உடன்படிக்கை ஒண்டு இருக்கிறதாவே யாரும் மதிக்கத் தயாரில்லை. கொலையுண்டவர் முன்னாள் புளொட் உறுப்பினர். கொல்லப் பட்டவரைச் சமூக விரோதியெண்டு குற்றஞ் சாட்டிப் பேட்டியளிச்ச இராணுவ ஆய்வாளரும் முன்னாள் புளொட் முக்கியஸ்தர். என்னே தோழமை! பாம்பின் கால் பாம்பறியுமெல்லோ! எனக்கெண்டால் இப்பத்தய சமாதான சூத்திரம் புரியவே புரியேல்லையுங்கோ. இப்ப கொலை பிழையா? கொல்லப்படுகிறவை பிழையா? எங்கட சமாதான உடன்படிக்கையை என்னெண்டு சொல்ல?

**தமிழீழப்** போராட்டங்களில மாணவர்கள் கலந்துகொள்ளுறதத் தடுக்கச் சொல்லி இராணுவத் தரப்பு முறையிட்டதுக்கு எதிரா மாணவரிட்டக் கையெழுத்து வேட்டை நடத்தப் போறதாச் செய்தியறிஞ்சன். அது சரி, நம்ம மாணவர் தலைவரே பாராளுமன்றத்துக்கு வந்து சபை நடுவில சபாநாயகருக்கு முன்னால, பிரிவினைக்கு எதிராச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கையொப்பம் போட்டுக் குடுத்துப் போட்டு, இப்ப மாணவர்களிட்டக் கையொப்பம் வாங்கிறதில என்ன பிரயோசனம்!? ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லையடா!" எண்டிறது இதைத்தானோ!

**எதிர்க்** கட்சிக் கூட்டக் கட்டி அரசாங்கத்தைக் கவுக்கலாமெண்டு ஐ.தே.க.காறர் கண்ட கனவைத் தவிடு பொடியாக்கி வைச்சவை எங்கட தமிழ்க் கூட்டார்தானுங்கோ. பாராளுமன்ற அமளி துமளியில அடிபட்டு எதிர்க்கட்சிப் பக்கம் ஒதுங்கின ஹெல உறுமயக்காறரை "சட்டி சுட்டதடா கை விட்டதடா" எண்டு தொப்பெண்டு தவறவிடப் பண்ணினது எங்கட தமிழ்க் கூட்டுக் கஜேந்திரனாற்ர கன்னியுரைதான். அது கன்னியுரையா? 'கண்ணி' வெடியா? எண்டு சுருண்டுபோய் உருண்டே வந்து ஆளுங்கட்சியின்ர காலுக்க சேந்திருக்கினம் ஹெல உறுமயக்காறர். தாங்கள் ஆளுங்கட்சிய ஆதரிக்கத் தயார். ஆனால் அவைதான் தங்கட ஆதரவக் கோருகினமில்லையெண்டு ஆத்தாக் கட்ட அறிக்கையும் விட்டிருக்கினம். இதுக்குப் பிறகும், அரசைக் கவுக்கிற முயற்சி பலிக்காதெண்டு கண்ட ஐ.தே.க.காறர் இனி ஜனாதிபதித் தேர்தலில குறிவைக்கப் போறதாச் சொல்லியிருக்கினம் மண் குதிரைய நம்பி ஆத்தில கால் வைக்கப் பாத்தால் ஆபத்துத்தான்!

**களுத்துறைச்** சிறைச்சாலைத் தமிழ் அரசியல் கைதிகளின்ர சாப்பாட்டில விஷம் வைச்சுக் கொல்ல முயற்சி நடந்திருக்கு. தமிழ்க் கைதிகளுக்குச் சிறையிலயும் கொலை மிரட்டலாத்தான் கிடக்கு. அண்டைக்கு 83இல குட்டிமணி, தங்கதுரை முதல் 53 கைதிகள் கொலையுண்டதும் இண்டைக்கு மட்டக்களப்புச் சிறையில படுகொலை, களுத்துறையில விஷக் கலப்பு எண்டு சம்பவங்கள் நடக்கிறதும் கைதிகளுக்குச் சிறைக்கூடத்திலயும் பாதுகாப்பு இல்லையெண்டதத்தான் காட்டுது. அதில வித்தியாசமென்னவெண்டால், அண்டைக்குத் தமிழ்க் கைதிகளுக்குச் சிங்களவரால ஆபத்து. இண்டைக்கோ தமிழருக்குத் தமிழராலயே ஆபத்து! ஆபத்து மாறவில்லை அதை விளைவிக்கிறவையளிலதான் மாற்றம்.

**கவியரங்கு** ஒண்டில கவி பாட வந்த அந்தக் கவிஞர், தான் ஏதோ வில்லங்கமான கவியொண்ட வாசிக்கப் போறதாயும் தனக்கு ஆபத்து ஏதும் வரக்கூடுமெண்டும் பிஹு பண்ணிக்கொண்டு நிண்டாராம். என்னத்தை அப்பிடி ஆபத்தான கருத்துக்கள அள்ளிக் கொட்டப் போறாரெண்டு அவற்ர ரசிகர்கள் எதிர் பாத்துக்கொண்டிருக்க, ஆள் போராளிகளின்ர வீரத்தைப் புகழ்ந்து தள்ளிக்கொண்டு போனாராம். முடிச்சதும், இதில என்ன ஆபத்திருக்கெண்டு விளங்காமல் அவரிட்டயே போய்க் கேட்டிச்சினமாம். "இல்லையில்லை. அப்பிடிச் சொல்லி வைச்சால்தான் அடுத்தவன் பயத்தில அடக்கி வாசிப்பான்" எண்டு இரகசியமாச் சொன்னாராம். இப்பிடியும் சில டக்டிஸ்"கள் இருக்குதோ! கலையுகம் வாழ்க!

**இலங்கைக்** கிரிக்கெட் இப்ப பழையபடி எழும்பிக் குதிக்குது. ஆசியாக் கிண்ணப் போட்டியின்ர பைனல் மெச்சில 229க்குள்ளயே இலங்கை சுருண்டு போனதைப் பாத்து இந்தியாதான் வெல்லப் போகுதெண்டு எல்லாரும் பயந்திச்சினம். கடைசியா இலங்கை அணி அபாரமாய் விளையாடி ஆசியக் கிண்ணத்தை எட்டிப் பிடிச்சிட்டுது. சனத் ஜெயசூரியதான் முழுத் திறமையையும் காட்டி ரெண்டு செஞ்சரிகளோட மேன் ஒப் த சீரிஸ்ஸாக உயர்ந்திருக்கிறார். அவர் காலாவதியாகி விட்டாரெண்டு கிரிக்கெட் சபைக்குள்ள விமர்சனங்கள் வந்திருக்கிற வேளையில, தான் இன்னும் சோரவில்லையெண்டு எடுத்துக் காட்டியிருக்கிறார். வாழ்த்துக்கள்!

# சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத்தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

- ஆசிரியர்


**தெய்வீக மருத்துவம்**

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை

Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ∴பக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)


Theiveegam Srilanka — தெய்வீக ஸ்ரீலங்கா
Head Office — தலைமையகம்
Batticaloa — மட்டக்களப்பு
Tel/Fax: 00940777032844 Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"



**மலையாள மாந்திரீகம்**





கை கண்ட பலன் பெற வாருங்கள்

எம்மால் வெற்றி பெறுவது என்பதாலேயே வாங்கு பணத்திற்கு திட்டவட்டமாக ரசீது வழங்குகிறோம்

**மலையாள மனோவசிய மதுரைவீரன் சக்கரம்**

இக் சக்கரத்தால் தொழில் அல்லது வியாபாரத்தில் ஏற்படும் நட்ட நிலை மாறி மீண்டும் இலாபம் அமையும். குடும்பத்தில் கணவர் மனைவி ஒற்றுமை கிடைக்கும். பெற்றோர்கள் பிள்ளைகளின் உறவு வலுவடையும். கடன் தொல்லைகள் அகலும். செல்வம் சேரும்.

**மளையாள மனோவசிய வாழைதேவி சக்கரம்**

இது திருமணம் ஆகாதவர்களுக்கு கைகண்ட பலனைக் கொடுத்து வருகிறது.

**மளையாள மனோவசியம் ருத்திர ஜண்டி சக்கரம்**

இது எதிரிகள் இன்றி வாழ ஒவ்வொருத்தருக்கும் அவசியமே.

**மலையாள மனோவசிய சக்தி மைந்தன் மூல சக்கரம்**

பிரிந்த கணவன் ஒன்று சேரவும். காதலன், காதலி ஐக்கியப்படவும், மேலும் இச் சக்கரத்தால் எதிரிகளால் உங்களுக்கு தீய வேலைகள் செய்ய முடியாமலும் காவல் நிற்கும்.

நேரடித் தொடர்புகளுக்கு:-

**Prof. Dr. P. K. Samy (J.D.G.A.N) jp**

No: 162, Kotahena Street, Mayfield Road, Colombo-13

Sri-Lanka CLI-No- 0094(11)2342463, 42470615, 3431137, 2344832-2449110, Hotline-CLI No:- 0094-(11)-4613133, 4613124,4613127,
Fax-0094112344831
Email-drpksamy@sltnet.lk

நுவரெலியாவில் : Tel Cli No : 052-2222508, 2235097, 223093

வெளிநாட்டவர்களுக்கு எம்மிடம் பிரத்தியேக விசேட சேவை பிரிவுண்டு. (இங்கு தீய வேலைகளுக்கு இடமில்லை இரகசியங்கள் பாதுகாக்கப்படும்)


# பெருந்தோட்ட அவல நிலையை மாற்றி மாணவர்களின் கல்வி நிலையை அரசாங்கம் உயர்த்துமா?

அரச பெருந்தோட்ட மக்கள், மாணவர்களின் எதிர்கால நிலை தற்காலத்தைப் பொறுத்தமட்டில் கேள்விக்குறியாகவே உள்ளது என்பதனை எங்களைப் போன்ற இளைஞர், யுவதிகளால் காணக்கூடியதாக உள்ளது. ஏனென்றால் கண்டி மாவட்டத்தில் மெததும்பர பிரதேசத்திலே அமைந்துள்ள கொட்டகங்க, ஹேபார்க், வைத்தலாவ, வுட்சைட் போன்ற அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் மூடப்பட்டு வரும் நிலையிலேயே காணப்படுகின்றன.

இவற்றில் ஹேபார்க், வைத்தலாவ, வுட்சைட் போன்ற தோட்டங்கள் முதலாளி மார்களுக்கு விற்கப்பட்டுத் தற்பொழுது மூடப்பட்டு வருகின்றன. அதாவது அங்கு வாழும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். வாரத்தில் இரண்டு நாள் வேலை. இதனைக் கொண்டு எவ்வாறு வாழ முடியும்? இன்று 1 கிலோ அரிசியின் விலை 31-35/= வரை உள்ளது. இதனால் உண்ணாமல் இருப்பதா அல்லது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதா அல்லது வேலைக்கு அமர்த்துவதா என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்தில் தற்சமயம் இரண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் வயதுடையவர்கள். இவர்களை எவ்வாறு வேலைக்கு அமர்த்துவது அல்லது எப்படி வாழ்வது, வாழ வைப்பது? இதிலும் கொடுக்கின்ற இரண்டு நாள் வேலைக்கும் சம்பளம் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத் தக்க விடயம்.

கொட்டகங்கையைப் பொறுத்தமட்டில் இது அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டமேயாகும்.. இதில் கொட்டகங்க கீ/பி, மே/பி, கிரண்டியல மே/பி, கீ/பி, கோணவல, பேன்சைட், ஆனமலை போன்ற பிரிவுகள் இதற்குரியதாகும். இங்கு வேலையைப் பொறுத்தமட்டில் வாரத்தில் 2-3 நாட்கள் மாத்திரமே. இதனைக் கொண்டு எவ்வாறு சமாளிப்பது என்ற நிலையிலும், தேயிலைச் செடிகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதாவது ஏற்கெனவே தேயிலை நாட்டப்டுவதற்குத் தயார் செய்யப்பட்ட இடம் மானா நாட்டப்பட்டு காடாக்கப்பட்ட நிலையிலும் தற்பொழுது தேயிலை பிடுங்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. இதில் சுமார் 250 ஏக்கர் அடங்கும்.

இந்த விடயத்தினை எந்த ஒரு தொழிற்சங்கமோ, அரசியல்வாதிகளோ, தலைவர்மார்களோ கேட்டதில்லை. அதிலும் இங்கு கடமை புரியும் உத்தியோகத்தர்கள் ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் ஒரு வேலையாவது பெற்றுக் கொள்கின்றார்கள். தோட்ட முகாமையாளர் குறைந்த பட்சம் 5 ஆட்களையாவது பெற்றுக்கொள்கின்றார். இதனால் மாத்திரம் தோட்டத்திற்கு நட்டம் ஏற்படாதா?

மேலும் இங்கு வாழும் மக்கள் "இரவிலும் நிலவொளி இருந்தால், மின்சாரம், மண்ணெண்ணெய் செலவின்றி வாழ முடியும்." அந்தளவிற்கு வீட்டுக் கூரைத் தகடுகள் ஓட்டையாகக் காணப்படுகின்றன. இதனை நிர்வாகி, அரசியல்வாதி, தொழிற்சங்கத்திற்குக் கூறினால், சரி, மாற்றிடுவோம் என்பர். அத்தோடு சரி. ஆனால், அரசியல்வாதிகள் தேர்தல் காலத்தில் இந்த விடயத்தை எங்களுக்கே ஞாபகப் படுத்துவார்கள். அதன் பிறகு தேர்தல் முடிந்ததும் அவர்களைக் காண முடியாது. அது மாத்திரமல்ல, தனித் தனியே வீடு கட்டி, தருகின்றோம். காணி பெற்றுத் தருகின்றோம் என்பார்கள் .அவையெல்லாம் எங்களைப் போன்ற பின் தங்கிய பிரதேச மக்களுக்கல்ல; அவர்கள் வாழும் பிரதேச மக்களுக்கே. இது அனைவரும் அறிந்த உண்மை. இவ்வாறான விடயங்களில் இனி இரங்கலையில் வாழும் இளைஞர், யுவதிகள் ஏமாறப்போவதில்லை என்பதனை புரிந்து கொண்டால் சரி.

மேலும் இப் பெருந்தோட்டத்திலே இயங்கிவந்த தொழிற்சாலை இவ்வருடமே மூடப்பட்டுள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் கொட்டகங்க கீழ்ப்பிரிவில் தொழில் செய்த 160 தொழிலாளர்களில் தற்பொழுது 80 பேர் மட்டுமே வேலை செய்கின்றனர். இத்தகைய சூழ்நிலைகள் காரணமாக அல்லற்படும் மக்கள் நிவாரணம் பெற்று நிம்மதியாக வாழ தொழில் நிலையில் அபிவிருத்தி செய்யப்படுவதோடு, மாணவர்கள் கல்வி நிலையில் முன்னேற்றம் காணவும் வழிவகை செய்யப்பட வேண்டும். அரசாங்கம் ஆவன செய்யுமா?

**- எம்.என். கிருஸ்ணன், 33, கொட்டகங்க, கீ.பி., ரங்கல.**


**மட்டக்களப்பு மாந்திரீகம்**

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21,
SRI LANKA.

☎ 067-2250349



**தினமுரசு சந்தா விபரம்**

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3500 | ரூ.1750 | ரூ.875 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4400 | ரூ.2200 | ரூ.1100 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3100 | ரூ.1550 | ரூ.775 |
| உள்ளூர் | ரூ. 1050 | ரூ.525 | ரூ.265 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெறவிரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06 . Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் &Manager Thinamurasun என்னும் பெயருக்கு கட்டளையிட்டு பதிவுத்தபாலில் Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta,Colombo-06 .என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.


# மேல் கொத்மலைத் திட்டம் நிறைவேற்றப்படலாமா?

மலையகம் இயற்கை எழில் கொஞ்சும் அழகு தேவதைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றில் நீர்வீழ்ச்சிகள் மிகப் பிரதான இடத்தினைப் பெறுகின்றன. இவற்றில் அட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை நகருக்கு அண்மையில் உள்ள டெவன் நீர்வீழ்ச்சி மற்றும் சென்ட் கிளயர் நீர்வீழ்ச்சி ஆகியன நாட்டின் உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் நீர்வீழ்ச்சிகளின். ஆனால், எதிர்காலத்தில் அழகிய இந் நீர்வீழ்ச்சிகளை நிழற்படங்களை தவிர நேரடியாகக் கண்டு களிக்க முடியாதா என்ற அபாயகரமான நிலை ஏற்படும் என்ற அச்சம் மலையக மக்களையும் இயற்கை விரும்பிகளையும் இன்று தொற்றியுள்ளது.


காரணம், மேல் கொத்மலை மின் திட்டம் என்ற போர்வையில் செயற்படுத்தப்போகும் சதித்திட்டமாகும். கடந்த அரசாங்கம், இத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முனைந்தபோது, மலையகத்தின் பிரதான கட்சியுடன் இணைந்து மலையக மக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை நடத்தினர். மேலும் கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்த பிரதான மலையகக் கட்சியே எதிர்த்ததால் அரசாங்கம் மேற்படி திட்டத்தைப் பிற்போட்டது. மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, புதிய அரசாங்கத்தின் மின்சக்தி அமைச்சர் திரு.சுசில் பிரேமஜயந்த அவர்கள் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவென அமைச்சின் அங்கீகாரம் பெற்று வெகு விரைவில் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றினைக் கொண்டுவர முனைவது மலையகத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை பாரிய இழப்புக்களை ஏற்படுத்தும் சதித் செயலாகும்.

மேற்படி மின் திட்டம் நிறைவேற்றப்பட்டால் வருடத்திற்கு 531 ஜிகாவோட்ஸ் மின் உற்பத்தியை மேற்கொள்ளலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. மேலும், இத் திட்டத்தால் டெவன், சென்ட் கிளயர் ஆகிய பிரதான இரு நீர்வீழ்ச்சிகளுடன் மொத்தம் ஏழு நீர்வீழ்ச்சிகள் மறைந்துபோகும் அபாயம் ஏற்படுவது நிச்சயம். மேலும், இதனால் மலையகத் தமிழ் மக்களுக்கு ஏற்படப் போகின்ற பாதகங்களே அதிகம். ஏற்கெனவே மஸ்கெலியா மவுசாகலை நீர்நிலை, காசல்றீ நீர்நிலை உருவாக்கங்களால் ஏற்பட்ட அநீதிகளை மலையகம் வாழ் மக்கள் அறிவர்.

மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்துமானால் நுவரெலியா மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களின் இருப்புக்கள் குறைக்கப்படுவதும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் புதிதாக உருவாக்கப்படுதலும் மறுக்க முடியாத திணிப்பாக இருக்கும். இத் திட்டம் நிறைவேற்றுவதனால் கிடைக்கின்ற வருமானத்தைக் குறிப்பிட்டுப் பேரினவாத அரசியல்வாதிகள் பேசினாலும், இவர்களின் உள் நோக்கம், இப் பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழும் தமிழர்களைச் சிதறடிக்க வேண்டும் என்பதாகவேயுள்ளது. மவுசாகலை நீர்நிலை, காசல்றீ நீர்நிலை என்பவற்றின் உருவாக்கங்களால், தமிழர் செறிந்து வாழ்ந்த இப் பகுதிகளில், குறிப்பிட்ட சில வருடங்களுக்குள் அதிகளவான சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டதினை மலையக மக்கள் மறந்துவிட முடியாது. மீண்டும் அவ்வாறான நிலை ஒன்றினை ஏற்படுத்த நாம் இடங்கொடுக்கலாமா? மலையக மக்களே! நாமும் பிற சமூகங்களைப் போன்று எவ்விதத்திலும் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதினைப் பறைச்சாற்றவும், எம் இருப்பினை நிலை நிறுத்தி எமது எதிர்கால சந்ததியினருக்கு வளமான மலையகத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் இன்று எம் மத்தியில் சுமத்தப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த எடுக்கும் தீர்மானத்திற்கு எம் மத்தியில் இருந்து பாரிய எதிர்ப்பினை எடுத்தியம்ப வேண்டும். ஒரு சிலர் தமது அரசியல் இலாபங்களுக்காக நம்மை அடகு வைத்து அரசியல் பகடைக்காய்களாக மாற்ற சிலர் முனையலாம். இவற்றினைக் கண்டு நாம் பின்வாங்கிவிடக் கூடாது. அரசியல் கட்சி பேதங்களை மறந்து நாம் நமக்காக எதிர்ப்புக்குரலை ஒன்றிணைந்து ஓங்கச் செய்வோம். முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. இன்றே செய்வோம் நன்றே பெறுவோம்.

**மலைக்கவி கா.சுபாஷ், டிக்கோயா.**

**என்னிடம் கைரேகை பார்க்க வருபவர்கள் என்ன கூறுகிறார்கள்**

அமைதியாகவும் ஆறுதலாகவும் பேசிக் கைரேகை பார்க்க வருபவர்களின் பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டு, நாங்கள் எதை கைரேகையின் மூலம் எதிர்பார்க்கின்றோமோ அந்த எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்து, எமக்கு இருக்கும், வரப்பொகும் பிரச்சினைகளையும் எமக்கு எதிர்காலத்தில் அமையவிருக்கும் வாழ்க்கையினையும் கூறுவததோடு, அதற்கான வழிமுறைகளை கூறுவது மனதிற்கு ஆறுதலாகவும், திருப்தியாகவும் இருப்பதோடு, வாழ்க்கை பற்றிய தன்னம்பிக்கையும் பிறக்கின்றது.

நான் கூறும் இராசி பலனை ரூபவாஹினி ஐ அலை வரிசையில் ஞாயிறு காலை 8.30 மணிக்கு மித்திரன் பத்திரிகையிலும் கேட்டு படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

மன வள ஜோதிட ஆலோசகர்
K. கங்காதரன் (M.A) J.P
23, மேபில் ரோட், கொழும்பு-13
தொ.பே.இல: 0777 388860, 2342463

**01.08.2004 திகதிய "சண்டே ஒப்சேவர்" ஆங்கில இதழில் பிரசுரமான அரசியல் ஆய்வுக் கட்டுரையின் தமிழாக்கம்**

## இன்னொருவர் பார்வையில்

# சர்வதேச சமூகம் செயலில் இறங்க வேண்டிய நேரம் வந்துவிட்டது

கடந்த 2004 ஜுலை 25, அன்று கொட்டாவ பகுதி வீடொன்றில் வைத்துக் கருணா அணியைச் சேர்ந்தவர்களான எட்டுத் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். சுட்டுக் கொல்லப்படுவதற்கு முன்பு இவர்கள் நஞ்சு ஊட்டப்பட்டிருப் பதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இந்தக் கொலைகளைப் புரிந்தவர் கிளிநொச்சியில் புலிகளின் முன்னிலையில் பத்திரிகையாளர் மாநாடு நடத்துவார் என்று தகவல்கள் வெளிவந்தபோதும் அது நடைபெறவில்லை.

இதேவேளையில் கருணாவின் தலைக் குப் புலிகளின் தலைமை சுமார் இரண் டரைக் கோடி ரூபா விலை விதித்துத் தேடி வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்தச் செய்திகள் எல்லாம் புராண காலக் கதை களிலிருந்து அல்லது இரக்கமற்ற சர்வாதி காரியினால் ஆளப்படும் ஒரு நாட்டிலிருந்து வெளிவரவில்லை. ஜனநாயக நாடு எனப்படும் எமது நாட்டின் இன்றைய சூழலில் வெளிவருகின்றது.

கடந்த புதனன்று (21.07.2004) ஆலை யடிவேம்பு பிரதேச சபைத் தலைவரான வேலாயுதம் ரவீந்திரன் புலிகளால் படு கொலை செய்யப்பட்டுள்ளார். ரவீந்திரன் ஈ.பி.டி.பி.யைச் சேர்ந்தவர். இதனால் இப் படுகொலைக்குக் காரணம் மாற்றுக் கருத் துக்களைக் கொண்டிருந்தமை என்பது புலனாகின்றது. ஈ.பி.டி.பி.யினரைப் புலிகள் நேருக்கு நேர் சந்தித்துப் பேசுவதில்லை என்ற அளவுக்கு வன்மத்தை வளர்த் துள்ளனர். இதற்குச் சில தினங்களுக்கு முன்பாக ஈ.பி.டி.பி.யின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் படுகொலை செய்யவும் புலிகள் முயற்சித்தனர். ஆனால், அவர் புத்திசாதுரியமான முறையில் தப்பிக்கொள்ள, இந்தத் தற்கொலைத் தாக்குதலில் கொள்ளுப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு அதிகாரிகள் பலியாகினர். தேவானந்தா புலிகளுக்கு எதிரான கட்சியின் தலைவர் மட்டுமல்ல. அவர் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் களில் ஒருவர். புலிகள் கையெழுத்திட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இத்தகைய செயல்கள் தவிர்க்கப்பட வேண்டியவை ஆகும்.

இத்தகைய சம்பவங்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடுமையாக மீறுபவை என்பதுடன், 2002 பெப்ரவரியில் கைபொப்பமிட்ட புரிந்துணர்வு உடன் பாட்டைப் புலிகள் சுமார் 3000 தடவைகளில் மீறி இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. ஆனால் சர்வதேச சமூகத்திட மிருந்தோ, சமாதான ஆர்வலர்களிட மிருந்தோ, சிவில் சமூகத்திடமிருந்தோ புலிகள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமை மிக மிகக் குறைவாகும்.

தமிழ் சமூகத்தின் மத்தியில் இடம்பெறும் இத்தகைய படுகொலைகள் குறித்து செயல்பூர்வமான அழுத்தம் பிரயோகிக்கப்படு வதைத் தவிர்த்து சர்வதேச சமூகம் மௌனம் காப்பது ஆச்சரியத்திற்கு உரியதாகும். ஈராக்கில் அல்லது ஆப்கானிஸ்தானில், அமெரிக்காவின் அல்லது ஜப்பானின் அல்லது மேற்கு நாடுகளின் பிரஜைகள் தீவிரவாதிகளால் கடத்தப்படும்போது அல்லது தாக்கப்படும்போது சர்வதேச சமூகத்தில் எவ்வாறு எதிரொலிக்கின்றது என்பதை நாம் நன்கறிவோம்.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றபோது தமிழ் மக்களின் மனித உரிமைகள் குறித்து சர்வதேச சமூகம் அரசாங்கத்துக்கு எந்த ளவுக்கு அழுத்தம் கொடுத்தது என்பதையும் நாமறிவோம்.

இப்போது சமாதான நடைமுறைகளில் ஒரு முட்டுக்கட்டை நிலை காணப்படுகிறது. சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக வடக்கு-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகம் தம்மிடம் தரப்பட வேண்டுமெனப் புலிகள் ஒரு முன் நிபந்தனையை வற்புறுத்துகின்றனர். இன்றைய சூழலில் இது விவாதத்திற்குரியது. புலிகளிடம் சட்டபூர்வமாக நிர்வாகம் கையளிக்கப் படும்போது புலிகளல்லாத மாற்று இயக்கங்கள், அவர்களது ஆதரவாளர் களினது நிலைமை கேள்விக்குரியதாகிவிடும்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவங்களை அடுத்து நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் உட்படச் சில இராஜதந்திரிகள் வன்னிக்கு விஜயம் மேற்கொண்டு புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சு நடத்தியுள்ளனர். எனினும் புலிகள் மீது நேரடியாகக் குற்றம் சுமத்தும் ஒரு சொல்லைத்தானும் எம்மால் கேட்க முடியவில்லை.

சில நாடுகள் உத்தியோகபூர்வமாக இந்தச் சம்பவங்களைக் கண்டித்துள்ளன. ஆனால், இத்தகைய சம்பவங்களில் புலிகள் ஈடுபடுவதைத் தவிர்க்கும் வகையிலான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப் பட்டதாக இல்லை. இந்த நாடுகளும், சர்வதேச சமூகமும் புலிகளின் இத்தகைய செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த விரும்பினால் புலிகளுடன் திட்டமிட்ட சந்திப்புக்களையும், புலிகளுடன் இணக்கம் கண்ட செயற்றிட்டங்களையும் இடை நிறுத்துவதன் மூலம் அழுத்தம் கொடுக்க முடியும். இது நிச்சயமாக நடைமுறைக்குச் சாத்தியமான ஒரு நடவடிக்கையாக அமைந்து, பல நாடுகளிலும் தடைசெய்யப் பட்டுள்ள புலிகள் இயக்கத்திற்கு உண்மையான ஜனநாயகம் மற்றும் அமைதி குறித்துப் போதிக்க முடியும்.

> **சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களாகிய எவரும் மீண்டும் போர் மூளுவதை விரும்பவில்லை. சமா தானத்தின் பெறுமதி குறித்து அனைவரும் நன்கு அறிந்துள்ளனர். விசேடமாக வடக்கு-கிழக்கு மக்கள் அனைவரும் நன்கு அறிந்துள்ளனர். மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதாகப் புலிகள் கூறுகின்றபோதும் தற்போதைய சூழலில் அது அவர்களுக்கு இலகுவானதாக இருக்கப்போவதில்லை.**

அதே நேரம், உள்ளூர் சமாதான ஆர்வலர்களும், அரச சார்பற்ற நிறுவனங் களும் சிவில் சமூகம் என அழைக்கப் படுபவர்களும் இந்தச் சம்பவங்கள் குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துவதாக இல்லை. கொலையுண்ட கருணா அணியைச் சேர்ந்தவர்களின் கொலை, ரவீந்திரனின் கொலை, கொள்ளுப்பிட்டியில் பொலிஸார் கொலையுண்டமை போன்ற சம்பவங்கள் அவர்களது பார்வையில் அடிப்படை மனித உரிமை மீறல்கள் இல்லைப் போலும். ஒரு இளம் பெண்ணைத் தற்கொலைக் குண்டுதாரியாக ஏவிவிடுவது அவர்களின் பார்வையில் பெண் உரிமைக்கு எதிரானது இல்லைப் போலும், இந்தச் சம்பவங்களும் படுகொலைகளும் சமாதான நடைமுறை களுக்குப் பின்னடைவு என்றோ அச்சுறுத்தல் என்றோ அவர்கள் கருதவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களின் புலிகளுக்கு ஆதரவான போக்கை வெளிப்படுத்தும் ஒரு சில சம்பவங்கள் இவை. அரச சார்பற்ற நிறுவனங்களின் இந்தப் போக்கிற்கு எதிராகவே மக்கள் விடுதலை முன்னணி கடந்த வாரத்தில் சுவரொட்டிப் பிரசாரங்களை மேற்கொண்டது.

### எதிர்ப்பு வெளிப்பட்டது

சமாதான நடைமுறைகளின் தற் போதைய நிலை தொடர்பாகப் பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள ஐ.தே.மு. கடந்த வாரம் அதிருப்தியை வெளியிட்டது. சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது என்பது தனியே அரசாங்கத்தைப் பொறுத்த விடயமாகும். எதிர்க்கட்சியைச் சார்ந்தது அல்ல என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் எடுத்து ரைத்தார். அது சரியானதுதான். ஆனால், கடந்த 2003 ஏப்ரலில் அவர் பதவியில் இருக்கும்போதே பேச்சுவார்த்தைகள் தேக்க நிலையை அடைந்துவிட்டன என்ற உண்மையை அவர் வசதிக்காக மறந்து போயுள்ளார். இடைக்கால நிர்வாகக் கோரிக்கையின் அடிப்படையில் பேச்சுக் களை ஆரம்பிக்கப் புலிகள் வலியுறுத்த ஆரம்பித்ததும், தென்பகுதி அரசியல் கட்சி அதற்கு எதிர்ப்புக் காட்ட முற்பட்டதும், பின்னர் பேச்சுக்கள் ஆரம்பிக்காமைக்கு காரணங்கள் ஆகின. இப்போது அரசாங்கம் மாறி இருக்கிறது. பேச்சுக்கள் ஆரம்பிப் பதற்கான முட்டுக்கட்டை இடைக்கால நிர்வாகத்தில் தங்கியிருக்கிறது. பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் கூற்றுப்படி, இது விடயம் தொடர்பாக அரசாங்கத்தினுள்ளும் ஒத்த கருத்துக்கள் இருப்பதாக இல்லை. இடைக்கால நிர்வாகக் கோரிக்கையின் அடிப்படையில் மட்டும் பேசுவதற்கு அர சாங்கம் தயாராக இல்லை என்பது சரியானதுதான். ஆனால், ஐ.தே.க. அதற்குத் தயாராக இருக்கிறதா? இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க அரசாங்கம் தயாராக இருக்கும் அதே சமயம், தேசியப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு குறித்தும் பேசப்பட வேண்டும் என்றே அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கத் தரப்பிலுள்ள கட்சிகளின் மத்தியில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன என்பதை மறுப்பதற்கு இல்லை. சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பி.யும் இந்தக் கோரிக்கையின் பின்னணியில் தேசிய பாதுகாப்புக்குள்ள ஆபத்தை இனங் கண்டுள்ளன. அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் கட்சிகளும் கூட மாறுபட்ட அபிப் பிராயத்தையே கொண்டுள்ளன. புலிகளின் கோரிக்கை ஏற்கப்படுமாயின் முஸ்லிம் களுக்கும் தனியான நிர்வாக அலகு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று அவை கோருகின்றன. பிரபாகரனின் தலைமையை ஏற்றுக்கொள்ள மறுக்கும் கருணா அணியினர் ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்துகொள்ள முற்படுகின்றனர்.

சமாதான முயற்சிகளின் முட்டுக்கட்டை நிலை நீக்கப்பட வேண்டுமெனவும் எந்த விலை கொடுத்தாவது பேச்சு ஆரம்பிக்கப்பட வேண்டுமெனவும் ஐ.தே.க. கூறுகிறது. முன்னைய ஐ.தே.க. அரசாங்கம் கையாண்ட விதம் காரணமாகவே சமாதான முயற்சிகள் தற்போதைய சிக்கல் நிலைக்கு உள்ளாகி இருக்கிறது. புலிகள் பல கப்பல்களில் ஆயுதங்களைக் கொண்டுவந்து சேர்க்க அவர்கள் அனுமதித்தனர். அதி சக்தி வாய்ந்த ஒலிபரப்புச் சாதனங்கள் புலி களுக்குக் கிடைக்க அவர்கள் வழி வகுத்தனர். புலிகளின் உறுப்பினர்கள் கேந்திர முக்கியமான இடங்களில் நிலை கொள்ளுவதற்கும், புதிய முகாம்களை அமைப்பதற்கும், பொலிஸ் நிலையங்களை திறப்பதற்கும் இடமளித்தனர். ஐ.தே.மு. அரசின் பதவிக் காலம் நீடித்து இருக்கு மாயின் புலிகள் இடைக்கால நிர்வாகத்தைப் பெற்றிருப்பார்கள் என்பது நிச்சயமானது. ஐ.தே.மு.வின் பதவிக் காலம் தொடர்ந் திருந்தால் கருணாவும் அவரது சகாக்களும் பலிக்கடாக்களாக்கப்பட்டிருப்பர் என்பதும் நிச்சயமானது. நாட்டின் தேசிய புலனாய்வுத் துறையையே புலிகளுக்குக் காட்டிக் கொடுத்துவிட்ட ஐ.தே.முன்னணி, இதனைச் செய்வதற்கு எவ்விதத்திலும் தயக்கம் கொள்ளாது. அது நடந்திருந்தால் அல்லது தற்போதைய அரசும் அதே பாணியைத் தொடர்ந்தால், கிழக்கு மாகாணம் இரத்தத்தில் குளிப்பது தவிர்க்க முடியாதது ஆகும்.

சமாதானம் என்ற போர்வையில் ஐ.தே.முன்னணி மேற்கொண்ட அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு மக்கள் ஆணை வழங்கவில்லை. அதேவேளை இந்த அரசாங்கத்தினால் பேச்சுக்களை மீண்டும் தொடங்கவும் முடியவில்லை. ஆனால் வேறு திசையில் முன்னேற்றங்கள் இடம் பெறுகின்றன. ஐ.தே.முன்னணி அரசிட மிருந்து பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதி திருமதி சந்திரிகாவினால் பொறுப்பேற்கப் பட்டது முதல் இது வரையில் ஆயுதக் கடத்தல்கள் எதுவும் இடம்பெற்றதாக இல்லை. புலிகளின் அணிகளுக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது என்பதுடன், அவர்கள் ஒருவரையொருவர் கொல்லும் நிலைமையும் தோன்றியுள்ளது.

புலி உறுப்பினர்களின் உச்ச மனோநிலையும், புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்த பிரதிமையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மட்டத்திலும் ஆர்வமுள்ள வெளிநாட்டு உளவு நிறுவனங்களின் கணிப்பிலும் புலிகளின் இராணுவ பலம் இப்போதும் இரகசியமானது அல்ல. பிரபா அணிப் புலிகளின் குறிப்பிடத் தக்களவு இராணுவத் தளபாடங்களும் உறுப்பினர்களும் இழக்கப்பட்டுள்ளதால் கிழக்கு மாகாணத்தின் மீதான புலிகளின் கட்டுப்பாடு வெகுவாகத் தளர்ந்து போயுள்ளது. அரசாங்கம் இந்தியாவுடனும் ஏனைய பிராந்திய நாடுகளோடும் அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்றவற்றுடனும் பாதுகாப்பு ஒத்துழைப்புகளைப் பலப்படுத்திக் கொண்டுள்ளது. புலிகளுடன் மிகவும் பலமான ஒரு நிலையிலிருந்து அரசாங்கத்தினால் பேரம் பேச முடியும். எனவே, சமாதான நடைமுறைகளின் முன்னேற்றம் குறித்துக் குறைத்து மதிப்பிட முடியாது.

### சமாதானத்தின் பெறுமதி

சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களாகிய எவரும் மீண்டும் போர் மூளுவதை விரும்பவில்லை. சமா தானத்தின் பெறுமதி குறித்து அனைவரும் நன்கு அறிந்துள்ளனர். விசேடமாக வடக்கு-கிழக்கு மக்கள் அனைவரும் நன்கு அறிந்துள்ளனர். மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கப் போவதாகப் புலிகள் கூறுகின்ற போதும் தற்போதைய சூழலில் அது அவர்களுக்கு இலகுவானதாக இருக்கப் போவதில்லை.

அரசாங்கம் நாட்டு நலனை முன்னிறுத்திப் பேச்சுவார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாக, மாற்றுத் தமிழ்க் கட்சிகளைப் பலவீனப்படுத்தாத வகையிலும் தேசத்தின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு, மனித உரிமைகள் என்பவற்றை விட்டுக்கொடுக்காத வகை யிலும் இப் பேச்சுக்கள் முன்னெடுக்கப் படுதல் வேண்டும். ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருவதைப் போல, புலிகள் மட்டுமே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்ல என்பது இப்போது மிகவும் வலுவுடையதாக இருக்கிறது. நாங்கள் எல்லாரும் அவதானித்துள்ளதைப் போல சமாதானப் பேச்சுக்களில் ஐ.தே.முன்னணி அரசு புலிகளின் எல்லாக் கோரிக்கைகளுக்கும் விட்டுக்கொடுத்துவிட வில்லை. எல்லாக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு விடவும் இல்லை. இப்போதுள்ள வேறுபாடு என்னவெனில், அரசாங்கம் கடும் தொனியில் பேரம் போவது மட்டுமே ஆகும். இந்த நாட்டில் கௌரவமான சமாதானம் நிலைநாட்டப் படுவதற்கு இது அவசியமானதாகும். இது அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக அணுக நல்லதொரு சமிக்ஞை ஆகும். இது முஸ்லிம் மக்களினதும் ஏனைய தமிழ் கட்சிகளினதும் உரிமைகள் பேச்சுவார்த்தை மேசையில் வரையப்படுவதற்கு நல்லதொரு சமிக்ஞை ஆகும்.

இடைக்கால நிர்வாக யோசனை என்பது இறுதித் தீர்விலிருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியாதது. கடந்த வாரத்தில் இந்தியாவும் இதே நிலைப்பாட்டை வலியுறுத்தி இருக்கிறது. புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கைக்கு அரசாங்கம் இறங்கி வருவது இயலாது. இடைக்கால நிர்வாகம் குறித்து மட்டும் புலிகளோடு பேச முடியாது. எனவே, இடைக்கால நிர்வாகம் தொடர்பான தனது போக்கைப் புலிகள்தான் மாற்றிக்கொள்ளல் வேண்டும். அதே போல இறுதித் தீர்வுக்கான பேச்சுக்களையும் சமாந்தரமாக ஆரம்பிக்க வேண்டும். புலிகள் தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள சர்வதேச சமூகம் நடவடிக்கையில் இறங்க வேண்டிய நேரம் வந்துள்ளது.

**ஆக்கம் :- விஜிலண்ட்டி.**

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## – வாழ்க்கை சரிதம் –

அன்று இரவு ஏழு மணியிருக்கும் நான் திருவல்லிக்கேணி சுந்தரமூர்த்தி விநாயகர் கோயில் தெருவில் ஒரு வீட்டின் சின்ன அறையில், மற்ற இரண்டு பேரோடு மூன்றாவது நபராக மாதம் ஐந்து ரூபாய் வாடகைக்குத் தங்கிக் கொண்டிருந்தேன்.

'வாலி.. வாலி...' என்று யாரோ என்னை உரக்க விளிப்பதுவும், கார் ஹார்ன் சத்தமும் கவனத்தைக் கவரவே, அறையை விட்டு வாசலுக்கு வந்தேன்.

கோபி, இன்னொரு நண்பருடன் FIAT – காரில் என்னைத் தேடி வந்திருந்தார். கோபிக்கு என் சரியான விலாசம் தெரியாது. ஒருநாள் காற்றுவாக்கில் சொல்லியிருந்ததை மனத்தில் வைத்துக்கொண்டு, என் இருப்பிடத்தைத் தேடிக் கண்டுபிடித்து விட்டார்.

"வாலி... என்கூட இப்ப கார்ல வாங்க... நீங்க பாட்டு எழுதப் போறீங்க," என்று கோபி என்னை அழைத்தும் என் செவிகளை என்னாலேயே நம்ப முடியவில்லை. அவசரம் அவசரமாகச் சட்டையை மாட்டிக்கொண்டு காரில் ஏறினேன்.

"இவர்தான் மிஸ்டர் ஸ்ரீநிவாசராவ்... கெம்பராஜ் அர்சின் இணை இயக்குநர்..." என்று உடன் வந்தவரை கோபி எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

கோபியை, அவர் வீட்டில் இறக்கி விட்டுவிட்டு. நானும் ஸ்ரீநிவாசராவும் கெம்பராஜ் அர்ஸ் கம்பெனிக்குள் நுழைந்தோம்.


பங்களாவின் பின்புறத்தில் ஒரு மிகப் பெரிய கீற்றுக் கொட்டகை. அதுதான் மியூசிக் ஹால்.

ஆர்மோனியத்தின் முன்னால் ஓர் இசையமைப்பாளர் அமர்ந்திருக்க, அவரைச் சுற்றி அநேக வாத்தியக்காரர்கள் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

"இவர்தான் மிஸ்டர் வாலி... பெரிய கவிஞர்" என்று திரு. ஸ்ரீநிவாசராவ் என்னை இசையமைப்பாளரிடம் அறிமுகப்படுத்தினார். 'பெரிய கவிஞர்' என்ற வார்த்தையைக் கேட்டு நான் திகைத்துக் போனேன்.

இசையமைப்பாளர் பெயர் திரு. கோபாலம். அவருக்கு ஒரு வணக்கத்தைப் போட்டுவிட்டு ஆர்மோனியப் பேட்டியின் முன்பே நான் கூச்சத்தோடு அமர்ந்தேன்.

முதல் வாய்ப்பு என்பதால், மனதில் ஒரு வித குறுகுறுப்பும் அச்ச உணர்வும் நிழலாடியது.



"வாலி... நீங்க என்ன சிகரெட் பிடிப்பீங்க?" என்று ஸ்ரீநிவாசராவ் கேட்டதும் விக்கித்துப் போனேன்.

முதல் வாய்ப்பின்போதே, மியூசிக் டைரக்டருக்கு நேராகப் புகைபிடித்தால், உருப்பட்ட மாதிரிதான் என்று என் உள் மனம் எச்சரித்தது.

என் பதிலுக்குக் காத்திராமல், ஸ்ரீநிவாசராவ் ஒரு பையனை அழைத்து ஒரு பாக்கெட் Gold Flake- சிகரெட்டும் ஒரு வத்திப் பெட்டியும் வாங்கிவர ஆணையிட்டார்.

சிகரெட் பாக்கெட் வந்து சேர்ந்தது. நான் 'திரு. திரு' வென விழித்தேன். ஸ்ரீநிவாசராவ் என் தொடையைக் கிள்ளி, "சிகரெட்டைப் பத்த வையுங்க. அப்புறம் சிச்சுவேஷனை சொல்றேன். கிடுகிடுன்னு பாட்டு வரும். உங்களைப்பத்தி எனக்குத் தெரியாதா?" என்று என்னைப் பல காலம் அறிந்தவர் போல் உரிமையோடு பேசினார்.

மெதுவாக ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துப் புகையை விட்டேன். திடீரென்று மியூசிக் டைரக்டர், என்னை ஒரு பெரிய புள்ளியாக எண்ணிக் கொண்டு மிகவும் பவ்யமாக "ட்யூனை வாசிக்கட்டுமா?" என்று கேட்டார்.

எனக்கு வியர்த்துக் கொட்டியது.

"Fan– ஐ இந்தப் பக்கமாக திருப்பி வையுங்கப்பா"... என்று ஸ்ரீநிவாசராவ் உரத்த குரலில் சொன்னார். மின் விசிறியின் காற்று என் வியர்வையை ஒற்றி எடுத்தது. ஸ்ரீநிவாசராவ் பாட்டு எழுதுவதற்கான சிச்சுவேஷனைச் சொன்னார். அது ஒரு தாய் பாடும் தாலாட்டுப் பாட்டு.

இசையமைப்பாளர் திரு. கோபாலம் வர்ணமெட்டை வாசித்தார்.

நான் உடனே, 'நில்வும் தாரையும் நீயம்மா: உலகம் ஒருநாள் உனதம்மா..." என்று பல்லவியை எழுதிக் காட்டினேன்.

இசையமைப்பாளர் அசந்து போனார். வார்த்தைகள் வர்ணமெட்டில், அவ்வளவு கச்சிதமாக உட்கார்ந்து கொண்டன. முழுப் பாடலையும் முக்கால் மணி நேரத்தில் எழுதி முடித்தேன்.

பிறகு கெம்பராஜ் அர்ஸ் வந்து பாட்டைக் கேட்டார்.

(தொடரும்)




## தமிழில் தருவது ஜெஃப்ரி ஆர்ச்சர்




நாம் ஆற்றங்கரையிலிருந்து வீட்டுக்குத் திரும்புகிறோம். லேக் ஒஸ்கார் - உண்மையில் அது ஒரு பெரிய குளம் - மீது போடப்பட்ட மரப்பாலத்தைக் கடக்கிறோம். அந்தக் குளத்தில் கொய்கார்ப் மீன்கள் நிறைய இருக்கின்றன. எனது மனைவியின் செல்லப் பூனையின் நினைவாகவே அந்தப் பெயர் சூட்டப்பட்டது. அந்தப் பூனை ஐந்து வருடங்களாகக் கரையின் ஓரத்தில் மியாவிய படியே எத்தனை முறை முயன்றும்கூட ஒரு மீனையாவது பிடிக்கத் தவறிவிட்டது. நாம் ஜப்பானிலிருந்தும் இஸ்ரேலில் இருந்தும் கொண்டுவந்த அவற்றுக்கு உணவளித்த பிற்பாடு நாம் வீட்டுக்குத் திரும்பி பத்திரிகையாளர்களைச் சந்திக்கத் தயாராகிறோம்.

டேவிட் ஹொவெல் சொல்கிறார்: ஒரு பொலிஸ் வாகனத்தில் என்னை சர்ச்சுக்கு எடுத்துச் செல்வதில் அவருக்கு விருப்பம் இல்லையாம். ஆகவே ஓல்ட்விகாரேஜிலிருந்து எமது பிரதேச சர்ச்சுக்கு - 400 யார் தூரம் - எனது மனைவி மேரியுடன் நடந்து போகும்படி ஆலோசனை கூறுகிறார். பொலிஸாரும் சிறையதிகாரிகளும் இந்த நிகழ்வு எனது தாயாரின் மரணச் சடங்கு என்பதை நினைவுறுத்துவதற்குத் தம்மால் இயலுமான அனைத்தையும் செய்கின்றனர்.

முற்பகல் 11.35

நாம் முன்வாசல் வழியாக வெளியேறுகிறோம். பத்திரிகையாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் என்று ஒரு பெரிய கூட்டமே எமக்காக நுழைவாயிலுக்கு வெளியே காத்துக் கொண்டிருக்கிறது. அதில் கிட்டத்தட்ட நூறு பேர் இருப்பார்களென்று நான் அனுமானிக்கிறேன். (ஆனால் ஜோர்ஜ் பிறகு ஆணையாளரிடம் மொபைல் ஃபோனில் கதைக்கும்போது கிட்டத்தட்ட இருநூறு பேர் என்று கூறுகிறார்). எனது இளைய மகன் ஜேம்ஸும் அவனது நண்பியான டலிடாவும் கால்மைல் தூரப் பயணத்தை முன்னின்று நடத்துகின்றனர். அவர்களை எனது மகன் வில்லியமும் எனது வளர்ப்புச் சகோதரி லிஸ்ஸும் தொடர்கின்றனர். நானும் மேரியும் இறுதியாகச் செல்கிறோம். நாம் எமது பிரதேச சர்ச்சை நோக்கி மெதுவாக நடக்கும்போது புகைப்படக் கலைஞர்கள், நிஜமாகவே ஒருவர் மேல் ஒருவர் விழுந்த வண்ணம் படமெடுக்கின்றனர். இழிந்த குணமுடைய ஒருவன் சத்தமாகக் கேள்வி கேட்கிறான். நான் மேரியுடன் கதைக்கிறேன்.

(பக்கங்கள் வளரும்)

# அறுபதையும் தாண்டிய ஆசைகள்!

ஹொலிவுட் நடிக, நடிகையர்களிடையே திருமணங்கள் என்பது ஒரு விளையாட்டாகவே இருந்து வருவதைக் காணலாம். திடீரெனச் சந்தித்துத் திடீர்த் திருமணங்களைச் செய்து கொள்ளும் இவர்கள் குறுகிய காலத்தினுள் விவாகரத்தும் பெற்றுவிடுகின்றனர். இது பொதுவாகவே ஹொலிவுட்டில் சர்வ சாதாரணமாகியுள்ளது.

ஹொலிவுட்டில் இடம்பெறுகின்ற திருமணங்களில் முக்கியமாக இரு வித காரணிகளை நாங்கள் காணலாம். அதிலொன்று கணவனோ அல்லது மனைவியோ மற்றவரை விட வயதில் அதிகம் மூத்தவராக இருப்பதாகும். விரைவில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளாமை இரண்டாவது காரணியாகும். இதற்கு ஒரு காரணம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. அதாவது திருமணமாகி விரைவில் குழந்தை பிறந்துவிட்டால் அவர்களால் விரும்பியபோது பிரிந்து செல்ல முடியாதென்பதாகும்.

இது ஹொலிவுட்டின் பழக்க வழக்கங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. இதைத் தாண்டிய ஒரு விடயம், வயது சென்ற நிலையில் தகப்பனாக மாற நினைக்கின்ற ஹீரோக்களைப் பற்றியதாகும். அதாவது இந்தக் கலைக் கணவர்கள் தங்களைவிட வயதில் குறைந்த நடிகைகளை அல்லது பாடகிகளைத் திருமணஞ் செய்துள்ள போதிலும் காலங்கடந்த நிலையிலேயே பிள்ளைகளைப் பெற எண்ணம் கொள்கின்றனர்.

அதாவது, ஐம்பதைத் தாண்டிய நிலையிலும் பிள்ளை ஆசை வருகிறது. இது பற்றிய சில உதாரணங்களை இங்கு காண்போம்.


ஹொலிவுட் சின்னத்திரையில் மிகவும் புகழ்பெற்ற அறிவிப்பாளராகவும் நடிகராகவும் திகழ்ந்துவரும் டெஸ் ஓ கொன்னோர் தற்போது தனது 72ஆவது வயதில் இருந்து வருகின்றார். சுமார் 14 வருடங்களுக்கு முன்பதாக இவர் ஜோட்புரூக் வில்சன் என்பவரைத் திருமணஞ் செய்துகொண்டார். திருமணம் செய்தபோது புரூக்கின் வயது 21 ஆகும். அவுஸ்திரேலிய நாட்டுப் பெண்ணான இவர் புகழ் பெற்ற பாடகியாகவும் சிறந்த பாடலாசிரியராகவும் திகழ்பவர்.

72 வயதைக் கொண்டுள்ள டெஸ் திருமணமாகி 14 வருடங்களைக் கடந்த நிலையில் 35 வயதுடைய தனது மனைவியின் மூலம் குழந்தை ஒன்றை எதிர்பார்த்திருக்கின்றார். குழந்தை எதிர்வரும் டிசம்பர் மாதம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இத் தம்பதிகள் இருந்து வருகின்றனர். தந்தையாவதற்கு அல்லது தந்தைப் பதவியைப் பெறுவதற்கு வயது ஒரு தடையல்ல என டெஸ் கூறுகின்றார். வயதால் முதிர்ந்துள்ளபோதிலும் இளமை தன்னைவிட்டு அகன்று விடவில்லை என்பது அவரது கருத்தாகும். அது மட்டுமல்லாது எதிர்வரும் ஆறேழு வருடங்களில் இரண்டு, மூன்று குழந்தைகளையாவது பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புகளுடன் அவர் இருந்தும் வருகின்றார்.

இதே நேரம் 'ஒன்லி புட்ஸ் என்ட் ஹோசாய்' எனும் திரைப் படத்தில் நடித்துப் புகழ் பெற்றுள்ள டேவிட்ஸன் கூட அண்மையில்தான் தந்தைப் பதவியைப் பெற்றுக்கொண்டுள்ளார். 64 வயதையுடைய ஜில் ஹிக்டிக்லிபி என்பவரைத் திருமணம் செய்துள்ளதுடன் தாங்கள் ஒரு குழந்தைக்குப் பெற்றோர்களாவது தொடர்பில் இருவருமே அளவு கடந்த மகிழ்ச்சியில் காணப்படுகின்றனர்.

புகழ்பெற்ற பிடல்பொப் இசைக் குழுவின் முன்னணிப் பாடகரான சர் போல் மெக்காட்டே அண்மையில் தனது 14ஆவது குழந்தைக்குத் தந்தையாகியுள்ளார். இப்போது அவருக்கு வயது 61. ஆகும். முன்னர் வேறொரு பெண்ணுடன் திருமணமாகி இருந்த இவர் இரண்டாந் தடவையாக 36 வயதுடைய ஹீதர் மில்ஸ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

பிரபல ஹொலிவுட் நடிகரான மைக்கல் டக்ளஸ் (கர்க் டக்ளஸ் எனும் நடிகரின் புதல்வர்) அண்மையில் இரண்டாம் தடவையாகத் திருமணம் செய்து தற்போது இரு குழந்தைகளுக்குத் தந்தையாகியுள்ளார்.



டெஸ் ஓ சோன்னோர்- ஜோட் (72- 35)

மைக்கல் டக்ளஸ்- கெத்தலின்ஷரின்டா ஜோன்ஸ்

டேவிட்- ஜில் (61- 64)

பெற்றோர்கள் வயதடைந்த நிலையில் பிள்ளைகள் பெற்றுக்கொள்வதானது பெற்றோர்களது அதிர்ஷ்டமாகும் என்பது மைக்கலின் கருத்தாக உள்ளது.

33 வயதுடைய நிகொல்டேமென் டோவானி என்பவரைத் திருமணம் செய்துள்ள 68 வயதுடைய ஒபேரா பாடகர் லூசியானோ பவரொட் அண்மையில் தான் ஒரு பெண் குழந்தைக்குத் தந்தையாகியுள்ளார்.

60 வயதைத் தாண்டிய நிலையிலேயே ரொக் பாடகர் மைக் ஜெக்கர் தனது 7ஆவது குழந்தைக்குத் தந்தை என்ற ஸ்தானத்தைப் பெற்றுக்கொண்டார். தான் ஒரு தந்தையாவதில் வயது ஒருபோதுமே தடையாக இருந்ததில்லை என்கிறார் மைக். மேலும் இரண்டு, மூன்று குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய கால அவகாசம் இருப்பதாகவும் இவர் கூறுகின்றார்.

ஹொலிவுட் திரையுலகில் புகழ்பெற்ற நடிகரான என்டனி குவீன் தொடர்பாக நீங்கள் அறிந்து வைத்திருப்பீர்கள். இவர் கூட பல பெண்களைத் திருமணம்செய்து கொண்டவராவார். இறுதியாக அவர் தனது செயலாளராகக் கடமையாற்றிவந்த கெதி பென்விக்கை திருமணம் செய்தார். இதன்போது என்டன் குவீனின் வயது 79 ஆக இருந்தது. 80 வயதைத் தாண்டிய நிலையிலேயே இவர் இரு குழந்தைகளுக்குத் தந்தையானார். ஹொலிவுட்டின் வயது முதிர்ந்த தந்தை என இவர் அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

தற்போது 72ஆவது வயதைக் கொண்டுள்ள பிரபல நடிகரும் இயக்குநருமான க்ளின்ட் ஈஸ்ட்வுட் நான்காவது குழந்தைக்குத் தந்தையாகும்போது 65ஆவது வயதைக் கொண்டிருந்தார். இவர் டயனா என்பவரைத் திருமணம் செய்துகொண்டுள்ளார் என்பதும் இவர்களது கடைசி மகள் தற்போது 7ஆவது வயதைக் கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இப்படியான வயது முதிர்ந்த தந்தைமார்கள் அனைவருமே, வயது முதிர்ந்த நிலையில் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதுதான் அதிர்ஷ்டம் என்கின்றனர்.

ஆனால், பெண்கள் வயது முதிர்ந்த நிலையில் தாய்மை அடைவது அவர்களது உடல் நிலைக்கு உகந்ததா, இல்லையா? என்பது பற்றிப் பல ஆய்வுகள் இப்போது வெளியாகி வருகின்றன. அது பற்றிப் பிரிதொரு சமயம் பார்ப்போம்.

– பாரூக் –

# தமிழ் தலைவர்கள் சரியான நேரத்தில் சரியான முடிவை எடுக்கத் தவறியதால் தமிழர் நிலை தாழ் நிலையானது!

இலங்கைத் தமிழர்களின் நீண்ட கால அரசியல் வரலாற்றை ஆய்வுக்குட்படுத்தினால் அது யானை தன் தும்பிக்கையால் தன் தலையில் மண் அள்ளி வைத்த கதையாகவே வருகிறது. 1924ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசாங்கம் சுதேசிகளையும் அரசியலில் உள்வாங்க முன்வந்தது. அப்போது இருந்த தேசாதிபதி மானிங் என்பவர் பெரும்பான்மைச் சிங்களவரில் 13 பேரையும் சிறுபான்மை யோரில் 7 பேரையும் சட்ட நிர்ணய சபை உறுப்பினர்களாகத் தேர்ந்து, பிரித்தானிய குடியேற்ற நாட்டமைச்சருக்குச் சிபார்சு செய்தார். இச் சிபார்சை சிறுபான்மையோர் ஏற்க மறுத்து, குடியேற்ற நாட்டு அமைச்சுக்குத் தங்கள் கோரிக்கையைச் சமர்ப்பித்தார்கள். சிறுபான்மை, பெரும்பான்மை மக்களின் பல முறையீடுகளையும் ஒப்புநோக்கிய குடியேற்ற நாட்டு மந்திரி சிறுபான்மை யோரில் 17 பிரதிநிதிகளையும் பெரும்பான்மையோரில் 16 பிரதிநிதிகளையும் கொண்ட சட்ட நிர்ணய சபையைச் சிபாரிசு செய்தார். அச் சபை தன் நிருவாகத்தை ஆரம்பித்தது.

இந்த நிர்ணய சபையைச் சிங்களவரால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம், சிங்களவர்கள் நாட்டில் பெரும்பான்மை; மற்றைய இனங்கள் சிறுபான்மை. இந்த அடிப்படையில் சிறுபான்மை இனத்தவர்கள் தங்களை ஆளுவதா? என்ற பொறாமை காய்ச்சலாகியது. அதுவே சிறுபான்மை - பெரும்பான்மை மோதலாகி - சிறுகச் சிறுக வளர்ந்து இனவெறியாக இன்று பரிணாமமடைந்துள்ளது. இந்த வெறுப்பும் வெடிப்பும் விஸ்வரூபமெடுத்தது. அதன் பிரதிபலிப்பு டொனமூர் அரசியல் விசாரணை சபையாக வந்தது. இந்தச் சபையிலே சிங்களத் தலைவர்கள் சிறுபான்மையோரின் மேலாதிக்கத்தைத் தவிர்ப்பதற்காக சிறுபான்மையோர் பெரும்பான்மையாக வாழும் வடகிழக்கை இணைத்து - ஒரு அரசியல் அலகை தமிழர்களுக்காகவும் - மேற்கையும் தெற்கையும் இணைத்துக் கரையோரச் சிங்களவர்களுக்காக ஒரு அரசியல் அலகையும் - மத்தியையும் அதை அண்டிய பகுதிகளையும் இணைத்து மலைநாட்டுச் சிங்களவருக்கு ஒரு அரசியல் அலகையும் கொண்ட ஒரு இணைப்பாட்சித் திட்டத்தை முன்வைத்தார்கள்.

இந்தக் கோரிக்கையை அன்றிருந்த தமிழ்த் தலைவர்கள் தங்கள் அறியாமையாலும் தூர நோக்குக் குறைவாலும் - சாணக்கியமின்மையாலும் தட்டிக் கழித்தார்கள். அது தலையால் வந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளிய முட்டாள்தனமாகும். அதில் மட்டும் முட்டாளாகவில்லை. அதன் பின் டொனமூர் சிபாரிசுகள் அமுலாக்குவதானால் அது சட்ட



இரா. சம்பந்தர் மாவை சேனாதிராஜா ஆனந்த சங்கரி

நிர்ணய சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அந்த சட்ட நிர்ணய சபையில் சிறுபான்மையோ, பெரும்பான்மையோ அந்த டொனமூரின் சிபாரிசைத் தோற்கடிக்கும் பலம் தங்கள் கையில் இருந்தும் வெண்ணெய் திரண்டுவரும்போது, இரு சுய இச்சை கொண்ட சிறுபான்மைப் பிரதிநிதிகளின் துரோகத்தால் சோரம் போன இனம் தமிழினம். அன்று சிங்கள இனம் தர முன்வந்த வட - கிழக்கை ஏற்றிருந்தால் இன்று சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ்ப் பிரதேசங்கள் பறிக்கப்பட்டிருக்க மாட்டா. பெரியதொரு வட - கிழக்குப் பிரதேசம் நம் கையிலிருந்திருக்கும். அதையும் நம் அகங்காரத்தாலும் ஆணவத்தாலும் இழந்தோம். அதைத் தொடர்ந்து மீண்டும் ஒரு சந்தர்ப்பம் சோல்பரி அரசியல் சீர்திருத்த உருவத்தில் வந்தது. அதிலாவது சாணக்கியமாக புத்திசாதுரியமாக இணைப்பாட்சியை கேட்போம் என்று நினைக்காமல் 50க்கு 50 என்ற கோரிக்கையை முன்வைத்து, மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது போல் அழுங்குப் பிடி பிடித்தார்கள். அதிலும் சிங்களவர்கள் இறங்கி வந்தார்கள். ஐம்பதிற்கு ஐம்பதை விட்டு, ஐம்பத்தைந்தை சிங்களவருக்கும் 45ஐ தமிழருக்கும் பங்கிடுவோம் என்று இறங்கி வந்தார்கள். அதையும் இந்தத் தமிழ்த் தலைவர்கள் உதாசீனம் செய்தார்கள். உதைத்துத் தள்ளினார்கள். அன்று சிங்களவர்கள் ஒத்துக்கொண்ட 45 பிரதிநிதிகளையும் ஏற்றிருந்தால் சுதந்திர இலங்கையின் முதல் பிரதமராக ஒரு தமிழரே இருந்திருப்பார்.

அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் தொகை 101. இதில் 95 பிரதிநிதிகளே மக்களால் தெரிவு செய்யப்படுகின்றவர்கள். மற்றைய ஆறு பேரும் பிரதமரின் சிபாரிசில் தேசாதிபதியால் தெரிவு செய்யப்படுகிறவர்கள். முதல் தேர்தலில் ஐ.தே. கட்சி 32 ஸ்தானத்தையே பெற்றது. ஆனால், தமிழர்களுக்கு சிங்களவர்கள் வழங்க முன்வந்த 45 பிரதிநிதிகள் திட்டத்தை ஏற்றிருந்தால் - முதல் பாராளுமன்றத்தில் 45 பேர் வந்திருப்பார்கள். நியமன எம்.பிக்கள் ஆறுபேரையும் இணைத்தால் 51 பிரதிநிதிகள். எனவே, பிரதமர் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருந்திருப்பார். நம் தலைமுறையிலே நாமே மூன்றாவது பெரும் சந்தர்ப்பத்தையும் தட்டிக் கழித்து - தமிழினத்துக்குப் பாரிய தவறை - என்றும் அழியாத் துரோகத்தை இழைத்துக் கொண்டுள்ளோம்.

மூன்றாம் முறையாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபை ஆட்சிமுறை கொண்டுவரப்பட்டது. அதுவும் வட - கிழக்கு இணைந்த மாகாணமாகத் தமிழருக்குக் கிடைத்தது. அதை நம்மில் சிலர், தங்களையும் இணைத்துப் பேச்சுவார்த்தையும் ஒப்பந்தமும் செய்யவில்லை என்பதற்காக எதிர்த்தோம். பலன் 18,000க்கு மேற்பட்ட நாளைய தலைவர்களை இழந்தோம். சுமார் 75,000க்கு மேற்பட்ட அப்பாவி மக்களை இழந்தோம். பல்லாயிரக்கணக்கான கோடிச் சொத்துக்களை இழந்தோம். அதோடு அகதியானோம். அகிலமெல்லாம் கையேந்தவும் ஓடெடுக்கவும் வைக்கப்பட்டோம். இந்திய - இலங்கை ஒப்பந்த மேற்பட்டபோது மக்கள் விடுதலை முன்னணி இன்றைய அளவு வளரவில்லை. ஹெல உறுமய இருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் மூச்சுக்காட்டவில்லை. இவ்வாறு கைக்கெட்டியதைக் வாய்க்கெட்டாமல் ஆக்கும் தன்மை தமிழரின் பிறவிக் குணமாகும்.

இவ்வளவும் நடந்ததன் பின் 2000.8.3 ஆம் திகதி ஒற்றையாட்சியை மாற்றி பல்லினமும் வாழும் நாட்டுக்கான ஒருவித அத்திவாரத்தை இடும் நோக்கோடு பிரதேசங்களின் ஒன்றியம் என்ற அரசியல் திட்டத்தை சந்திரிகா ஆட்சி கொண்டு வந்தது. அதையே 54 வருடங்களாக ஒற்றையாட்சித் திட்டத்தை மாற்ற வேண்டும் என்று போராடிய தமிழர் கூட்டமைப்பு தங்கள் கொள்கை கனிந்து பழம் நழுவிப் பாலில் விழும்போது - பாலையே தட்டிக் கவிழ்த்து துரோகிகள் பட்டியலில் சிறுபான்மைக் கட்சிகளான தமிழர் கூட்டணி - இ.தொ.காங்கிரஸ் - மலையக மக்கள் முன்னணி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன பதிவு செய்து ஆவணமாக்கியுள்ளன.

போன புத்தி யானை கட்டாது - போய்விட்ட பேருந்துக்குக் கை காட்டுவது கடைந்து எடுத்த முட்டாள்தனம். பட்டுப்பட்டு பெறுவதுதான் சிறந்த அநுபவமென்பார்கள்.

ஆனால், அதேவேளை மீண்டும் மீண்டும் விட்டுவிட்டுக் குட்டு வாங்குவது அடி முட்டாள்தனம். இதுவரை அரசியல் - அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட அல்லது தானாகவே எடுத்துக்கொண்ட தலைவர்கள், தம் நலத்தை முன்னிறுத்திச் செயற்பட்டு தம் அகங்காரத்தாலும் அகம்பாவத்தாலும் தமிழ் மண்ணைப் பறி கொடுத்து - தமிழர்களைச் சிதைத்துச் சீரழித்துவிட்டார்கள். இனிமேலும் அதைத் தமிழினம் தாங்காது.

எனவே, இனி ஒரு விதியை நாம் செய்ய வேண்டும். இன்றைய யதார்த்த நிலையில் அரசு தமிழர்களின் நிலையை அணுக முன்வருகிறது. ஆனால், அரசின் பலம் 106 ஆகும். தமிழர்களின் கட்சிப் பலம் 33. நமது பிரச்சினைதான் நமக்குத் தேவை. ஐ.தே.கட்சி இந்த நாட்டை 34 வருடங்கள் ஆண்டு தமிழர்களை ஓட்டாண்டியாக்கிய கட்சி. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனி அலகு கேட்கும் கட்சி. தனது 34 வருட கால ஆட்சிக் காலத்தில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்பாத ஐ.தே.கட்சியோடும், தனக்கொரு தனி அலகுதான் வேண்டும் என்று நிற்கிற முஸ்லிம் காங்கிரஸோடும் தமிழரசுக் கட்சி கூட்டுச் சேர்ந்தது எந்த வகையில் நியாயமாகும். தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உதவாத ஐ.தே. கட்சிக்கு முட்டுக் கொடுப்பதை விட இந்த அரசியல் திட்டத்தை மாற்றவும் நம் பிரச்சினையைத் தீர்க்கவும் முன்வரும் அரசுக்குத் தன் பலத்தை அளித்தால் ஆட்சியின் பலம் 139 ஆகும்.

**- ஜனகன் -**

சாத்தியமான வழிக்கு ஆதரவு வழங்கி, நாட்டுக்கு அமைதியையும் மக்களுக்கு நிம்மதியையும் தரச் சிறுபான்மைக் கட்சிகள் முன்வர வேண்டும்.

இன்று பிரச்சினையைத் தீர்க்கும் ஆட்சிப் பலமும் சர்வ அதிகாரப் பலமும் ஒரே இடத்தில்தான் உண்டு. அவர்களோடு இணைந்து நல்ல முறையில் பேரம் பேசி, நமக்குச் சாதகமானால் நம் பலத்தை அவர்களோடு இணைத்து, சமாதானத்தைக் காண்பது - இல்லையானால் 1960ஆம் ஆண்டு டட்லி ஆட்சியைக் கலைத்தது போல இவர்கள் ஆட்சியையும் கலைத்து விடுவது. ஆக்கவும் அழிக்கவும் நம் கையில் பலமுண்டு.

---

# வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினை; பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வேண்டும்.

**வே**லையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்படுவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் கண்டனம் தெரிவித்து கடந்த இரண்டாம் திகதி அம்பாறை தமிழ், முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தாலும் யாழ்ப்பாணத்தில் அரசாங்க செயலகத்தின் முன்னால் மறியல் போராட்டமும் நடத்தப்பட்டுள்ளது. அம்பாறையில் கடைகள் பூட்டப்பட்டு, வீதிப் போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டு, பாடசாலைகள் அரசாங்க அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவை செயலிழக்கச் செய்யப்பட்டு வெற்றிகரமாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இதனால் நிந்தவூர், கல்முனை, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, மருதமுனை, பாண்டிருப்பு, திருக்கோயில், பொத்துவில், காரைதீவு ஆகிய தமிழ், முஸ்லிம் பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டனவெனச் செய்திகள் தெரிவித்தன.

> **அம்பாறை மாவட்டத்தில் 195 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் 138 பேர் சிங்களப் பட்டதாரிகளும் ஏனைய 57 பேர் மட்டுமே தமிழ், முஸ்லிம் பட்டதாரிகளென்றும் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் சுட்டிக்காட்டியிருப்பது உண்மையானால், நியமனத்தில் இன ரீதியான பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறதென அவர்கள் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டு நியாயமானதென்பதை எவரும் மறுக்க முடியாது.**

இதேவேளை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட மறியல் போராட்டம் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்தது. அம்பாறையில் இன ரீதியாகவும் மூப்பு அடிப்படையைக் கவனத்திலெடுக்காமலும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கில் அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, கல்முனை, நிந்தவூர், பொத்துவில், சம்மாந்துறை, லஹுகல, திருக்கோயில், இறக்காமம், சாய்ந்தமருது, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து ஒரு பட்டதாரியேனும் வேலை வாய்ப்புக்கெனத் தெரிவு செய்யப்படவில்லையென்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.பி.ஹசன் அலி சுட்டிக்காட்டியுள்ளார். இதனை வெறுமனே 'அரசியல் ஸ்டன்ட்' என்று தட்டிக்கழித்துவிட முடியாது. அம்பாறை மாவட்டத்தில் 195 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் 138 பேர் சிங்களப் பட்டதாரிகளும் ஏனைய 57 பேர் மட்டுமே தமிழ், முஸ்லிம் பட்டதாரிகளென்றும் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் சுட்டிக்காட்டியிருப்பது உண்மையானால், நியமனத்தில் இன ரீதியான பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறதென அவர்கள் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டு நியாயமானதென்பதை எவரும் மறுக்க முடியாது.

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெளியிட்ட 'ரட்ட பெரட்ட' (நாட்டை முன்னோக்கி) என்ற விஞ்ஞாபனத்தில் 25 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு மூன்று மாதங்களுக்குள் வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்று உறுதியளித்திருந்தது. பின்னர் 27 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென்றும் பின்னர் 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டது. இரண்டு கட்டங்களாக இந்த வேலை வாய்ப்புகள் வழங்கப்படுமென்றும் இதற்கு முன்னோடியாகத் தெரிவு செய்யப்படும் பட்டதாரிகளுக்கு இரண்டு வருட காலப் பயிற்சி வழங்கப்படுமென்றும் பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ஆறாயிரம் ரூபா கொடுப்பனவாக வழங்கப்படுமென்றும் அரசாங்கம் அறிவித்திருந்தது. இரண்டு வருட காலத்தின் பின்னர் இவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இப்போது இப் பயிற்சிக் காலத்தை ஒரு வருட காலமாக்குவதற்கான யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. பிரதேச செயலகங்களூடாகவே விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதனடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலையே கடந்த வாரம் நிதியமைச்சு வெளியிட்டிருந்தது. எனவே, மூப்பு அடிப்படையில் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படவில்லையென்றும் இன ரீதியாகப் பாரபட்சம் காட்டப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டை வெறும் வெற்றுவேட்டுப் பிரச்சினையென்று தட்டிக்கழித்துவிட முடியாது. இது குறித்து நிதியமைச்சின் மீதோ அல்லது அரசாங்கத்தின் மீதோ பழியைப் போட முடியாவிட்டாலும் பாரபட்சம் இடம்பெறவில்லையென்று எவரும் கூற முடியாது. முதல் தொகுதியாக வெளியிடப்பட்ட பெயர்ப் பட்டியலில் ஒழுங்கீனங்கள் இடம்பெற்றுள்ளதாகச் சிங்களப் பட்டதாரிகளும் கண்டனங்கள் தெரிவித்துள்ளதையும் நாம் கவனத்திலெடுக்க வேண்டும். பட்டம் பெற்று வெளியேறிய மூப்பு அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் பட்டதாரிகள் விடுத்திருக்கும் கோரிக்கை மிகவும் நியாயமானதென்பதை எவரும் ஏற்றுக்கொள்வர். பத்து வருடங்களுக்கு மேலாக வேலையின்றி அல்லாடும் பட்டதாரிகள் தொடர்ந்தும் அவல வாழ்க்கையைச் சந்திக்க, நேற்றுப் பட்டம் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவது அநியாயமானதுதான். இங்கே அரசியல் செல்வாக்கு மற்றும் அரச அதிகாரிகளின் விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப தெரிவுகள் நடைபெற்றுமிருக்கலாமென்பதும் உண்மையே. அரசாங்கத்தின் வேலை வாய்ப்புக் கொள்கையை அமுல்படுத்தும் அரசு இயந்திரத்தை வழிநடத்தும் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்திருந்தால் அது கண்டிக்கப்பட வேண்டியதாகும். அது மட்டுமல்ல. அடுத்த இரண்டாம் கட்டத் தெரிவில் இத்தகைய பாரபட்சங்களும் ஊழல்களும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்க மாட்டாரென்ற நிலை இனிமேலும் இடம்பெறக் கூடாதென்பதே பாதிக்கப்பட்ட பட்டதாரிகளின் கோரிக்கையாகும்.

இந்த விடயம் குறித்து கிழக்கில் அமைச்சர் பேரியல் அஷ்ரப் நிதியமைச்சர் சரத் அமுனுகமவின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். இதே போன்று வடபகுதிப் பட்டதாரிகளின் பிரச்சினையும் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இத் தேசியப் பிரச்சினையைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெற எதிர்க்கட்சிகள் பகீரதப் பிரயத்தனம் செய்வதையும் அரசாங்கம் கவனத்திலெடுக்க வேண்டும். இம் மாதம் பத்தாம் திகதி பட்டதாரிகளுக்கான தொழிற்பயிற்சி ஆரம்பிக்கப்படவிருப்பதால் பாதிக்கப்பட்ட பட்டதாரிகளின் கோரிக்கையை ஏற்று, தெரிவுப் பட்டியல் மீளத் திருத்தப்படக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. சில வேளைகளில் இறுதி நேரத்தில் தெரிவுப் பட்டியல் இரத்துச் செய்யப்பட்டுப் புதிய பட்டியல் தயாரிக்கப்படுமா என்பதற்கான சாத்தியம் மிகக் குறைவாகவே உள்ளது.

எது எப்படியாயினும், வேலையில்லாத் திண்டாட்டமென்பது பாரிய எரியும் பிரச்சினையாகும். அதிலும் குறிப்பாக வருடக்கணக்காக வேலையின்றி வாழும் பட்டதாரிகளின் பிரச்சினை பூதாகரமானது. ஆங்கில மொழியறிவோ அல்லது தொழில்நுட்பக் கல்வியறிவோ, கணினி அறிவோ இல்லாத கிராமப்புற சுயமொழிப் பட்டதாரிகளே மிக மோசமாகப் பாதிக்கப்படுகிறார்களென்பதை நாம் கவனத்திலெடுக்க வேண்டும். எனவே, முதற் கட்டப் பட்டதாரிகள் தெரிவில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளனவாவென்று விசாரணைகள் நடத்தப்பட்டுச் சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதன் மூலம் இனியும் இவ்வாறான பாரபட்சங்கள் நிகழாதவாறு தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனெனில் இது வயிற்றுப் பிரச்சினை. வாழ்வுப் பிரச்சினை.

**-யாதவ்-**





சக்தி தனக்கே உடைமை யாக்கு - அதில்
சக்திசிவ நாதநித்தம் - ஒலிக்கும் - அகம்
சக்தி தனக்கே உடைமை யாக்கு - அது
சக்திதிரு மேனியொளி ஜ்வலிக்கும்.

-சுப்பிரமணிய பாரதியார்

# கெட்டிக்கார முயலின் கதை


## பாப்பா முரசு சிறுகதை

ஓர் அடர்ந்த காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. அது பலசாலியானதால் மிகக் கர்வமுடையதாக இருந்தது. அது தன் கண்ணில் தென்படும் மிருகங்களை எல்லாம் உணவிற்காக மட்டுமல்லாது விளையாட்டிற்காகக்கூடக் கொன்று விடும்.

அதனால் அந்தக் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் மிகக் கவலை கொண்டு இது குறித்து கலந்து விவாதித்தன. அவையெல்லாம் சேர்ந்து சிங்கத்திடம் சென்று பேசுவது என்று தீர்மானித்தன. அவை சிங்கத்தை சந்தித்து, "ஐயா, தங்கள் உணவிற்காக ஒரு மிருகத்தைக் கொல்வதை விடுத்து, நீங்கள் ஏன் எல்லா மிருகங்களையும் கொல்ல வேண்டும்? எங்களை நிம்மதியாக வாழவிடுங்கள். உங்கள் பசிக்கு உணவாக ஒரு நாளைக்கு ஒரு விலங்கு என்று தவறாமல் நாங்கள் அனுப்புகிறோம்!" என்று கூறின.

"சரி! நீங்கள் ஒவ்வொருவராக வரவில்லை என்றால், உங்கள் அனைவரையும் நான் கொன்று விடுவேன். ஜாக்கிரதை!" என்று சிங்கம் ஒப்புக் கொண்டது.

அதனால் விலங்குகள் எல்லாம் ஒன்று



கூடி தினசரி ஒரு விலங்கை சிங்கத்திற்கு அனுப்பி வந்தன.

இப்படியிருக்கையில், ஒரு நாள் சிங்கத்தின் உணவாக ஒரு முயல் செல்ல வேண்டிய முறை வந்தது. அந்த முயல் தன் நண்பர்கள் அனைவரிடமும் பிரியாவிடை பெற்று மெதுவாக சிங்கம் இருக்கும் இடம் தேடிப் போனது. அப்படிப் போகையில் இந்த சிங்கத்தைச் சிறு முயலாகிய தான் எவ்வாறு வெல்ல முடியும் என்று யோசித்துக்கொண்டே சென்றது.

வழியில் அது ஒரு கிணற்றைக் கண்டது. உடனே முயல் அந்தக் கிணற்றின் அருகில் சென்று அதனுள் எட்டிப் பார்த்தது. அப்போது கிணற்றிலுள்ள நீரில் அதனுடைய உருவம் தெரிந்தது.

'ஆகா! சிங்கத்தை வெல்லும் வழியை இப்போது நான் கண்டு பிடித்து விட்டேன்!' என அது மகிழ்ச்சியுடன் எண்ணிக்கொண்டது.

அது சிறிது நேரம் அங்கேயே சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தது. இவ்வாறு சில மணி நேரம் கழிந்தது. அதன் பிறகு மெதுவாக சிங்கம் இருந்த குகைக்குச் சென்றது.

அதைக் கண்ட சிங்கம் ஆத்திரத்துடன் "ஏய் என்ன இத்தனை தாமதம்?" என்று உறுமியது.

"என்னை மன்னித்து விடுங்கள் மன்னா!" அது போலியாக நடுநடுங்கிக் கொண்டே "நான் தாமதமாக வந்தது என் தவறல்ல!" என்றது.

"என்ன நடந்தது? உண்மையைச் சொல்! யார் உன்னைத் தடுத்தது?" என்று சிங்கம் சினத்துடன் கேட்டது.

"நான் மிகவும் சிறியவன் ஆதலினால், மற்ற மிருகங்கள் எல்லாம் சேர்ந்து என்னுடன் வேறு சில முயல்களையும் அனுப்பி வைக்கத் தீர்மானித்தன. நாங்கள் உங்கள் குகையை நோக்கி வந்துகொண்டிருக்கும்பொழுது, ஒரு பெரிய குழியிலிருந்து பெரிய சிங்கம் ஒன்று பாய்ந்து வந்து, நாங்கள் எல்லோரும் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்று கேட்டது. நாங்கள் மன்னருக்கு உணவாகச் சென்று கொண்டிருக்கிறோம் என்று கூறினோம். அதற்கு சிங்கம், இந்தக் காடு தனக்குச் சொந்தமானது என்றும், இங்குள்ள மிருகங்களைக் கொன்று தின்பதற்கு தனக்கு மட்டுமே உரிமை உண்டு என்றும் கூறியது". என்று முயல் அஞ்சுவது போல் நடித்துக் கொண்டே சொன்னது.

"அப்படியா! இதோ இப்போதே அவனைப் பார்த்து, இந்தக் காட்டிற்கு யார் ராஜா என்பதை அவனுக்குத் தெரியப்படுத்துகிறேன்" என்றது சிங்கம்.

"மன்னா! ஜாக்கிரதை! அது பாதுகாப்பான குழியில் இருக்கிறது!" என்று முயல் எச்சரித்தது.

"அது பற்றி எனக்குக் கவலை இல்லை." அவன் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டு!" என்று சிங்கம் சொன்னது.


முயல் கிணறு இருக்கும் இடத்திற்குச் சிங்கத்தை அழைத்துச் சென்றது.

"மன்னா! அது உங்களைப் பார்த்தவுடன் இந்தக் குழியினுள் மறைந்து கொண்டது" என்று முயல் கூறியது.

பிறகு சிங்கத்திடம் அந்தக் கிணற்றைக் காட்டியது. கிணற்றினுள் எட்டிப் பார்த்த சிங்கம் தண்ணீரில் தன்னுடைய உருவத்தைப் பார்த்தது. அது தன்னுடைய நிழல் என்று அதற்குத் தெரியவில்லை. பின்னர் அது பயங்கரமாகக் கர்ஜித்தது. அதன் கர்ஜனை பயங்கரமாக எதிரொலித்தது. உடனே சிங்கத்திற்குக் கடுமையான ஆத்திரம் வந்தது. அது கிணற்றினுள் பாய்ந்தது. பாவம், நீரில் மூழ்கி இறந்தது.

உடனே முயல் இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை சக மிருகங்கள் அனைத்துக்கும் தெரிவித்தது. அன்றிலிருந்து அங்கிருந்த விலங்குகள் அனைத்தும் அச்சமின்றி ஆனந்தமாக வாழ்ந்தன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.08.2004

வர்ணம் தீட்டும் போட்டி இல: 556
தினமுரசு வாரமலர்
த. பெ. இல. 1772.
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 554

**பரிசுக்குரியவர்:**
கமிலஸ் கிரித்திகன்,
தந்தை செல்வா பாலர் பாடசாலை, பண்டாரிகுளம்,
வவுனியா.

### பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| எம்.எச். அமானி, 2ஆம் வகுப்பு கஹட்டபிட்டியா முஸ்லிம் விததியாலயம், கமபளை. | ஜே.அனுஜா, தரம் 6, நஸ்ரியா மத்திய கல்லூரி, சிலாபம். |
| பா.சிறீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை. | எம்.சஜீத் அஹமட், 15/14 கொமன் ரோட், அட்டாளச்சேனை. |
| எம்.சிந்துஜா, 35/4 பி.சே. மண்டல மாவத்த, பெரியமுள்ளை, நீர்கொழும்பு. | சி.வைஸ்ணவி, சுதுமலை தெற்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம். |
| ஜெ.காயத்திரி, 'மதிபதி' தரம் 6, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய். | அருட்செல்வம் செந்தூரன், கலைவாணி பாலர் பாடசாலை, 246, அன்புவழிபுரம், திருகோணமலை. |
| ஆர்.உமேஷ் மதுஷாந்த், ப/சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், தரம் 2பி, பதுளை. | க.பா.கீர்த்தனா, அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி. |

# நான்கு குழந்தைகள்



எங்கள் வீட்டில் குழந்தைகள்
என்னைச் சேர்த்து நான்கு
பேர்.

தங்கைப் பாப்பா ஒன்று.
சமர்த்துப் பையன் இரண்டு.
சின்னக் கண்ணன் மூன்று.
சிரிக்கும் முருகன் நான்கு.
உண்மைதான்!


தங்கைப் பாப்பா மீனா.
சமர்த்துப் பையன் நானே.
சின்னக் கண்ணன் எங்கே?
சிரிக்கும் முருகன் எங்கே?

எங்கே என்றா கேட்கிறீர்?
இங்கே வந்து பாருங்கள்.
எங்கள் பூசை அறையிலே
இருக்கி றாரே இருவரும்!

அம்மா தினமும்
சொல்லுவாள்
அவர்கள் தெய்வக்
குழந்தைகள்!

# அதிசய உலகம்

## சாமுராய் நண்டு



**ஜப்பானை ஒட்டிய கடல் பகுதியில் 'ஹய்கே' என்று ஒருவகை நண்டு உயிர் வாழ்கிறது. இதன் மேற்புறம் - ஓட்டுப் பகுதி - மனித முகம் மாதிரி இருக்கும்.**

**இதற்கு ஒரு கதை சொல்லப்படுகிறது.**

**சாமுராய் வீரர்களில் ஹெய்கே, கென்ஜி என்று இரண்டு பிரிவுகள். 1185 ஏப்ரல் 24ஆம் திகதி இந்த இரு பிரிவினருக்கும் இடையே கடற்போர் நடந்தது. ஹெய்கே பிரிவு தோற்றுவிட்டது.**


**தோல்வியுற்ற ஹெய்கே வீரர்கள் நண்டுகளாக மாறிவிட்டனர் என்று ஜப்பானிய மீனவர்கள் நம்புகிறார்கள். அதனால்தான் இந்த நண்டுகளின் ஓடு மனித முகம் போலத் தெரிகிறதாம்.**

# உங்கள் பொது அறிவு எப்படி?

1. ஆபிரிக்காவில் உயர்ந்த மலை எது?
   - கிளிமஞ்சாரா மலை.
2. இலங்கையின் சுற்றளவு யாது?
   - 25,000 சதுர மைல்.
3. எஸ்கிமோவரின் வசிப்பிடம் எது?
   - வட துருவம்.
4. லாமாக்களின் வசிப்பிடம் எது?
   - தீபெத் (சமயத் தலைவர்களுக்கு அப்பெயர்)
5. வியன்னா எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?
   - டான்யூப்.
6. இலண்டன் எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?
   - தேம்ஸ் நதிக்கரை.
7. கல்கத்தா எந்த நதிக்கரையில் அமைந்துள்ளது?
   - கங்கை.
8. கிம்பர்ளி வைரச் சுரங்கம் எங்குள்ளது?
   - தென் ஆபிரிக்கா.
9. தாஜ்மஹால் எங்குள்ளது?
   - இந்தியா (அக்ராவில்)
10. கிரெம்ளின் எங்குள்ளது?
    - சோவியத் ரஷ்யா.

# தகவல் பெட்டி








நியூசிலாந்து, பாற் பொருட்கள் உற்பத்திக்குப் பேர் போன நாடாகும். அங்கு பண்ணை ஒன்றிலிருந்து ஆறு வருடத்திற்கு முன்பு வழி தவறி காணாமல் போன செம்மறி ஆடு இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் மலைப்பகுதியில் இந்த ஆட்டின் நடமாட்டம் காணப்பட்டதாகப் பொதுமக்கள் கூறியதை அடுத்தே பிடிபட்டது. உரோமம் வளர்ந்த நிலையில் ஆட்டுக்கு முகம் மட்டுமே வெளியில் தெரிந்தது. இதுவரை காலமும் வளர்ந்த உரோமம் இருபத்தேழு கிலோ நிறையுள்ளதாக இருந்தது. இந்த உரோமத்தால் தயாரிக்கப்படும் கம்பளி ஆடைகள் சுமார் ஒன்பது பேர் அணியக் கூடியவையாக இருக்கும் எனக் கூறுகின்றனர். படத்தில் உரோமத்தோடும், உரோமம் வெட்டிய பிறகும் காணப்படுகின்றது கண்டுபிடிக்கப்பட்ட ஆடு.

## வழி தவறிய ஆடு




## சான்ட்விச் சாதனை

உலக சாதனைக்காக மெக்சிக்கோவில் புதிய முயற்சி ஒன்றை எடுத்திருந்தார்கள். 3,178 கிலோ நிறையுள்ள சான்ட்விச்சை தயாரித்து உலக சாதனையை நிலை நாட்டினார்கள். சுமார் 350 பேர் இச்சாதனையைப் புரிவதற்காக இரவு, பகல் பாராமல் உழைத்திருக்கிறார்கள். சான்ட்விச் பிரியர்களுக்குச் சுவையான செய்தி.






## வியக்க வைத்த நம்மவர்கள்!

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டா"மென்று முன்னோர்கள் சொல்வார்கள். நம்மவர்களும் அப்படித்தான். இலங்கையின் போர் நடவடிக்கைகள் காரணமாக உலக நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து வாழும் நம் உறவுகள் ஆங்காங்கு கோயில்களைக் கட்டி கலாசாரம் பேணுவதோடு மட்டுமல்லாமல் மன அமைதி தேடி கோயில்களிலே அதிக நேரத்தைச் செலவிடுகின்றனர். கனடாவில் ரொறன்டோவில் பல கோயில்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ரொறன்டோ நகருக்கு அண்மையிலுள்ள ரிச்மன்கில் நகரிலுள்ள பிள்ளையார் கோயிலில் திருவிழா நடைபெற்றபோது கந்தசாமி ரவீந்திரன் என்ற பக்தர் துலாக்காவடி எடுத்ததையே இங்கு காண்கின்றீர்கள். கனேடிய நாட்டவர்களுக்கு இவ்வாறான வேண்டுதல் நிகழ்வுகள் பெரும் வியப்பாய் அமைந்தது. இதை வெளிப்படுத்தும் முகமாக கனேடியப் பத்திரிகைகள் மேற்படி செய்திக்கு முன்னுரிமை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. என்னதான் புலம்பெயர்ந்து போய்விட்டாலும் தமிழையும், வழிபாட்டு முறையையும் பேணிப் பாதுகாக்கும் நம்மவர்கள் சொந்த மண்ணில் எப்போது கால் பதிக்கப் போகிறார்கள் என்பது விடை காண முடியாத வினாவாகிப் போயுள்ளது.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

(பட உதவி : மயில்வாகனம் கந்தையா, மார்க்கம், கனடா)

# இலங்கையில் காட்சிகளாகும்



ஜெய் ஆகாஷ்
மிஷா

தற்போது இந்திய சினிமாவில் ஒவ்வொரு காட்சியையும் புதிது புதிதாகக் காட்சிபடுத்த வேண்டிய தேவை அதிகரித்திருக்கிறது. இந்தியாவில் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கு சென்று காட்சிகளைப் படமாக்கிக்கொள்வது கட்டாயத் தேவையாக இருக்கின்றது. அந்த வகையில் தற்போது படமாகிக்கொண்டிருக்கும் இந்திய-இலங்கை கூட்டுத் தயாரிப்பான 'செவ்வேல்' திரைப்படக் குழுவினர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அவர்களை முரசு வாசகர்கள் சார்பில் நாம் சந்தித்தபோது பல சுவாரஸ்யமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. படத்தின் இயக்குநர் ப்ரிமூதாஸ், சண்டைப் பயிற்சி இயக்குநர் சூப்பர் சூப்பராயன், கதாநாயகன் ஜெய் ஆகாஷ் மற்றும் நடிகை வடிவுக்கரசி எனப் பலரையும் தனித்தனியாகச் சந்தித்த விடயங்களை அடுத்தடுத்த முரசில் எதிர்பார்க்கலாம். இவ்வாரம் நம்மவரும் 'செவ்வேல்' திரைப் படத்தின் கதாநாயகனுமான ஜெய் ஆகாஷ் அவர்களோடு சில மணித் துளிகள்.



இயக்குனர்: பிரிமூஸ் தாஸ்

### இயக்குநர் ப்ரிமூதாஸ்

சாதாரண லைட்மேனாக சினிமாவுக்குள் நுழைந்து சிறந்த கெமராமேனாகத் தன்னை வளர்த்துக்கொண்டவர். சுமார் 25 வருடங்கள் சினிமாத் துறையில் இருந்துவரும் இவர் முதன்முறையாக கதை, திரைக்கதை, டைரக்ஷன், தயாரிப்பு, இயக்கம் எனஅனைத்துப் பொறுப்புக்களையும் தன்னகத் கொண்டு செதுக்கிக்கொண்டிருக்கும் முதல் படம் 'செவ்வேல்'. இலங்கையின் அழகை இந்தியக் கதைக்கு எப்படிப் பொருத்திப் பார்ப்பதென மனதுக்குள்ளேயே பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் இவர் முரசுக்காக ஒதுக்கிய சில நிமிடங்கள் அற்புதமானவை. அவை மிக விரைவிலேயே வாசகர்களுக்காகப் படைக்கப்படும்.

### 'செவ்வேல்' திரைப்படத்தின் நாயகி மிஷா.........

ஹிந்திப் படங்களில் அறிமுகமாகி மூன்று திரைப் படங்களில் நடித்துள்ளார். தமிழில் அறிமுகமாகும் முதல் படம் என்று கூறும் அவர், தமிழ் சினிமா இன்டர்ஸ்ரியில் வேலை செய்வது தனக்கு நல்ல அநுபவமாக இருக்குமென்றும், சக பணியாளர்களும் மிகவும் ஒத்துழைப்பாக நடந்துகொண்டார்கள் என்றும் தெரிவித்தார். தனக்குப் பிடித்த நடிகர் சூப்பர் ஸ்டார் ரஜினி என்று குறிப்பிட்ட அவர், நடிகை யார் என் பதைக் கூற மறுத்துவிட்டார். வைஜந்திமாலாவைப் போல் வர வேண்டுமென்ற ஆவலை வெளிக் காட்டினார். எந்த நடிகையைப் போல் எதிர்பார்க்கலாம் என்று கேட்டதற்கு எவரைப் போலும் அல்லாமல் நான் மிஷாவாகவே இருந்துவிட விரும்புவதாகக் கூறினார்.



ஜெய்

## வணக்கம் ஜெய் ஆகாஷ்.
## வணக்கம்!

**தமிழ்த் திரைப் படங்களை விடவும் தெலுங்குத் திரைப் படங்களிலேயே அதிக அக்கறை காட்டிவருகிறீர்களே?**

'ரோஜாவனம்' திரைப்படத்தில் நான் அறிமுகமானேன். இரண்டு ஹீரோ சப்ஜெக்ட் அது. அதனாலயோ என்னவோ அவ்வளவா பேசப்படல்ல. தெலுங்கில பத்து படத்துக்கு மேல பண்ணியாச்சு. ஒன்னு ரெண்டத் தவிர மற்றதெல்லாம் வெற்றிப் படங்கள். இதுதான் பிரதான காரணம்.

**நீங்க அண்மையில நடிச்ச 'ராமகிருஷ்ணா' திரைப் படம் தமிழ்ல ஒரு இடத்தப் பெற்றுத் தருமா?**

அநேகமா பெற்றுத் தரும் என்றே நம்புறன். அதத் தொடர்ந்து இப்ப 'செவ்வேல்' பண்ணிக்கிட்டு இருக்கன். இதுக்கு அடுத்ததா 'குருதேவா' அப்படிங்கிற படம் பண்ணுறன். இது தமிழ்லயும், தெலுங்கிலயும் ஒரே நேரத்தில எடுக்கிறாங்க. நான் ஒரு தமிழன் என்ற வகையில் தமிழ் இரசிகர்களையும் தமிழ் படங்களையும் நான் வெறுக்கல்ல. 'ராமகிருஷ்ணா' வெற்றியத் தருமெண்டு நம்புறன்.

**இப்ப இருக்கிற இளம் கதாநாயகர்களோட உங்களுடைய போட்டியாளர்கள் யாரெண்டு நினைக்கிறீங்க?**

இல்லைங்க, எனக்கு யாரும் போட்டியில்ல, நானும் யாருக்கும் போட்டியாளர் இல்லை. என்ன நம்பி படம் பண்ணுற தயாரிப்பாளர்களுக்கு நஷ்டம் வராமல் இருக்கணும்கிறதுதான் எங்களுடைய எய்ம்.

**உங்களுக்கு சினிமாவில நடிக்கணும்னு விருப்பம் வரக் காரணம் என்ன?**

சொல்லும்படியா ஒண்ணுமில்லை. லண்டனில படிக்கிறப்போ டான்ஸ்ன்னா ரொம்பப் பிடிக்கும். அதுக்காக நிறைய சினிமா பாப்பேன். ஆனந்தபாபு ஆடினா அத மாதிரி ஆடுவேன். இதப் பாத்து நெருக்கமானவங்க சினிமாவுக்குப் போகச் சொல்லுவாங்க.



வடிவுக்கரசி

**நீங்க சினிமாவுக்கு வர்றத உங்கட குடும்பத்தினர் விரும்பினாங்களா?**

அப்பாவுக்கு கொஞ்சம் விருப்பம் இருந்திச்சு. அம்மா, அக்கா ரெண்டு பேருமே விரும்பல்ல.

**உங்ளுக்கு முதல் வாய்ப்பு எப்படிக் கிடைச்சது?**

தற்செயலா ஒரு நாள் சுஹாசினி மேடத்தோட வெப்சைட் பாக்கிறப்போ நடிக்க விருப்பம் இருந்தா விவரத்த அனுப்பச் சொல்லி கேட்டிருந்தாங்க. அனுப்பி வச்சன். அதுக்கு அப்புறம் கோயில் விஷேசமா இந்தியாவுக்கு வந்தபோது மணிரத்னம் சாரையும் பார்த்தேன். இப்படி பல தடவைக்குப் பிறகு 'ரோஜாவனம்' திரைப் படத்துக்கு நடிக்கச் சொல்லிக் கேட்டாங்க.

**இப்ப நடிக்கிறவங்கள்ல உங்களுக்கு யாரைப் பிடிச்சிருக்கு?**

நான் எம்.ஜி.யாரோட ரசிகன். அதுக்கப்புறமா வித்தியாசமா கேரக்டர் பண்ணிறதால கமலஹாசன் சாரைப் பிடிக்கும். இப்ப விக்ரம் நல்லா பண்ணுறாரு.

**சினிமாவில ஜெயிக்க முடியுங்கிற நம்பிக்கை உங்களுக்கு வந்திருக்கா?**

விக்ரம் பல வருசங்களுக்கு முன்பே நடிக்க ஆரம்பிச்சு இண்டைக்கு மாஸ்க் ஹீரோவாக ஜெயிச்சிருக்கிறாரு. அவரோட இந்த வளர்ச்சி எனக்குள்ளேயும் நம்பிக்கையை தந்திருக்கு. நிச்சயமா ஜெயிப்பேன்.

**சினிமா வட்டாரச் செய்திகளின்படி அங்கவீனமான, உடல் ஊனமானவர்களுக்கு உதவுவதற்காக புதிய திட்டங்களை வகுத்து வருவதாக உங்களைப் பற்றி செய்தி அடிபடுகிறதே?**

ஆமாங்க, அது தற்செயலான ஒரு முடிவோ அல்லது ஒரு பிரபலத்துக்கான விஷயமோ இல்லை. எனக்கு இயல்பாகவே மத்தவங்களுக்கு உதவி பண்ணணும்னு நிறைய விருப்பமிருக்கு. அதுக்கு ஒரு பிரதான காரணமும் இருக்கு. என்னோட அப்பாவுக்கு பக்கவாதம் நோய் இருக்கிறதால அந்த வேதனையைப் புரிஞ்சு கொள்ள முடியும். பொதுவா வெளிநாட்டில எல்லாம் இப்படியானவங்களுக்கு பிரேத்தியேக கவனிப்பு இருக்கு. இந்தியாவில அப்படி இல்ல. என்னோட கவனம் திரும்ப இதுதான் காரணம்.

**இலங்கையில யுத்தத்தால பாதிக்கப்பட்டிருக்கிறவங்களுக்கு உங்களுடைய உதவி கிடைக்குமா? அதற்கான ஆரம்பங்கள் ஏதாவது செய்திருக்கிங்களா?**

ஒண்ணும் ஆரம்பிக்கல்ல. உதவி பண்ணணுங்கிற விருப்பம் இருக்கு. தற்சமயத்துக்கு என்னோட வருமானம் இப்ப பண்ற வேலைகளுக்கே போதுமானதாக இருக்கு. இன்னும் நிறைய சம்பாதிக்கிறபோது நிச்சயமா உதவுவேன்.

**இதற்கு முன் இலங்கைக்கு வந்திருந்தபோது விஜய் குறித்த உங்களது பேட்டிகள் பலத்த விமர்சனங்களை ஏற்படுத்தியிருந்ததே?**

அதை ஞாபகப்படுத்தி கேட்டதுக்கு நன்றி. அந்த செய்தியில நான் பேசாத விஷயங்களை சில ஊடக நண்பர்கள் திரிபுபடுத்தி வெளியிட்டிருந்தாங்க. அதுவே சில கசப்பான அநுபவத்தை ஏற்படுத்தியது. முதல் முதலில் இலங்கைக்கு வந்திருந்த விஜய்க்கும் அவரது மனைவிக்கும் மேற்படி பத்திரிகை செய்தி ஏற்படுத்திய தாக்கம் என்னை அதிகக் கவலைக்குட்படுத்தியிருந்தது. உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்ட ஊடக நண்பர்களே குழப்பங்களுக்கு காரணமானவர்கள். அந்த விடயத்தில் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டவர்களுக்கு இந்தச் செய்தியை தெரிவிக்க வாய்ப்பு தந்த உங்களுக்கு நன்றி.

**எந்த நடிகை தற்போதைக்கு நல்லா நடிக்கிறதா நினைக்கிறீங்க?**

த்ரிஷா + சினேகா.

**இலங்கையில் சமாதான முயற்சிகள் கேள்விக்குறியாகியுள்ள நிலையில் ஒரு இலங்கையர் என்ற வகையில் என்ன நினைக்கிறீங்க?**

என்னைப் பொறுத்தவரைக்கும் யாரும் யாருக்கும் தொந்தரவு பண்ணாம ஒவ்வொருவரும் சுதந்திரமா வாழ்ற உரிமையக் கொடுக்கணும். வெகு சீக்கிரமாகவே இலங்கையில சமாதானம் வரணும்ங்கிறதே என்னோட விருப்பம்.

**ஜெய் ஆகாஷ'க்கு திருமணம் எப்ப?**

அடுத்த வருஷம்.

**நீங்களா பாத்துகிட்டீங்களா, இல்லாட்டா வீட்டாக்கள் பார்த்திருக்கிறாங்களா?**

எனக்கு விருப்பமானத வீட்டுக்காரங்க பேசியிருக்காங்க.

அடுத்த தடவை தம்பதி சகிதம் சந்திப்போமென நல்வாழ்த்துக் கூறி விடைபெற்றோம்.

# செவ்வேல் திரைப்படம்




## சினிவிசிட்

### ‘செவ்வேல்’


ஆகாஷ்

ஒரு தகப்பனுக்கும் மகனுக்கும் இடையே நடக்கும் போராட்டமாக வித்தியாசமான கதையம்சத்தைத் தாங்கி இலங்கை, பிரான்ஸ், லண்டன், இந்தியா போன்ற நாடுகளில் படமாக்கப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில் நுவரெலியா, கண்டி, காலிமுகத்திடல், மாலபே மிலேனியம் சிட்டி, தெஹிவளை போன்ற இடங்களில் காட்சிகள் திரைப் படமாக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் தீபாவளிக்குத் திரைக்கு வருமென எதிர்பார்க்கலாம்.

### வடிவுக்கரசி

‘செவ்வேல்’ திரைப் படத்தின் தாதா பெண் வேடம் தரித்து வித்தியாசமான கேரக்டரை நடிக்க இருக்கிறேன். இதுவரை நான் ‘முதல் மரியாதை’, ‘அருணாச்சலம்’ போன்ற திரைப் படங்களில் வில்லத்தனம் காட்டும் ஒரு நடிகையாக நடித்திருந்தேன். அவற்றிலிருந்து இது வேறுபட்டிருக்கும். தவிரவும், முதல் தடவையாக இலங்கைக்கு வந்தி ருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு கூறிய வடிவுக்கரசி முரசுக்காக வழங்கிய பேட்டியை அடுத்தவாரம் எதிர்பார்க்கலாம்.

### ஸ்டன்ட் மாஸ்டர் சூப்பர் சூப்பராயன்

இவர் “சுமார் 25 வருடங்களாக ஸ்டண்ட் மாஸ்டராகப் பணியாற்றி வருகிறேன். இன்றைக்கு சினிமாவில் இருக்கக்கூடிய எல்லா நடிகர்களுக்கும் ஸ்டண்ட் மாஸ்டராகப் பணியாற்றியிருக்கிறேன் என்பது எனக்கு எப்போதும் மனநிறைவைத் தருகின்ற விஷயம். ‘செவ்வேல்’ திரைப் படத்துக்காக நான்கு சண்டைக் காட்சிகள் இலங்கையிலேயே படமாக்கப்படுகின்றன. அப்படி ஒரு சண்டைக் காட்சியில் முரசு செய்தியாளர்களை சந்திப்பதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகிறேன்” எனக் கூறினார். சாதாரணமாக ஒரு ஸ்டண்ட் மாஸ்டர் என்றில்லாமல் பல விடயங்களை அவரிடம் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. அடுத்தடுத்த வாரங்களில் அது பற்றிப் பார்க்கலாம்.

### ஒருங்கிணைப்பாளர் பாவல்

‘செவ்வேல்’ திரைப் படக் குழுவினர் இலங்கை வந்திருக்கின்ற விடயத்தை முரசுக்குத் தெரிவித்து முரசு வாசகர்களுக்கு விருந்தளிக்க உதவியவர். கூடிய வேலைப்பளு காரணமாக அவரோடு நேரத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாமல் போயிற்று. என்றாலும் எதிர்வரும் காலங்களில் அவரோடு இணைந்து பல சினிமாச் செய்திகளை உங்களுக்குப் படைக்க முடியுமென நம்புகின்றோம்.

### ஸ்டண்ட் போய்ஸ்

மாஸ்டர் சூப்பராயனின் குழுவினர்களான இவர்கள் எம்மோடு பேசும்போது தங்களைப் போன்ற கலைஞர்களுக்கு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்கள். தவிரவும் இலங்கை விவகாரங்கள் குறித்து நிறையவே கருத்துக்களைக் கூறினார்கள். எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் பாரபட்சமற்ற வாய்ப்புத் தருபவர்கள் என்ற ரீதியில் இந்த இளைஞர் குழாம் பற்றிய தகவல்களை அடுத்த முரசில் சிறப்பாய் தருகிறோம்.

### நடேஸ்

‘செவ்வேல்’ திரைப் [illegible]த்தின் வடிவுக்கரசியின் [illegible]ப்பாது காவ[illegible]ாக கையில் கத்தி [illegible]ாடு நின்றிருந்த [illegible]ரைச் சந்[illegible]தோம். அ[illegible]ரைப் பார்த்[illegible]து சிரிப்பு அ[illegible]க்க முடி[illegible] ... நடி[illegible] [illegible]படி [illegible]மையாய் [illegible]கைத்தார். ‘அடிதடி’ திரைப் படத்தில் சத்யராஜின் உதைகளை எல்லாம் தாங்கிக்கொண்ட ந[illegible] அவர்களை நேரில் சந்தித்து அத் திரைப் படத்தின் ஞாபகங்களைப் பகிர்ந்துகொள்வதையிட்டு [illegible] பெரும் மகிழ்ச்சியடைந்தார்.


நடேஸ்

ஜெய் ஆகாஷ்

### துணுக்கு


விதவிதமான .:பாரின் உ.பா. பாட்டில்களை சேகரித்து வருகிறார் தமாசு நடிகர் பாண்டு. இதைக் கொண்டே தன் கெஸ்ட் ஹவுஸை இன்டீரியர் டெகரேஷன் செய்யப் போகிறாராம்.

## சுள்ளான்

‘திருமலை’ திரைப்படத்திற்குப் பிறகு ரமணா இயக்கும் இரண்டாவது திரைப்படம். திருமலையை வெற்றிப் படமாக்கிய அவர், தொடர் வெற்றிக்காகப் போராடியிருக்கிறார். தனுஷின் நெருங்கிய நண்பர் என்பதாலோ என்னவோ, தனது இரண்டாவது படத்தை தனுஷை வைத்து இயக்கியிருக்கிறார். படத்தின் பெயருக்கும் தனுஷ்க்கும் நெருக்கம் இருந்தாலும் கதையின் பருமனுக்கும் தனுஷ்க்கும் இடைவெளி தெரிகிறது. ஒவ்வொரு காட்சியிலும் தனுஷ்க்குப் பட்டப் பெயர்கள் சொல்லப்படுவதும், அதற்கு அவர் வசனம் பேசுவதும் சிம்புவை ஞாபகப்படுத்துகிறது. அறிமுகநாயகி தொலானி கண்ணுக்குக் கவர்ச்சி. நகைச்சுவையில் தனுஷ் சிரிக்க வைக்கிறார். “குருவிக் கூட்டுக்குள் இன்னொரு குருவி தங்க தற்போதைக்கு இடமில்லை” என்று வசனம் பேசி தனது நடிப்புக்கு மெருகு சேர்த்திருக்கிறார் சின்னத்திரை நாயகி ஈஸ்வரிராவ். வில்லன் பசுபதி வழமையான அதே ஸ்ரைலில் தனது வில்லத்தனத்தை காட்டியிருந்தாலும் ஒரே மாதிரியானவை என்பதால் சொல்லும்படியாக இல்லை. வித்யாசாகர் ‘கில்லி’யைத் தொடர்ந்து சுப்பர் ஹிட் பாடல்களைத் தருவேன் எனச் சொல்லி அடித்திருக்கிறார். சண்டைக் காட்சிகள் யதார்த்தத்துக்கு மீறியவையாக முகம் சுழிக்க வைக்கின்றன. கனதியான கதை என்பதால் தனுஷ் திக்குமுக்காடிப் போகிறார். வெற்றிப்பட நாயகன் என்பதால் ‘சுள்ளானு’ம் எதிர்பார்ப்புகளைத் தரக்கூடும். கடைசிக் காட்சியில் ‘விருமாண்டி’க்காகப் போடப்பட்ட சிறை வளாகம் மீண்டும் ஒருமுறை நமது பார்வைக்குள் வந்து போகின்றது. வேகம் நிறைந்திருந்தாலும் விவேகம் அவ்வளவாக இல்லை. சுள்ளான் யதார்த்தமில்லை.

தேசிய விருதுக்காகப் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டிருக்கும் ‘பிதாமகன்’ படத்துடன், இந்தப் படத்தைப் பல தடவைகள் பார்த்துத் திறனாய்வு செய்து தயாரித்த ஒரு ஆய்வுக் கட்டுரையையும் அனுப்பி வைத்துள்ளார் பாலா. ஆய்வுக் கட்டுரையைத் தயாரித்தவர்கள் கிராமிய புகழ் தம்பதிகள் விஜயலட்சுமி - நவநீதகிருஷ்ணன் ஜோடி.

‘அரவிந்தன்’ படத்தை இயக்கிய நாகராஜ் இப்போது ‘அகரம்’ என்ற படத்தை டைரக்ட் செய்கிறார். இதில் ‘புன்னகைப் பூவே’ நந்தா ஹீரோ. அவருக்கு ஜோடியாக நடிக்கிறார் ‘ர்தீப்.


சண்டைக்காட்சி




## தேர்தல்

சந்தி சிரிக்கும் - சகல
திசைகளிலும்
சத்தம் ஒலிக்கும்
வேலிச்சுவர் வெள்ளைக் கலர்
உடுக்கும்
பாதி வீட்டுமதில்
படங்களால் பரிமாணமடையும்!

தொப்பைகள் வீதிகளில்
தொடர்ந்து வரும்
குப்பையும் கூளமும்
கொள்கையாய் கொடியுயர்த்தும்!

கறுப்பு பணம் கைமாறும்
கழுத்தறுப்புக்களும் உருமாறும்
பொறுப்புக்கள் நெருப்பாகும்
செருப்புக்களும் பதம்பார்க்கும்!

வண்டிகள் வலம் வரும்
சண்டித்தனங்கள் பலம் பெறும்
மண்டிகள் மதிப்பாகும்
மக்கள் வாக்கொன்றே தீர்வாகும்.

யூ.எல்.எம்.நஜீப்.



## தூண்டில் காரி..!

மின்மினியின் வயிற்றுள்
பதுங்கிக் கிடக்கும்
ஒளித் துளியாய்

கண்ணுக்குள் நீ
காதல் பதுக்கி வைத்திருக்கிறாய்!

வெளியே விடு....
நீளும் என் இரவுகளுக்கு
விடிவு வேண்டும்.

ஒரு மழைக்காலத்து
மத்தியானத்தில்
என் விழி வீதியில்
குடை பிடித்து
குறு நடை பயின்றாய்.....

நகர யாசகனாய்
நனைந்து கொண்டிருந்தேன் நான்!

மௌனித்து
நீ
பயணித்தாய்
வளையல்
பேசிச் சென்றன என்னோடு.....

உன்
காதுச் சிமிக்கியின்
சிணுங்கல் தாலாட்டில்
கண்ணுறங்க ஆன்மா
காத்துக் கிடக்கையில்

ஓய்வின்றி ஒலிக்கும் உன்
கொலுசொலியில்
இமைகள் வெட்டப்பட்ட என்
இதயம்
துயிலின்றித் துடிக்கிறது.

நீ
சம்மதமில்லையென்று போன
சந்திப்பிலிருந்து
நரக வேதனையோடுதான்
எனது
நாட்கள் நகர்கின்றன.

நாணலைப்போல்
வளைகிறேன்
நீயோ.....
இரும்பாகவே இருக்கிறாய்!

அன்பே
உன் கார் குழல் தூண்டிலில்
குத்தப் பட்டிருக்கிறது
புழுவாய் என் வாழ்க்கை!

கட்டாரிலிருந்து ரோஷான் ஏ.ஜிப்ரி.

## ஒரு முறையேனும்....



காங்கேசன் வீதியிலே - நான்
கண்டெடுத்த முத்து - நீ
விடுகதை போட்டு விடை தேடி
நீ வந்த வேளை - உன்
விடுகதை புரியா பேதையாய்....

விழிகள் தொடும் தூரம் வரை
உன்னைத் தேடி அலைகின்றேன்.
நீ சென்ற பாதையும் புரியவில்லை;
தூரத்தின் எல்லையும்
தெரியவில்லை.

தனியே தவிக்கவிட்டு
எங்கே வாழ்கிறாய்?
உயிர் பிரிவதற்குள்
ஒரு முறையேனும்
என் எதிரில் வந்துபோ....

விமலா, வெள்ளவத்தை.


## மல்லுக்கட்டும் மனசு

விரகத் தீயில் நீ
வைத்துவிட்டுப்போன
காய்ந்த
விறகுகள் பற்றி எரிகின்றன.
வியர்வை வற்றி பின்
வியர்வை ஊறி
விஸ்வரூபம் தெரிகின்றன.

இனி எல்லா இரவுகளும்
எனக்கு
அக்கிரமங்கள் பண்ணும்.
அமாவாசை தினங்களில்
ஆயுளுக்குப் பேய்
பிடிக்கும்.

தவிப்பேன்
தனியே பாலில் பரவி
தலையணைக்கும்
தாங் கொண்ணா என் வலி.

நீயில்லாத இரவுகள்
நரகமெனக்கு
நீ தொடாத கணங்கள்
சாபங்கள் மொழிபெயர்த்த
சரித்திரமெனக்கு.



பனிப்போரின் உக்கிரத்தில்
வெள்ளை இரத்தத்தில்
விகசிக்கும் சாவு இடம் பெயரா
விடியற்காலத்தில்
இனிப் போரெதற்கெனக் கேட்டு
வழமை போலவே ஆன்மா
வம்புக்கிழுக்கின்றது.

நீர்த்துளியுள்ளே குடித்தனம்
செய்வதாய்
நினைவுகள்
காற்றின் வேகத்துக்கும்
கட்டுப்படுவதாயில்லை.

இப்னு காசீம், கிண்ணியா - 05.

## ஓ... நீர்வீழ்ச்சியே!



அழுது புலம்பிக்கொண்டிருக்கும்
இந்த அநாதை
நீர்வீழ்ச்சியைப் பார்த்து
என் எழுத்துகள்
புறப்பட்டுப் போகின்றன
ஆறுதல் சொல்வதற்கு.

ஒதுக்கப்பட்ட ஓரினத்தின்
அவலத் தழும்புகளாய்
இதனது இதயத்திலிருந்தும்
வெள்ளமாய் பீய்ச்சப்படுகிறது
வெள்ளைக் குருதி.

இரு நூற்றாண்டுகளாய்
உழைத்தே தேய்ந்த
மலையகத்தார் தேகம்போல்
தலை குனிந்தே
வாழ்வதுதான் உனதும்
தலை விதியோ?

உன்னைப் போலத்தான்
நாங்களும்
ஓயாது ஓடிக்கொண்டிருக்கிறோம்.
நீ மட்டுந்தான்
இதுவரையில்
கரை கண்டிருக்கிறாய்.

சிறு பொழுதுகூட
நீயும்
சிந்தித்துப் பார்ப்பதில்லை
அதனால்தான்
கல்லென்று தெரிந்தும்கூட
முட்டிக்கொண்டு அழுகின்றாய்.

இத்தனை பள்ளத்தில்
வீழ்ந்து
தற்கொலை செய்துகொள்ள
கற்றுக் கொடுத்தது நீதானா?
வேலையென்று போய்
மானமிழந்து வரும்
எங்கள் மாதர்களுக்கு

நீ மட்டுமென்ன
உன் தேகத்தை
அழுக்காக்கித்தானே
கரைகளைச்
சுத்தப் படுத்துகிறாய்?

ஓ..... நீர்வீழ்ச்சியே!
நீயாவது சொல்
என் மக்களுக்கு.

மு.கீர்த்தியன், ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி.



## காத்திருப்புக்கள்



வானத்து வீளக்கு
பௌர்ணமிக் கோலம்
பூண்டு புன்னகைத்தது.....

தேயவும் வளரவும்
அதற்கு மட்டுமே
முடியும்.....

என் தேய்ந்த காலம்
கண்ணில் ஓர்
சமுத்திரத்தை
தருவிக்கிறது....

கல்லைத் தின்றாலும்
சமிபாடடையும் காலம்
ஊர்ந்துவிட்டது.....

கல்வீயென்று
புத்தகம் தின்று
நிறைவு பெற்றது மட்டுமே....
ஞாபகத்தில்....

காலம் வரும் என்ற
காத்திருப்புக்கள்
என் காலத்தைக்
கரைத்துவிட்டது...

காலம் கனியும் என்ற
காத்திருப்புக்களில்
பயனில்லை.....
எதிர் நீச்சல் போடவும்
மனதில் துணிவில்லை.....

எம்.சி.எம்.நபீல், முதலைப்பாளி.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்



வாழ்வும் மொழியும் இசையும்போதுதான் நல்ல கவிதை பிறக்க முடியும்.... ஒரு கவிதை உங்களை ஏதாவது செய்ய வேண்டும். சந்தோஷப்படுத்த வேண்டும். அல்லது கலவரப்படுத்த வேண்டும். குறைந்தபட்சம் வாழ்வைப் பற்றி யோசிக்க வைக்கவாவது வேண்டும்.

ஆனால்......

கவிதைகளை ஏழுதிய ஒருவனது வாழ்வு, புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களின் ஒரு துப்பாக்கிக் குண்டினாலேயே முடித்துவைக்கப்பட்ட அவலம், நம் சமூக மனதை கலவரப்படுத்தவோ யோசிக்க வைக்கவோ 'செய்யாத மானுட நாகரிகம்' தொடர்கிறது.

அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகக் கொண்ட கவியூரன் (இயற்பெயர் மாரிமுத்து இராசலிங்கம்) தன் கவிதை நூலில் தன்னைப் பற்றிச் சொல்லியிருக்கிற சிறு குறிப்பு :


"1981–இருபத்தியொரு வயதில் ஓர் வங்கி ஊழியனாக நான். 1983–ஈழத்தில் கரைபுரண்ட புதுவெள்ளத்தில் அள்ளுண்டு அம்மா அப்பாவிடம் சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டுப் போனவர்களில்....நானும் ஒருவனாய்...புறப்பட்டு...புதையுண்டு போகாது...கரைசேர்ந்தபோது.....1982–பாரதி நூற்றாண்டு கவிதைப் போட்டியில் நான்காவது இடம் கிடைத்ததற்குச் சான்றாய் ஒரு பகவத்கீதை நூல் பரிசாய் என்னை வரவேற்றது. அது இன்னும் காலத்தை வென்ற நிகழ்வு!

எழுதுகோலையும் ஏந்திய கோலையும் கை மாற்றிக்கொண்டேன்...."

என்று குறிப்பிடுகிற கவியூரன் 18.04.2003ஆந் திகதி அக்கரைப்பற்றில் அவரது இரு கைகளையும் இருவர் பிடித்து நிற்க, வீரம் மிக்க தமிழ் மக்களின் போராளிகளாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுவும் தமிழ் விடுதலைக்காகவே என்னும் அருவருப்பான நியாயப்படுத்தல்களை அங்கீகரிப்பது போல மௌனம் சாதிக்கிறது சமூகம்.

கவியூரனின் 'மாற்றான் தாய்ப் பிள்ளைகள்' தொகுப்பிலிருந்து சில கவிதைகள்.



### வெறுமை

தேச விடுதலைக்காய்
நான்
சொல்லாமல் கொள்ளாமல்
புறப்பட்டுப் போனபோது
வீட்டு மூலையில் இருந்தது
தென்னங்கன்று ஒன்று.
அது-
இப்போது
உயர்ந்து நின்று
குலைகுலையாய்
காய்க்கிறது.

தசாப்தம் ஒன்று
கடந்து
திரும்பி வந்து
அண்ணாந்து பார்த்தபடி
நான்
வெறுமையாய்!

### நிவாரணம்

"காணவில்லை"
கண்ணீர்
வடிக்காதே!
காலமெல்லாம்
கலங்கி
நிற்காதே!

விண்ணப்பத்தை
நிரப்பிக் கொள்!
விதானையிடம்
போ!

இத்தனையும்
"இனங்
காணாதவரால்"
நடந்தது
என்பதை
ஒப்புக்கொள்!

தாயே!
இதோ,
உன்
தாலாட்டுக்கும்
தாய்ப்
பாலுக்கும்
கூலி
வாங்கிக்கொள்!

### சொந்தம்

என்
பூட்டனின்
வியர்வைத்துளிகள்
உரமாகிப் போன
மண் எதுவோ - அது
எனக்குச் சொந்தம்!

என் தாய்
விரல்களினால்
என் உதட்டில்
சுள்ளென்று தெறித்தும்
நான்
திரும்பத் திரும்ப
அள்ளித் தின்ற
மண் எதுவோ - அது
எனக்குச் சொந்தம்!

துள்ளித் திரிந்து
விளையாடி
துடுக்காய் கல்லடிபட்டு
கன்னப் பொட்டில் கசிந்த
இரத்தம் பட்டுச்
சிவந்து போன
மண் எதுவோ - அது
எனக்குச் சொந்தம்!

என்றோ ஒருநாள்
அழுகி
நாற்றமடித்து
புழுக்கள் பெருகி
ஊர்ந்து
என் உடலை
உக்க வைக்கப் போகும்
மண் எதுவோ - அது
எனக்குச் சொந்தம்!

### என் வாழ்வு

கணங்கள்
ஊசிகளாய்
இதயப்
பொத்தல்களைப்
புரைந்து கொண்டிருக்க
நாட்களை
நகர்த்திக்
கொண்டிருக்கிறேன்.

உயிருக்கு
ஒரேயொரு முறை
மரணமா?
இல்லை...
எத்தனை பிறவிகள்
எடுத்தாகி விட்டது
சொர்க்கமும்
நரகமும்
வெவ்வேறு
உலகமல்ல
இங்குதான்.


பஞ்சின்
மென்மையினை
அறிந்துதான்
தீயும்
பற்றிக் கொள்கிறதோ,
மென்மையான
இதயங்களில்தான்
வேதனை
படர்வதுபோல்.....

பருவச் சிலிர்ப்பில்
மொட்டவிழும் பூக்கள்
பூத்து....
மணம் வீசி...
மீண்டும்
மலரும் என்பது
நியதியானால்
நானும்
வாழ்வேன்.

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி




பெயர் : சி. சிவமயூரன்
வயது : 21
முகவரி : 7ஆம் வட்டாரம், குமுளமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர் : ச. ஜெகன்
வயது : 20
முகவரி : 7ஆம் வட்டாரம்,குமுளமுனை, முள்ளியவளை, முல்லைத்தீவு.
பொழுதுபோக்கு : வழமையானவை



பெயர் : ப. கவிதா
வயது : 24
முகவரி : Abdallah-Zalatimo, P.O Box-5266, Amman-11183, Jordan.
பொழுதுபோக்கு : பத்திரிகை, தொலைக்காட்சி.




பெயர் : M.Vadivel
வயது : 30
முகவரி : Al Seal, P.o. Box-3657, Doha-Qatar.
பொழுதுபோக்கு : பத்திரிகை, ரி.வி, கதைப் புத்தகம்.

# லேடிஸ் ஸ்பெஷல்

# நாம் நல்ல நண்பர்களா?

எமது வாழ்வில் நாம் நல்ல நண்பர்களைப் பெற வேண்டும் என்ற ஆசை எம் மனதில் தோன்றும்போது ஒன்றை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும். அது என்னவென்றால், நல்ல நண்பனுக்கு ஏற்ற தகுதிகள் நம்மிடமும் இருக்கிறதா என்பதேயாகும். ஒரு நண்பனைப் பெறுவதற்கு நீ ஒரு நண்பனாயிருப்பது ஒன்றே வழியாகும். நண்பர்கள் நட்பின் இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்று எண்ணும்போது இதே எண்ணம் நம்மைப் பற்றியும் அவருக்கு ஏற்படும். எண்ணத்திற்கு ஏற்றது போலவே நட்பும் அமையும். எண்ணத்தில் தூய்மையும் ஒழுங்கும் இருந்தால், இதே விதத்தில் தான் நண்பருடைய எண்ணமும் இருக்கும். நாம் நல்ல நண்பராக இருக்க முயன்றால் நம்முடன் சேரும் நண்பர்களும் நிச்சயம் நல்லவர்களாக இருப்பார்கள். மனப்பூர்வமான பற்றுதலுடன் யாருடனும் தொடர்புகொள்ளாமல் போலித்தனமாகப் பழகினால் நம்முடைய பண்புகளுக்கு ஏற்றபடிதான் நண்பர்கள் கிடைப்பார்கள் என்பதை என்றும் நினைவில் வைக்க வேண்டும். நல்லதொரு நண்பனோ நண்பியோ நமக்கு வேண்டுமானால் நம்முடைய குணநலன்களைச் சீர்திருத்திப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். தாய், தந்தை, சகோதரர்களின் இரத்த உறவுக்கு அப்பாற்பட்டவர்கள் நண்பர்கள்! ஆபத்திலிருந்து நம்மைக் காப்பாற்ற ஒருவர் உதவி செய்து ஆபத்திலிருந்து விடுவிக்கும்போது அவர் எமக்கு உற்ற நண்பராக மாற முடியும். நம் அருகில் சில நண்பர்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் நமக்கு இருக்காது. ஆனால் அவர்கள் இக்கட்டான வேளையில் நமக்கு ஆதரவு அளிக்கும்போது நாம் அவர்கள் மேல் வைத்திருக்கும் தவறான கருத்து முற்றிலும் மாற்றம் பெற்று உயர்வான எண்ணம் தோன்றும். அப்போது முதல் நம்முடைய வாழ்க்கையில் அவர் முக்கிய பங்கு வகிக்கும் உண்மையான நண்பராக



மாறுவதைக் காண முடியும். நம்முடைய மனம் நட்புக்கு முதலிடம் அளிக்கக் கூடியதாக இருக்கட்டும். நாம் மற்றொருவர் மீது செலுத்தும் அன்புச் செடியிலிருந்து நட்பு என்ற உன்னதமான மலர் மலர முடியும். இது ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு மணம் பரப்பும். நாம் அடுத்தவருக்கு அன்புக் கரத்தை நீட்டாமல் நட்புக்கொள்ள முடியாது. அன்பைக் கொண்டுதான் அன்பைப் பெற முடியும். நண்பர்களையும் ஆதரவாளர்களையும் பெற முடியும். நாம் குறுகிய நோக்கமும் தன்னலமும் கொள்ளமல் இருக்க வேண்டும். பரந்த எண்ணமும் தாராளத் தன்மையும் கொண்டிருப்பது மிகவும் முக்கியம். இந்த இரண்டு குணமுமே நட்பைப் பலப்படுத்தும்.

இதற்காகவே நம்முடன் பலரும் நட்புக்கொள்ளப் பாதை போட்டு வழி காட்டும். நட்புக்கு வேண்டியது மலர்ந்த முகமும் அன்பாகப் பழகும் சுபாவமும், நம்மைக் கண்டவுடன் சிறிது நேரமாவது கதைக்க வேண்டும் என்ற ஆசை தோன்ற வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அருகில் இருப்பவர்களுடன் கலகலப்பாக அன்பாகப் பழகச் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கக் கூடாது. எல்லோரிடமும் மனம் விட்டுப் பழகும்போது நிச்சயமாக நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள், அதற்காக ஒருவரைப் பகைத்து, இன்னொருவருடன் உறவு வைப்பது, மற்றவர்களின் மனநிலையைப் பாதிப்பதாக அமையும். ஆகவே, என்றும் எல்லோரிடமும் சமமாகப் பழகும் விதத்தை நம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும். அப்போது என்றும் எப்பொழுதும் எல்லோர் மனதிலும் இடம் பிடித்துவிடலாம்! வாழ்வும் இனிய பூஞ்சோலையாக மாறிவிடும்.

— இலக்சியா —

# தடை ஏதும் இல்லை

ஒவ்வொரு பெண்ணிடமும் தான் தாய்மை அடைய வேண்டும்; தான் ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட வேண்டும் என்ற எண்ணம் இருக்கும்.

இத்தகைய எண்ணத்தை விடவும் தனக்குக் குழந்தை பிறக்கவில்லை எனில் தன் குடும்பமும், இந்தச் சமுதாயமும் தன்னை மலடி என அழைக்கும் என்ற பயம் மேலோங்கி இருக்கும்.

இன்று நாம் விஞ்ஞானத்திலும் மருத்துவத்துறையிலும் மிகப் பெரும் சாதனை படைத்து, எத்தனையோ அரிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்து வருகிறோம். ஆனாலும் இன்று நம்மிடையே நோய்களின் எண்ணிக்கையும் மிகப் பெரும் அளவில் பெருகிக்கொண்டே வருகிறது. நோய்களின் தாக்கத்தால் அல்லது உடல் மனநிலைக் குறைபாட்டால் இத்தகைய நிலை மிகப் பெரும் அளவில் பெருகி வருகிறது.



இதில் பெண்களுக்குக் கருத்தரிக்க இயலாமைக்கான காரணங்கள் பற்றிப் பார்ப்போம்.

சரியான நேரத்தில், சரியாக மாதவிலக்கு உண்டாகாமல் இருப்பது, எப்.எஸ்.எச் எனப்படும் ஹார்மோன் மிக அதிகமாகச் சுரப்பது, மாதவிலக்கு வராததுடன் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சுரப்பது, கர்ப்பப் பையில் கட்டி, உடலுறவில் சிக்கல், காப்பர் – டி போன்ற கருத்தடைச் சாதனங்களைச் சரியாகப் பயன்படுத்தாததால் ஏற்படும் கிருமித் தொல்லை, அறுவைச் சிகிச்சை போன்றவற்றால் கருக்குழாயில் சேதம் ஏற்பட்டிருப்பது, ஹார்மோன் மாற்றங்கள், புரோலாக்டின் அதிகமாகச் சுரப்பது, பிட்யூட்ரி, ஹார்மோன் பிரச்சினைகள், புற்றுநோய் மருந்துகள், அதிகப்படியான கருத்தடை மாத்திரைகள், சில மனநோய் மருந்துகள், இரத்தக் கொதிப்பு மற்றும் குடல் நோய்க்குத் தரப்படும் சில மருந்துகளும் கருமுட்டை வளர்ச்சியைப் பாதிக்கும். இது தவிர செக்ஸ் பிரச்சினைகளினாலும் ஐந்து சத வீதத்தினர் கர்ப்பமடைய முடியாமல் போகின்றனர்.

இப்படியாக ஒரு பெண் தாயாக முடியாமைக்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன.

மேற்கண்ட தடைகளில் ஒரு சிலவற்றைக் குணமாக்க இயலும்.

உடம்பில் உண்டாகக் கூடிய குழந்தை பெறும் தன்மை இல்லாக் குறையானது சில வருடங்களில் தனக்குக் குழந்தை இல்லையே; அதற்கான வாய்ப்பும் இல்லையே என நினைத்து நினைத்து அதுவே மாபெரும் மனக்குறையாக ஆகிவிடுகிறது.

சில குடும்பங்களில் உள்ளவர்கள் தங்களுக்குக் குழந்தை இல்லாத குறையைப் பெரிய குறையாக எடுத்துக் கொள்வதில்லை. தங்களுக்கு வாரிசு வேண்டும்; குழந்தை வேண்டும் என நினைத்து அனாதைக் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்துக்கொண்டு சந்தோஷத்தை அநுபவித்து வருகின்றனர்.

# மார்புக் கோளாறுகள்

பெண்களுக்கு உபாதை அளிக்கும் இன்னொரு முக்கியமான உறுப்பு மார்பு. மார்பில் குழந்தைகளுக்குத் தரும் இயற்கையான பால் சுரப்பிகள் ஆரோக்கியமாக வேலை செய்து கொண்டிருந்தால் நோய் எதுவுமில்லை என்று பொருள். மார்பில் தோன்றும் இலேசான வீக்கம் பெண்களுக்கு சகஜமானது. மார்பில் இலேசான வேதனையும் குறிப்பாக மாதவிடாய்க்கு முன்பு வலியையும் ஏற்படுத்தலாம். மார்புப் பகுதியில் பால் வெளிப்படும் இடத்தில் வெடிப்புகள் இருந்தால் அதைத் தொடர்ந்தும் நோய்ப் பாதிப்பு ஏற்படுவதுண்டு. இலேசான எரிச்சல், அரிப்பு ஆகியவை ஏற்படலாம். டாக்டரின் ஆலோசனையுடன் உரிய மருந்துகளை எடுத்துக்கொள்வது உசிதம். தகுந்த உடற்பயிற்சி, வடிவத்துக்கு ஏற்ற மார்புக்கச்சைகளை அணிவது ஆகியவை பலன் தரும்.

மார்பில் ஏற்படக்கூடிய அபத்



தான நோய் மார்புப் புற்றுநோய். பெண்கள் அடிக்கடி நிலைக் கண்ணாடி முன்பு நின்று தன்னுடைய மார்புப் பகுதியில் இலேசான கட்டியோ அல்லது தடிப்போ ஏற்பட்டிருக்கிறதா என்பதை தட்டிச் சோதித்துக் கொள்வது மிக அவசியம். ஆராய்ச்சியாளர்கள் தாய்ப்பால் கொடுக்காத பெண்களுக்கும் கர்ப்பத்தடை மாத்திரைகளை அடிக்கடி உட்கொள்ளும் பெண்களுக்கும் மார்பில் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகம் என்று கூறுகிறார்கள். திட்டவட்டமாக இப்படி முடிவு செய்ய முடியாவிட்டாலும் இந்தப் பழக்கங்கள் அதிகமாகிவிட்ட இன்றைய வாழ்க்கை நிலையில் பெண்களுக்கு மார்பில் புற்றுநோய் ஏற்படுவதும் அதிகமாகி இருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

மார்புப் பகுதியை விரலால் தட்டிப் பார்க்கும்பொழுது ஒரு சிறு பட்டாணிக் கடலை அளவு கெட்டியான, தடிப்பு தெரியக் கூடும். இதை ஒட்டி வலி இருக்கலாம். வலி இல்லாமலும் இருக்கலாம். உடனே டாக்டரிடம் காட்டி ஆலோசனை பெற்றால் புற்றுநோய் தவிர்க்கப்படலாம். ஆரம்ப நிலையில் வைத்தியம் செய்வது எளிது. இன்றைய மருத்துவத்தில் இதைத் தடுப்பதற்கு வாயால் உட்கொள்ளும் மருந்துகளும் கதிர் (Cobalt) பாய்ச்சி வைத்தியம் செய்வதும் குணமளிக்கும். மிகவும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது.

இன்று வயதான பெண்களுக்கு அடிக்கடி ஏற்படும் இன்னொரு உபாதை பெண் உறுப்புகளைப் பற்றியதாகும். பெண் உறுப்புகளில் தோன்றக் கூடிய சிக்கல்கள், அதற்குத் தேவையான அறுவைச் சிகிச்சை முறை ஆகியவை மிக முக்கியமாக விவாதிக்கப்பட வேண்டியவை. அவைகளைப் பற்றி வைத்தியரிடம் தெரிந்து கொள்ளலாம்.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது : ஷோபா

## பீற்றூட் பச்சடி

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| தோல் சீவி துருவிய பீற்றூட் | - 1 கப் |
| வெல்லம் | - 1 கப் |
| நெய் | - 1 ஸ்பூன் |
| உப்பு | - 1 சிட்டிகை |

செய்முறை:

பீற்றூட் துருவலை அப்படியோ அல்லது மிக்ஸியில் அரைத்தோ வாணலியில் நெய் விட்டு வதக்கி முங்கும் அளவு நீர் விட்டு, வெல்லப் பொடியைச் சேர்த்துப் பாகு போல் வரும் வரை கிளறி எடுக்கவும்.

தித்திப்பு தூக்கலாகத் தெரிய துளி உப்பு சேர்க்கவும். ஜெல்லி மாதிரி வரும். பிசிபேளாபாத், சாம்பார் சாதம், வெண் பொங்கல் போன்றவற்றிற்கு ஏற்றது.

# டிப்ஸ்

**உப்புக் கசிந்தால்**

மழைக் காலத்தில் உப்புக் கசியத் தொடங்கும். உப்பு ஜாடியில் இரண்டு பச்சை மிளகாயைப் போட்டு வையுங்கள். உப்பு கசியாது.

**சோப்புப் பவுடரும் உப்பும்**

சோப்புப் பவுடரில் சிறிது உப்பையும் கலந்து துணிகளை ஊற வையுங்கள். பிறகு அவற்றைக் கசக்கி அலசிப் பிழிந்தால், துணியில் உள்ள அழுக்கு நீங்கிவிடும். துணி பிரகாசமாக இருக்கும்.

# நலமாக வாழ்வோம்


**உத்திடா திரிகோணாசனம்**

பலன்கள்

1. கால் தசைகளுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கிறது.
2. கால்களிலுள்ள வளர்ச்சிக் குறைகளைப் போக்குகிறது.
3. குதிக்காலைத் தரையில் ஊன்ற முடியாது ஏற்படும் குதிக்கால் வாதத்தை இவ்வாசனம் போக்குகிறது.
4. குதிக்காலில் ஏற்படும் எலும்பு வளர்ச்சி நோயைப் போக்குகிறது.
5. மார்பை விரிய வைத்து மார்பு அழகைக் கூட்டுகிறது.
6. பசியின்மை, செரியாமை, மலச்சிக்கல் போன்ற வயிற்றுக் கோளாறுகளைச் சரி செய்கிறது.
7. நரம்புத் தளர்ச்சி நோயைச் சரி செய்கிறது.
8. தலைவலி, மயக்கம் ஆகிய உபாதைகளிலிருந்து நிவாரணம் பெற உதவுகிறது.
9. தொப்பையைக் கரைக்கும் அல்லது வராமல் தடுக்கும்.
10. பெண்களுக்கு இடை சிறுத்து இடை அழகு பெறும்.

செய்முறை

1. திரிகோணாசனம் செய்து முடித்ததும் வலது கால் பாதத்தை வலது புறமாக திருப்பி வைக்கவும்.
2. முன்னால் குனிந்து கால்களை வளைக்காது வலது கையால் வலது கணுக்காலை இறுகப் பற்றி, தலையை உயர்த்தி, இடது கையை 90 டிகிரிக்கு நிமிர்த்தி வைத்து, கை கட்டை விரலைப் பார்க்க வேண்டும். சாதாரண மூச்சில் 30 எண்ணிக்கை இருக்க வேண்டும்.
3. எழுந்து நிமிர்ந்து நின்று வலது பாதத்தைப் பழையபடி திருப்பி வைக்கவும். மாற்று ஆசனமாக இடது கால் பாதத்தைப் பக்கவாட்டில் திருப்பி வைத்து, வலது புறம் செய்தது போல் இடது புறம் செய்ய



வேண்டும். இது போல் வலது, இடது என இரண்டு முறை செய்தால் போதும்.

குறிப்புகள்:

கால் கணுக்காலைத்தான் பிடிக்க வேண்டும் என்பதில்லை முடிந்தளவு முன்னால் வளைந்து காலைப் பிடித்துப் பழகி வரவும் வயிறு, பக்கவாட்டுச் சதைகள் குறையக் குறைய எளிதில் பழகலாம். அவசரம் வேண்டாம்.



# துரோகம் ரத்துகிறது!

அங்கம் 14

எமுதுவது **புஷ்பா தங்கதுரை**

எமர்ஜென்ஸியில் போலீசாரும் நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகிறார்கள். பிரபல குற்றங்கள் புரிந்தவர்களை அவர்கள் சீக்கிரம் கண்டு பிடிக்காவிட்டால் அவர்கள் மீதே ப்ளாக் மார்க்குகள் விழுந்துவிடும்.

நல்லவேளை, ஓர் அப்பாவி போல் இல்லாமல், சீதாபதியின் துணையில் போலீசைப் பற்றிய எவ்வளவு விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்தான் அவன்!

இவை தெரிந்திராவிட்டால் உண்மை ஜெயிக்கும் என்று, தத்துவத்தில் நம்பிக்கை வைத்து போலீசாரிடம் போய்க் குதித்திருப்பான். நிச்சயம் உண்மை ஜெயித்திருக்கும் அவன் தூக்குமேடையில் அகப்பட்டு இறந்த பிறகு.

நான் வாழ்வேன் என்று நினைத்தான் அவன். என்ன காரணம் கொண்டும் நான் வாழ்வேன்!

கமலத்தைச் சீக்கிரம் பார்க்க வேண்டும்.

பின்புறத்தில் லாரிகள் எழுப்பும் 'கிச்'சென்ற சப்தம் அங்கே ஒரு ஹைவே இருப்பதைக் காட்டிக் கொடுத்தது.

எழுந்து போகும்போது தூறல் கொட்ட ஆரம்பித்தது, ஹைவேயைக் கண்டு பிடிக்கும்போது மழை.

மரத்தடியில் ஒதுங்க, அது ஐந்து நிமிடம் பேசாமல் இருந்துவிட்டுப் பிறகு அவனை அபிஷேகம் செய்ய ஆரம்பித்தது.

நனைந்தான்.

எட்டத்தில் ஒரு டைவர்ஷன்! வாகனங்கள் சாவதானமாகக் கீழே இறங்கி, பிறகு சாவதானமாக மேலே ஏறின.

யுக்தி தட்டி எழுந்திருக்க, டைவர்ஷன் பள்ளத்தில் ஒதுக்கலாக நின்றான்.

லாரிகள் ஊஞ்சலாக ஆடி பள்ளத்தில் ஊர்ந்து போயின.

பதினைந்து நிமிடத்தில் ஒரு விரைவு வண்டி! கண்ணாடிகளை மூடிக்கொண்டு, டார்பாலினை இழுத்துப் போர்த்திக்கொண்டு ஆசாரமாக வந்தது.

பள்ளத்தில் வந்ததும் ஸ்பிரிங் போல் எகிறி ஏணியைப் பிடித்து மேலேறினான். மழை பொத்துக்கொண்டு அடிக்க, டார்பாலினின் மேடு பள்ளங்களில் கங்கைகளும் யமுனைகளும் ஓடிக் கொண்டிருந்தன.

கீழே படிந்து, டார்பாலினில் இடைவெளி உண்டாக்கி இக்ளூவுக்குள் நுழைவது போல் உள்ளே போய் தடதடக்கும் சாமான்களோடு சேர்ந்துகொண்டான்.

முதுகடியில் குளிரான தண்ணீர் எவ்விதமோ ஓடிக்கொண்டிருக்க, தூக்கமுமில்லாமல், விழிப்புமில்லாமல் இடையில் பினாத்திக்கொண்டிருந்தான்.

எல்லா ஓசைகளும் திடீரென்று நின்றதால் எழுந்த நிசப்தம் அவனைத் தட்டி எழுப்பியது. பஸ் நின்றுகொண்டிருந்தது. மழை அரும்புத் தூறலாய் ஓசை இல்லாமல் உதிர்ந்துகொண்டிருந்தது.

"மேலே கூடை இருக்கப்பா!"

"அது வேறேயா? பேஜாரு......."

மேலே ஒரு யாரோ ஏறினான்.

டார்பாலினை அவன் அவிழ்க்க, குரு குறுகிப் போய் காலையும் கையையும் ரெஸ்ட் எடுக்கும் தவளை போல உடம்புக்குள் இழுத்தான். மார்பு படபடத்தது.

"அட, அத ஏண்டா அவுக்கிறே? இம்மாத்தூண்டு கூடைடா! ஓரமாயிருக்கு! வலிடா!"

வலித்தான். டார்பாலின் துவாரத்தில் நுழைந்து, கூடை வெளியே போயிற்று.


சில சில்லறைச் சத்தங்களுக்குப் பிறகு வண்டி புறப்பட்டது.

தப்பித்தோம். நினைப்பாக இருக்க விரும்பினான். கையில் ஸீகோ 3-30இல் மின்னியது. அடுத்த ஸ்டாப்பில் இறங்கிவிட வேண்டும். பொழுது விடிந்தால் ஆபத்து.

அரை மணியில் பஸ் மெதுவாக, பரபரப்போடு அவன் வெளியே வந்தான். ஏணி வழுக்கியது. கவனமாக இறங்கி கடைசிப் படியில் நின்று, பஸ் இன்னும் மெதுவானதும் கீழே குதித்து உருளாமல் சமாளித்தான்.

கும்மிருள்!

பஸ் இன்னும் சிறிது போய், கீழே ஓர் ஆளை இறக்கிவிட்டு, குஷாலாகப் போக ஆரம்பித்தது.



இறங்கின ஆளும் ஏதோ ஒரு திசையில் தாராளமாக நடந்து போனான்.

இருட்டைப் புரிந்துகொண்ட பிறகு, அது அந்த வட்டாரத்தை அவனுக்குப் புரிய வைத்தது.

முக்கூட்டுச் சந்திப்பு அது! நடுமேடையில் திசை காட்டி! வலதுபுறம் மூன்று மைல் போனால் கமலம் இருக்கும் ஊர்.

தொடரும் துரதிர்ஷ்டத்தில் ஒரு சின்ன அதிர்ஷ்டம்.

கடுகி நடந்து நாலரை சுமாருக்குக் கதவைத் தட்டினான். கமலம் திறந்து அதிசயத்தோடு மாடிக்கு அழைத்துப் போனாள். வெளிச்சத்தில் ஈரமாயும் அலங்கோலமாயும் இருந்தான். துடைத்துவிட்டு, டிரஸ் போட்டுச் சுத்தமாக்கி அவனைக் கட்டிலில் உட்கார்த்தியதும்,

கண்ணீர் பீச்சிக்கொண்டு அவன் அந்த மெத்தையில் அங்குமிங்கும் பைத்தியம் போல் புரண்டான்.

"என்னங்க?" என்றாள்.

குதிரை புரள்வது போல் உடம்பைப் புரட்டி, ஆயாசத்தைப் போக்கியதும் அவளைப் பார்த்தான்.

"கமலம்! இந்த மெத்தையில் இப்போது புரள்வது கடைசித் தடவை! இனி என்னால் புரள முடியுமோ, முடியாதோ?"

"என்ன விஷயம்?"

"நான் ஒரு இக்கட்டிலே மாட்டியிருக்கேன்."

"என்ன இக்கட்டு?"

"சொல்றேன். உனக்கு சித்தப்பா ஏதாவது பேப்பர் படிச்சச் சொன்னாரா?"

"அவருக்குக் கண் பத்தாதே! பேப்பர் வருத்தறதில்லே."

"கமலம்! என்னிடம் எதுவும் கேட்காதே! என் மனசு சரியில்லே. சந்தர்ப்பம் வந்தபோது சொல்றேன். நான் ஒரு பெரிய ஆபத்திலே இருக்கேன்னு மட்டும் தெரிஞ்சுக்கோ, போதும்...... போலீஸ் என்னைத் துரத்திக்கிட்டு வராங்க! இவ்வளவுக்கும் நான் ஒரு குற்றமும் செய்யலே....."

கமலம் கையைப் பிசைந்தாள். பேசத் தெரியவில்லை.

"இப்போ நான் உடனே போயிடணும். நீயும் விடிஞ்சதும் புறப்பட்டுடணும்!"

"எங்கே?"

"உன் சிநேகிதி சமந்தகாமினி எங்கே இருக்கா சொன்னே?"

பட்டியில் முடியும் பெயரைச் சொன்னாள்.

"அங்கே போயிடு! விஜயாவையும் கூட்டிக்க! இங்கேயிருந்தால் போலீஸ் உங்களை விடாது. வேலங்கரைக்குப் போறதாக சித்தப்பாகிட்டே சொல்லு! நேரே பஸ் பிடிச்சு பட்டிக்குப் போயிடு! அங்கே பட்டிவீரன் கோவில் இருக்கே. ஒவ்வொரு புதன் ராவுலேயும் வா! நான் முடிஞ்சா சந்திக்கிறேன். கலக்கப்படாதே! எல்லாம் நல்லபடியா முடியும்!"

அவள் அழுதாள்!

அவன் அவளிடமிருந்து, இரண்டு ஸெட் உடைகளையும் (போன ட்ரிப்பில் கொண்டு வந்தது) அவள் வைத்திருந்த எண்பது ரூபாயில் பாதியையும் வாங்கிக்கொண்டான்.

அவளது நகைகளை ஒரு விநாடி பார்த்தபோது, அது அவளது அவசரங்களுக்கு இருக்கட்டும் என்று தோன்றியது.

இருளில் கருமை அழியுமுன் கலங்கிய கண்களுடன் வெளியேறினான்.

மாட்டுத் தாவணியும், முத்தாலம்மன் விழாவும் வருஷந்தோறும் குலாவிக்கொண்டு வரும்.

விழா கோவிலிலே! கோவிலை அடுத்த பொட்டலிலே தாவணி!

அம்பத்தாறு ஊரிலேயிருந்து மாடுகள் வரும். பொட்டல் வெய்யிலில் தரகர்களும் வியாபாரிகளும் நிற்பார்கள்.

- "தம்பி, மாட்டைப் பிடிச்சுக்கோ. இதோ வர்றேன்!" என்று சொல்லிவிட்டுக் கிழவர் போனார். குரு, மயிலைகளைப் பிடித்துக்கொண்டான். சின்ன வயசுகள்! கொம்பு சீவியிருந்தன. சும்மா நிற்காமல் '8' போட்டுக்கொண்டே வளைய வந்தன.


திரும்பி வந்த கிழவர் "தம்பி, உன்னைப் பார்த்த மாதிரி இருக்கே," என்று சொல்லி, "உன் படத்தைப் பேப்பர்லே போட்டிருந்தாங்களோ," என்று கேட்டார்.

திடுக்கிட்டான் - இருக்காதே என்று முழங்கினான்.

"எனக்குப் பேப்பர் படிக்க வராது. பொம்மை பார்ப்பேன்" என்றார்.

**(துரோகம் துரத்தும்......)**

# முறிந்த திருமணம்



ஜெனி:ஃபர் லோபஸ்



ஜெனி:ஃபர் லோபஸ்

**கேட்பவரைக் கிறங்கடிக்கச் செய்யும் ஒரே பெயர் ஜெனி:ஃபர் லோபஸ் தான். சினிமாவிலும் சரி, மேடைப் பாடகியாகவும் சரி, அதிகம் பிரபலமானவர்.**

**மூன்று மில்லியன் அல்பங்கள் விற்று சாதனை படைத்ததென்றால் ஏகப்பட்ட படங்களும் ஹிட் லிஸ்டில் உண்டு. ஹாலிவுட்டில் 12 மில்லியன் டாலர்கள் சம்பளம் பெற்ற நடிகை என்ற பெருமையும் இவருக்குண்டு. 'கோல்டன் குளோப்' விருதும் வாங்கிய நடிகை.**

**இவரது முதல் பட வாய்ப்பு 16 வயதில் வந்தது. 'மை லிட்டில் கேர்ள்' என்ற படத்தில் நடித்து படம் பெரிய அளவில் வெற்றிபெறாவிட்டாலும், இவரது நடிப்பு பேசும்படியாக இருந்தது. அதன் பிறகு ஆல்பம், மேடை, ட்ரை கிளீனிங் பிஸினஸ் என தடுமாறிக் கொண்டிருந்த ஜெனி:ஃபர், டி.வி.யிலும் தோன்றினார்.**

**பின்னர் "தி கிராஸ் அ:ஃப் :ஃபிளைட் 7" என்ற படத்தில் தொடங்கிய இவரது ஸ்டார் அந்தஸ்து உயர்ந்தது. 1998 லிருந்து இவ்வாண்டு வரை சிறந்த நடிகைக்கான பல விருதுகளை வாங்கினார். 2004இல் மிக மோசமான நடிகைக்கான விருதையும் வாங்கியிருக்கிறார்.**



ஜெனி:ஃபர் லோபஸ்

**1997.02.02இல் ஓஜானி நொயாவை திருமணம் செய்து கொண்டார் ஜெனிபர் லோபஸ். ஆனால், ஒரு வருடத் துக்கு மேல் தாக்குபிடிக்காத அத் திருமணம் விவாகரத்தில் முடிந்தது.**

**ஜெனி:ஃபர் லோபஸ் ஜொலிக்காமல் போனது அவரது குடும்ப வாழ்க்கையில் தான் எனக் கூறுகின்றனர் அவரது குடும் பத்தினர்.**

## பயோடேட்டா

**பிறந்தது:** 1970 ஜூலை 24.

**பிறந்த இடம்:** நியூயார்க் சிட்டி (யு.எஸ்.ஏ.)

**அப்பா :** டேவிட் (கம்பியுட்டர் டெக்னீஷியன்)

**அம்மா :** க்வாடாலுப் (குழந்தைகள் பள்ளி ஆசிரியை)


**உடன் பிறந்தவர்கள் :** இரண்டு சகோதரிகள் மட்டும். லெஸ்லி, லிண்டா.

**உயரம் :** 5' 6".

என்னுடைய நண்பிகளில் ஒருத்தியான 'பிறஸ்' என்பவள்; என்னுடைய வகுப்பில் குடியரசுக் கட்சியை ஆதரிப்பவளாக இருந்ததுடன்; ஜனாதிபதி ஜோன்சனுடைய பேச்சுக்களையும் ஆதரிப்பவளாக இருந்தாள். வேக்கர் என்பவர் உள்ளுணர்வுப் புகழ் ததும்பும் செயலில் வக்கிரமான முறையில் ஈடுபட்டிருந்தார்.

செனட்டர் ஹோல் வோட்டரை பிரதிநிதியாக்குவதற்காக ஜனாதிபதி அறிவியல் நூல்களை அதிகமாக வாசிப்பேன்; அத்துடன் வெள்ளை மாளிகை அறிக்கைகளையும் வாசிப்பேன்; விவாதம் பற்றிய குறிப்புகளையும் நான் தயாரித்திருந்தேன். என்னாலேயே உருவாக்கப்பட்ட விவாதக் குறிப்புகளில் காணப்பட்ட விவாதம் சம்பந்தமான நுணுக்கங்களை நான் உணர்ந்து கொண்டேன். எலன் கூட இதே அனுபவத்தை கொண்டிருக்கவேண்டும். அந்தக் காலங்களில்தான் கல்லூரியிலிருந்து நாங்கள் பற்றிய சிந்தனைகளிலேயே நான் அதிகமிருந்தேன். ஆனால் எந்தவொரு முற்குறிப்புமில்லாமல் எங்கே, எவ்வாறு என்பதை நான் அறிந்திருந்தேன். நான் எங்களுடைய தீர்க்கப்படமுடியாத கல்லூரிப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆலோசனைக் குழுவின் ஆலோசகரை சந்திப்பதற்கு சென்றிருந்தேன். கல்லூரி ஆலோசகர் எனக்கு மிட்வெஸ்ரன் கல்லூரியைப் பற்றிய விபர அட்டைகளை எனக்கு கொடுத்தார். ஆனால் அவை ஒன்றும் எந்தவொரு உதவிகளையும் ஆலோசனைகளையும் தருவதாக அமையவில்லை. அண்மையில் கல்லூரி பட்டதாரிகளாய் இருந்த இருவரினது வழிகாட்டல்களும் ஆலோசனைகளுமே எனக்கு பெரும் உதவியாக இருந்தது. அவர்கள் நோத்வெஸ்டன் பல்கலைக்கழகத்தில் அவர்களுடைய ஆசிரியர்களின் கற்பித்தல் நுணுக்கங்களை திறம்படக்கற்றிருந்தார்கள். மெயின் சவுத்தில் அரச வகுப்புகளில் கற்பிப்பதற்கு அவர்கள் உறுதி பூண்டார்கள். கரீன் பல்ஸ்ரோன் இவர் ஸ்மித்துடைய ஒரு பட்டதாரி ஆவார் அத்துடன், ஜெமட் அல்ர் மான் வெலஸ்லியினுடைய ஒரு பட்டதாரி ஆவார்;

# 21



# ஒரு பெண்ணின் வாழும் வரலாறு

## ஹிலாரி கிளிண்டன் எழுதுகிறார்

ஜோன்சனிற்கும் எலனிற்குமிடையில் பரஸ்பரம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக என்னை நியமித்தார்கள். நாங்கள் இருவரும்அவமதிக்கப்பட்டதுடன், எங்கள் மீது குற்றமும் சுமத்தினார்கள்.

ஆனால் வேக்கர் சொன்னார் மற்றைய அறிக்கைகள் பற்றி அறிவதற்கு நம்மிருவரிடமும் வற்புறுத்தக்கூடும்; ஆகையால் நான் என்னுள்ளே மிகவும் துன்பமடைந்தேன். சுகாதாரப் பராமரிப்பு, வெளிநாட்டுக் கொள்கைகள் என்பவற்றில் முதல் தடவையாக ஜனநாயக குடியியல் உரிமைகள் ஒரு நிலையை அடைந்தது.

நான் ஒவ்வொரு மணித்தியாலமும் நூலகத்தில் ஜனநாயகம் பற்றிய பட்டதாரிகளாக வெளியேறியிருந்தோம்.

ஒருவருக்கொருவர் அரசியல் தந்திரங்கள் பற்றிய நுணுக்கங்களை பரிமாறிக் கொண்டிருந்தோம். ஆனால் வேக்கர் சில காலங்களில் வாஷிங்டன் டிசியில் கற்பிப்பதற்கு புறப்பட்டிருந்தார். அங்கே அவர் பல ஆண்டுகளாக விமான ஓட்டுனர்களுக்கான ஒன்றியத்தில் ஆலோசகராக கடமை புரிந்தார். அவருடைய சேவையினை பெறுவதற்கு அமெரிக்க குடியரசும் தூரநோக்காக இருந்ததனால் பயன்பாடுகளை பெறக்கூடியதாக இருந்தது.

உயர் பாடசாலையில் சிரேஷ்டராக இருக்கின்றபோது பாடசாலையைப்



இப்போதும் எனக்கு ஞாபகமிருக்கிறது. பல்ஸ்ரோன் எங்களுடைய வகுப்பில் சொல்லிக் கொண்டிருந்தார்; ஒரு தினசரிப் பத்திரிகை வாசிப்பதை விட ஆளுனர் மெக்சொமிக்ஸினுடைய சிக்காக்கோவை உள்ளடக்கிய புத்தகத்தினை வாசிப்பது சிறந்ததென்று. அப்போது அதில் ஒன்றை நான் கேட்டேன்; அவள் அபிப்பிராயப்பட்டாள். "நியுயோர்க் டைம்ஸ்" ஆனால் அதனுடைய கிழக்கு ஒன்றியத்தினுடைய ஒரு உதிரிப்பாகம் நான் பதிலளித்தேன். பல்ஸ்ரோன் தெளிவாகச் சொன்னாள் உண்மையாக அப்போது வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை வாசிப்பதிலிருந்து ஒருபோதும் அவ்வாறான பத்திரிகைகளை நான் கண்டதேயில்லை. மெக்கொமிக்கினுடைய புத்தகங்களையும் நான் அறிந்திருக்கவில்லை.

*(இன்னும் வரும்...)*

## வின்சரினுடைய குடும்பம்



மேலுள்ள படத்தில் ஐரோப்பிய அரசன் எட்வார்ட் (VII) அரசி அலெக்சாந்த்ரா, ஜேர்மனினுடைய அரச குடும்பம், வில்ஹெறல்ம் (II) (ஆகாஸ்ரா மாநிலத்தின் ஆளுனர்) கக்சன் எழாவது அரசன், அரசி மவுட் (நோர்வே முடிக்குரிய அரசி) அல்பேஸோ (13வது அரசர் ஸ்பெயின்), அரசி ஏதொர் (வேல்ஸினுடைய அரசி) அத்துடன் குடும்ப அங்கத்தவர்கள் முதலாம் உலகப் போரிற்கு பிறகு ஒன்றாய் காட்சியளிப்பதை காண்கிறீர்கள்.

## வின்ஸ்டன் சர்ஜில் திருமணமும் அவருடைய மனைவியும்



ஆகஸ்ட் 15இல் ஐரோப்பிய வர்த்தக குழுத் தலைவராக பதவியேற்ற காலத்தில் கிளமென்டைன் ஹோசிஸர் உடனான திருமண ஒப்பந்தமும் அறிவிக்கப்பட்டிருந்தது. செப்டம்பர் 12இல் அவர்கள் திருமணம் முடித்தார்கள்.

*இருபதாம் நூற்றாண்டின் வரலாறு நமது கண்முன் உள்ளது. ஆனால் கடந்த பல நூற்றாண்டுகளின் வரலாற்றை நாம் காண முடியாதுள்ளது.*

*ஆனாலும், நம்மைக் கடந்து சென்ற 19ம் நூற்றாண்டு வரலாறு கண்ணீர் சிந்த வைப்பதும், அழகியதும், அரியதுமான படங்களி னூடாக உங்கள் முன் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதையைக் கூறுவன. 19ம் நூற்றாண்டின் வரலாறானது முன்னெப்போதுமில்லாத வகையில் அதிக மாற்றங்களை சந்தித்தது. எல்லா மாற்றங்களும் இயல்பாக ஏற்பட்டதுமல்ல, அவற்றுள் சில யுத்தங்கள், எதிர்ப்புகளைத்தாண்டி நடந்துள்ளன. பல சாம்ராஜ்யங்கள் சிதைந்து, புதிய நாடுகள் உருவாகியுள்ளன. விஞ்ஞான, அறிவியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது.*

*19ம் நூற்றாண்டு தொடக்கத்தில் உலகின் முழு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் கீழிருந்தது. இப்போது? இப்படியான பல கதைகள்... இவைகளை நமது வாசகர்கள் தரிசிக்க ஒரு வாய்ப்பை தினமுரசு ஏற்படுத்துகிறது.*

## ஜியோமிதி உருவங்களை வைத்து ஓவியம் தீட்டும் கலையின் பிறப்பு

படத்தில் காணப்படுபவர் ஜியோமிதி (B)பரக் (1881-1963) இவர் பிரான்ஸ் நாட்டின் பிரபல ஓவியர். இவர்தான் முதன்முதலில் ஜியோமிதி-உருவங்களை வைத்து ஓவியம் தீட்டும் கலையினை உருவாக்கியவர். இவர் முதன் முதலாக 1907-1908ம் ஆண்டுகளில் இவ்வாறான ஓவியத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தினார். (F) "ஊவ்" முறையிலான இவ்வாறான உருவங்களை வைத்து ஓவியம் தீட்டும் கலையினை இவர் அறிமுகப்படுத்தி புகழின் உச்சிக்கே சென்றார். பிகாஸோ என்பவரே இந்த முறைமையினை கண்டுபிடித்தபோதிலும் இந்த "ஜியோமிதி பரக்" என்பவரே முதன் முதலாக இந்த உருவங்களை வைத்து (a cubisth painting ) ஓவியம் தீட்டியுள்ளார். இதனால் இவரே இந்த முறைமையின் தந்தையாவார். இவர்தான் இந்த முறைமையினூடாக ஓவியங்களை கண்காட்சிக்கு வைத்தவர்.



ஜியோமிதி (B) பரக்

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.

## முதலாவது ஒற்றுமை முயற்சி

**What good is liberation? If there are no people to enjoy that liberation.**
**-A.Amirthalingam.**

சென்னை பாண்டி பசாரில் இடம்பெற்ற சம்பவத்தையடுத்துக் கைதான தமிழ் இளைஞர்களில் பலரும் தமிழகப் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர். இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று திருமதி இந்திராகாந்தி தலைமையிலான இந்திய அரசு தமிழ் இளைஞர்களை நாடுகடத்த முற்படாமை ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசுக்குப் பெரும் பின்னடைவு ஆகியது. குற்றவாளிகளாகப் பிரகடனம் செய்யப்பட்டவர்கள் என்றும் வன்முறையாளர்கள் என்றும் பலவாறாக ஜே.ஆர்.அரசு முத்திரை குத்தியபோதும் இந்திய அரசு அவற்றைப் பொருட்படுத்தவில்லை. தமிழக மண்ணில் இடம்பெற்ற குற்றச் செயலுடன் நேரடித் தொடர்புகொண்டிருந்த பிரபாகரன், சிவகுமார் ஆகியோரும் உமா மகேஸ்வரன், ஜோதீஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இவர்களில் பிரபாகரன், சிவகுமார் ஆகியோர் மதுரையில் தங்கியிருக்க வேண்டுமெனவும், உமா மகேஸ்வரன், ஜோதீஸ்வரன், சிவனேஸ்வரன் ஆகியோர் சென்னையில் தங்கியிருக்க வேண்டுமெனவும் நிபந்தனையோடு பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் எவ்வித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறான நிலையில் சென்னையில் தங்கியிருந்த தமிழ் இளைஞர்கள் குறித்து தமிழக அரசியல் கட்சிகளின் பார்வை திரும்பியது. விடுதலைப் போராளிகள் என்றும், புகலிடம் தேடி வந்தவர்கள் என்றும் நல்ல அபிமானம் ஏற்பட்டது. எனினும் தமிழகத்தில் துப்பாக்கிய சம்பவங்கள் - மோதல்கள் இடம்பெறுவதைப் பெரும்பாலானவர்கள் விரும்பவில்லை. இதனால் இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்ட தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்பட வேண்டுமெனப் பலரும் வற்புறுத்தி வந்தனர். இத்தகைய வற்புறுத்தல்கள் மற்றும் அறிவுரைகளை அடுத்து ஒரு ஒற்றுமை முயற்சி கருக்கொண்டது.

ஈரோஸ் எனப்படும் ஈழப் புரட்சி அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவரும், லங்காராணி என்னும் தமிழ் நாவலின் ஆசிரியருமான அருளர் இந்த ஒற்றுமை முயற்சிக்கு அத்திவாரமிட்டார். ரஷ்யாவின் லுமும்பா பல்கலைக்கழகத்தில் பொறியியலாளர் பட்டம் பெற்ற அருள் எனப்படும் ஏ.ஆர்.அருட்பிரகாசம் லண்டனில் இருந்தபோது ஈரோஸ் அமைப்பின் நிறுவுனர்களில் ஒருவரானார். அங்கிருந்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்திடம் ஆயுதப் பயிற்சி பெற்ற இவர், 1976இல் நாடு திரும்பினார். 1977இன் இனக் கலவரத்தையடுத்து வவுனியாவின் கண்ணாட்டி கிராமத்திலிருந்த தமது வயல் நிலத்தில் அகதிகள் மீள்குடியமர்வு இடம்பெற ஏற்பாடு செய்த பின்னர் 1978இல் சென்னைக்குத் திரும்பி அங்கேயே தங்கியிருந்தார். 1980இல் ஈரோஸ் அமைப்பிலிருந்து விலகிய பத்மநாபா தலைமையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) உருவானதையடுத்து எந்த அணியினருடனும் இணையாமல் தனித்து ஒதுங்கியிருந்தார்.

பாண்டி பசார் சம்பவத்தையடுத்து ஏற்பட்ட நெருக்குதல்கள் காரணமாக அனைத்து அமைப்புக்களும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தை இவர்

**இணைந்து எழுதுவது**
**த.சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

வலியுறுத்தினார். இந்த வகையில் முக்கியமான சில அம்சங்களை இவர் ஒவ்வொரு அமைப்பிடமும் எடுத்துரைத்தார்.

* தமிழகத்தில் அல்லது இந்திய மண்ணில் எவ்வித குற்றச் செயல்களிலும் எவரும் ஈடுபடக் கூடாது.

* இந்திய, தமிழக அரசுகளின் சட்டங்களை மீறும் வகையில் எவரும் செயற்படக் கூடாது.

* இந்தியாவின் அல்லது தமிழகத்தின் அரசியல் நடவடிக்கைகளோடு நேரடி ஈடுபாட்டை அமைப்பு ரீதியாக எவரும் ஏற்படுத்தக் கூடாது.

இவை அவற்றில் முக்கியமானவையாகும். இந்த அடிப்படையில் சந்தித்துப் பேச ஒவ்வொரு அமைப்பையும் அவர் அழைத்தார். ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் ஆகிய அமைப்புக்கள் சார்பான பிரதிநிதிகளும், சென்னையில் அப்போது தங்கியிருந்த இலங்கை அரசால் தேடப்பட்டவர்களான சிலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்புக்கள் சில தடவைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றதை அடுத்து 'செல்' என்ற பெயரில் ஒரு குழு உருவாக்கப்பட்டது. இக் குழுவுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு புலிகளுக்கும் பிரபாகரனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது மதுரையில் தங்கியிருந்த பிரபாகரனை அருளர் நேரில் சென்று சந்தித்துப் பேசினார். இப் பேச்சுக்களையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பின் கடிதத் தலைப்பில் தட்டச்சு செய்யப்பட்ட கடிதமொன்றைப் பிரபாகரன் கையொப்பமிட்டு அனுப்பியிருந்தார். அதில் இந்தக் குழு தோற்றுவிக்கப்பட்ட அடிப்படைக் காரணங்களை வரவேற்பதாகவும் இதில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்திருந்த பிரபாகரன், இக் குழு செம்மையாகச் செயற்பட்டால் எதிர்காலத்தில் வந்து இணைவதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் குட்டிமணி, தங்கத்துரை போன்றவர்களை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுமாயின் அதற்கு ஒத்துழைப்புத் தருவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இதனிடையில் இலங்கையில் அசம்பாவிதங்கள் தொடர்ந்துகொண்டிருந்தன. புங்குடுதீவுப் பகுதியில் படையினர் தாக்கப்பட்டனர். நெல்லியடியில் பொலிஸார் கொல்லப்பட்டனர். இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்று வந்ததையடுத்து கூட்டணித் தலைமை சங்கடத்திற்கு உள்ளாகியது. "தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பம் முதல் எல்லா விதமான வன்முறைச் சம்பவங்களையும் வன்மையாகக் கண்டித்தே வந்துள்ளது. எந்த வடிவிலான வன்முறைகளையும் கூட்டணி ஏற்றுக்கொள்ளாது, வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களினது குடும்பங்களுக்கு கூட்டணி தனது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது" இவ்வாறு கூட்டணி பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்த அறிக்கையை அமைச்சர் சிறில் மத்தியூ வரவேற்றார். அச் சமயத்தில் காங்கேசன்துறையில் தங்கியிருந்த அமைச்சர் மத்தியூ, "இதனையே கூட்டணியினரிடமிருந்து நீண்ட நாட்களாக நான்

## 72 தேனீர்க் கோப்பைக்குள் இரத்தம்!

எதிர்பார்த்தேன். மிக அண்மைக்காலம் வரை அவர்கள் பயங்கரவாதத்தை ஊக்குவித்தனர். பயங்கரவாதிகளிடமிருந்து கூட்டணியினர் தம்மை விலக்கிக்கொள்ளாத வரையில் அவர்களையும் பயங்கரவாதிகளாகவே கருத வேண்டி இருக்கும்" என்றார்.

1982 ஜூலை 5இல் அமிர்தலிங்கம் நியூயோர்க் நகரில் நடைபெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்றார். அங்கே தமிழீழம் என்னும் இடைக்கால •நிழல் அரசு உருவாக்கப்படுவதை வன்மையாக எதிர்த்ததோடு, மாவட்ட அபிவிருத்திச் சபைகளைக் கூட்டணி ஏற்க முன்வந்தமைக்கான காரணங்களையும் தெளிவுபடுத்தினார். இந்த மாநாட்டில் 1982இன் தைப் பொங்கலன்று தமிழீழத்தைப் பிரகடனம் செய்யப் போவதாக அறிவித்திருந்த கிருஷ்ணா வைகுந்தவாசனும் கலந்துகொண்டிருந்தார். உணர்ச்சிவசப்பட்டிருந்த பார்வையாளர்கள் முன்னிலையில் அமிர்தலிங்கம் மிகவும் காட்டமாகத் தமது நிலைப்பாட்டை எடுத்து விளக்கினார். வெளிநாடுகளில் சாய்வு நாற்காலிகளில் அமர்ந்துகொண்டு பொழுதுபோக்கிற்காக அரசியல் பேசுபவர்கள் உண்மை நிலையை உணர வேண்டுமென விநயமாக வேண்டினார். "நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துப் பொறுப்புணர்வுடன் சிந்திக்க வேண்டும். நாங்கள் என்ன செய்கிறோம் என்பது குறித்துப் பொறுப்பற்றவர்களாக இருக்க

> **இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. சுதந்திரத்தை அநுபவிப்பதற்கு மக்கள் இல்லை என்றால் அந்தச் சுதந்திரத்தால் என்ன பயன் எனவும் அவர் வினவினார்.**

முடியாது. எனவே எங்கள் மீது கற்களை வீசுவதற்கு முன்பாகத் தயவுசெய்து சிந்தியுங்கள். நாங்களும் மனிதர்களே. நாங்கள் தவறு இழைக்கக் கூடும். மகாத்மாகாந்தி கூட தான் தவறு செய்ததாக ஏற்றுக் கொண்டிருக்கிறார். எந்த ஒரு கட்டத்திலாவது தமிழ் மக்களின் நம்பிக்கையை நான் இழந்துவிட்டதாகத் தோன்றினால், அப்போது தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றுள்ளவர்களிடம் தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க நான் தயங்கப் போவதில்லை" என்று அமிர்தலிங்கம் விபரித்தார்.

தமிழீழம் என்னும் தனி அரசு அமைக்கப்படுவதில் எதிர்நோக்கும் கஷ்டங்களை அவர் விபரித்தார். உண்மையாகவே தனி அரசு அமைக்க முடியும் என்று நாங்கள் நம்பினால் அல்லது அந்த நம்பிக்கை ஐம்பது வீதமாவது இருக்குமாயின், எம்மால் அந்த இலக்கை அடைய முடியும். அதற்காகத் துன்பங்களைத் தாங்கும் துணிவைப் பெற முடியும். இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் மக்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்குண்டு. சுதந்திரத்தை அநுபவிப்பதற்கு மக்கள் இல்லை என்றால் அந்தச் சுதந்திரத்தால் என்ன பயன் எனவும் அவர் வினவினார். அத்துடன் பலரும் உதாரணமாகக் காட்டிய பங்களாதேச விடுதலைப் போரைப் பற்றிக் குறிப்பிட்டு, அங்கு மூன்று மில்லியன் மக்கள் உயிர் துறந்துள்ளனர். இது வெளிநாடுகளில் வாழும் தமிழர்களது தொகைக்குச் சமனானது எனவும் விபரித்தார்.

ஒரு கட்டத்தில் கிருஷ்ணா வைகுந்தவாசன், அமிர்தலிங்கத்திடம் "ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை நரகத்திற்குப் போகும்படி நீங்கள் ஏன் கூறக் கூடாது" எனக் கேட்டார்.

இதற்கு அமிர்தலிங்கம் பதிலளித்தார். "அது நான் சொல்லி நடப்பதில்லை. ஜெயவர்த்தனா நரகத்திற்குப் போவார் என்பது நிச்சயம். ஆனால் தமிழ் மக்களுக்கும் அந்தக் கதி கிடைத்துவிடக் கூடாது என்பதே என் கவலை.

(தொடர்ந்து வடியும்....)




**வணக்கம்! வணக்கம்! வணக்கம்!**

*நாட்டின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு போகுது. படுகொலைகள் மலிந்த பூமியாக இலங்கை மாறி வருகுது. யாரைக் கண்டாலும் துப்பாக்கியோட எங்களப் பாப்பதாகவே நினைக்கச் சொல்லுது. என்ன செய்ய? யாரையெண்டாலும் சுட்டால் அடுத்த நாள் முன்பக்கத்தில படத்தோடை செய்தி போடலாம் எண்டு நினைக்கிறவங்களுக்கு நடுவில அதுகளக் கண்டிக்கிறவன் துரோகியாகிப் போறான். வாழ்க மனித நேயம் - எங்கட வேலையை நாங்க பாப்பம்.......*

**சின் :-** ஜே.வி.பி. அரசிலயிருந்து விலகிச்சுதெண்டா நாங்கள் ஆதரவு தருவம் எண்டு ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளதே.....

**மன் :-** *எரியிற வீட்டில எண்ணை ஊத்திறதெண்டு கேள்விப்பட்டிருக்கிறியோ, அது இதுதான். உள் வீட்டுக்குள்ளேயே பூசல் கதகளி ஆடுது. அதை முடிவுக்குக் கொண்டுவர ஆளில்லை, ஆதரவு வழங்குவினமாம். ஆதாயம் இல்லாமல் செட்டி ஆத்தைக் கட்டி இறைக்கமாட்டார் புரியுதோ.*

**சின் :-** அதுவும் சரிதான். ஏதோ உள் நோக்கமிருக்கு. இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில புலிகளோட பேசுறது தொடர்பில ஜே.வி.பி.யின்ர நிலைப்பாட்டை அறிய ஜனாதிபதி நேரடியாப் பேசப் போறாவாமே.....

**மன் :-** *ஓ! ரெண்டு பிரிவினருக்குள்ளயும் புலிகளோட பேசுறது தொடர்பில இணக்கமில்லையெண்டு அப்பப்ப செய்திகள் வருகுது. இதுக்கெல்லாம் முடிவுகட்டுறதுக்காக பேசித் தீர்வு காணுறது நல்லதுதானே.*

**சின் :-** என்னவோ எல்லாத்தையும் மூடி மறைக்க ஏலுமெண்டு எவரெண்டாலும் நினைச்சால் அது ஆபத்தில முடியும். புளொட் மோகன் 31.07.2004ம் திகதி சுடப்பட்டுள்ளாரே.

**மன் :-** *ம்....போய்ப் பாத்தனான். ஆட்டோவில வந்தவரை மோட்டார் சைக்கிளில வந்தவையள் எட்டுத் தரம் சுட்டுப் போட்டுப் போயிட்டினமாம். புலனாய்வு வேலைகளில ஈடுபட்டு வந்தவராம். அதாலதான் சுடப்பட்டாராம் எண்டு தமிழ் எம்.பி. ஒருத்தர் நியாயஞ் சொல்லுறார். அரசாங்கம் அரை குறையாக் கண்டிச்சிருக்குது. யார் சுட்டவையள் எண்டுதான் தெரியேல்லையாம். எவர் சுடப்பட்டாலும் அது சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்காதாம். பின்ன என்ன சுடுங்கோவன். ஹீ....ஹீ.....*

**சின் :-** எல்லாரையும் சுட்டாப் பிறகு யாருக்கப்பா சமாதானம் வேணும்? கேக்க யாருமில்லையா......? அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அடிக்கடி வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சந்திக்கினமெண்டு கேள்விப்படுகிறன்.

**மன் :-** *நோர்வேக்காறரும் பிரிட்டிஷ்காறரும் சந்திச்சினம். இதுக்கு முன்னம் அமெரிக்காக்காறரும் சந்திச்சினம். அதைவிட இந்தியா போயிருந்த பிரதமரெட்டயும் பலமாக இவரைப் பற்றி விசாரிச்சினமாம். தம்பிமார் அரசியல் ரீதியா பலவீனப்படுகினம் எண்டதுதான் புரியக்கூடியதாக இருக்கு. சும்மா சுடுகலங்களை நம்பி ஒண்டும் செய்ய ஏலாது? விளங்குதோ.*

**சின் :-** ச்சா....இவ்வளவு நாசூக்காச் சொல்லிப்போட்டியள். கொழும்பில பிஸ்டல் குழுவும் அவையளோட மோட்டார் சைக்கிள் குழுவும் இணைஞ்சிருக்கினமெண்டு தகவல் வெளியாகியிருக்குதே.

**மன் :-** *ஆங்காங்கே நடக்கிற படுகொலைகளுக்குப் பிறகு படைத்தரப்பு ரொம்பவும் குழம்பிப் போயிருக்கு. கொழும்பில தம்பிமாரின்ர குண்டுதாரிக் குறூப்பே இயங்குது. இதென்ன சுஜிபி..... பிஸ்டல் குழு......*

**சின் :-** எண்டாலும் உங்கட தம்பிமாற்ர பெருமையப் பேசிறதெண்டால் குஷிதான். அண்ணை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. உந்தப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு பற்றி ஒருக்காக் கதைக்கப் போறன். கிழக்கிலையும் கொழும்பிலையும் நடக்கிற படுகொலையளால தாங்கள் குழம்பிப்போறதாகவும் இதுகளத் தடுக்கிறதுக்குப் புது ஐடியா சொன்னால் அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் எண்டும் தெரிவிச்சிருக்கினமே.

**மன் :-** *முன்னமே கவர் எடுத்துப் போட்டாய். இவையள் குழம்புறதுக்கு என்ன இருக்கு? எவன எவனைச் சுட்டால் இவையளுக்கு என்ன? ஒரு அறிக்கையை விட்டுப்போட்டு இருக்க வேண்டியதுதானே! இதுக்கெண்டு வந்த வயளுக்கே புது ஐடியா வரயில்லையாம். மத்தவனுக்கு எங்கயிருந்து வாறதாம். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை திரும்பத் திரும்பப் படிக்கச் சொல்லும். அப்பிடியெண்டாலும் புது ஐடியா கிடைக்கும். ஏலாட்டில் சர்வதேச சமூகத்துக்குச் சொல்லிப்போட்டுப் போகச் சொல்லும்....*

**சின் :-** மன்னவருக்கு இன்னும் கோபம் தீரயில்லப் போல....அவையள் இரண்டு தரப்பிட்டையும் நல்ல பிள்ளையா நடக்க வேணுமெல்லோ! அவயள் என்ன செய்யிறது?

"ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்" எண்டு எஸ்.புஸ்பராஜா எழுதியிருக்கிற புத்தகம் வெளிவந்திருக்கெண்டு விளம்பரம் போட்டிருக்கினமே.....

**மன் :-** *அட அதை இன்னும் நீ வாசிக்கயில்லையே... பேரினவாதத்துக்கு எதிராய் போராடப் புறப்பட்ட பல போராளிகள் தங்கட சாட்சியங்களை எழுத வேணும். அதுதான் போராட்டத்தின்ர வரலாறாக இருக்க முடியும்.*

*அந்த வகையில புஸ்பராஜாவும் தான் போராட்டத்தில் பங்குகொண்ட காலங்களில அநுபவிச்ச பல விசயங்களைச் சொல்லியிருக்கிறார். உள்ளடக்கத்தை இரண்டு வகையாப் பாக்கலாம். தம்பிமார் மட்டும்தான் போராட்டத்தின்ர முக்கிய சக்திகள் இல்லை எண்டு நியாயமான அவருடைய சாட்சியத்தில தன்னைப் பற்றி நிறையவே நியாயம் தேடுறார். சாட்சியம் எழுதிற இவர் தமிழ் இளைஞர் பேரவையின்ர ஆரம்ப உறுப்பினராக இருந்தவர். ரெலோ அமைப்பின்ர நிறுவுனர்களில ஒருவர். தற்போது பிரான்ஸில வசிக்கிறார். வேறு என்ன சொல்ல....?*

**சின் :-** பரவாயில்லையே! புஸ்பராஜாவைப் பற்றி தெரிஞ்சிருக்கிறியளே....பதினேழாயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்குது. இதில வட-கிழக்கு மாகாணங்களில சில இடங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதே.

**மன் :-** *நானும் அப்பிடித்தான் முதலில நினைச்சன். இருபத்தியொன்பதாயிரம் பேருக்கு வழங்கப் போகினமாம். அதில பதினேழாயிரம் பேருக்குத்தான் இப்ப குடுத்திருக்கினம். புறக்கணிக்கப்பட்டதாக ஒண்டுமில்லை. மிகுதியும் வெளிவரட்டும். அதையும் பாத்த பிறகு இதைப் பற்றிப் பேசலாம். சனங்களைத் தூண்டிவிடுகிறவை பலர் அரசியல் லாபத்துக்காகத்தான் ஹர்த்தாலெல்லாம் செய்யினம்.*

**சின் :-** பொறுத்திருந்து பாப்பம்...கொழும்பில வீதித் தடை, பரிசோதனையெல்லாம் திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறதே.

**மன் :-** *எது நடக்காதெண்டு இதையெல்லாம் அப்புறப்படுத்திச்சினமோ, அதுவெல்லாம் இப்ப அதிகரிச்சிட்டுது.*

*இதுகளிலை எதையும் கட்டுப்படுத்த ஏலாதெண்டது வேற விசயம். ஒரு முன்னெச்சரிக்கைக்காகச் செய்யலாமெண்டு நினைச்சிருக்கினமாக்கும். சுட வாறவனை உள்ள விட்டுப்போட்டு தடுக்க நினைக்கிறவனை விமர்சிக்கிறீங்களே! இது நியாயமோ?*

**சின் :-** ஐ ஆம் சொறிங்கோ...ஆசியக் கிண்ணத்தை இந்தியா வெல்லும் எண்டு வர்ணனையாளர்களும் ஆரூடக்காறரும் கூறியும் இலங்கை கைப்பற்றிவிட்டுதே.

**மன் :-** *முதலில துடுப்பெடுத்து ஆடின இலங்கை 228 ஓட்டங்களை மட்டுமே எடுத்ததால அவையளும் நம்பிவிட்டினம். இந்திய அணி எங்கட வீரர்களின்ர சுழல் தாக்குதலில திணறிப்போச்சிடினம். அந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை அணி சரியாச் பயன்படுத்தியது. வெற்றியும் கண்டது. மகள் சந்தோசத்தில விழுந்து முழங்காலில லேசாக் காயம்.....!*

**மன்னவரும் - சின்னவரும்**

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்

# நெஞ்சினில் என்ன காயமோ...? 68

**மனச்சிதைவு நோய்க்கான சிகிச்சை முறைகள் யாவை?**

மனச்சிதைவு நோய் குணப்படுத்தக்கூடிய ஒன்று. அதன் அறிகுறிகளைப் பல்வேறுபட்ட சிகிச்சை முறைகளால் கட்டுப்படுத்த முடியும். பிரதானமான சிகிச்சை முறையாக அமைவது மருந்துகளேயாகும். இந்நோய்க்கான மருந்துகள் பலவிதமான மாத்திரை வடிவிலும் ஊசி மருந்துகளாகவும் கிடைக்கின்றன. இம்மருந்துகளை வைத்தியரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட காலம் உட்கொள்ளும்போது நோய் அறிகுறிகள் குறைகின்றன. இந்நோயின் ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சையளிக்கப்படுமாயின் மிக விரைவில் மனச்சிதைவு நோய் குணமடைகின்றது. ஆனால்,

## உள மருத்துவம்

துரதிர்ஷ்ட வசமாக மனச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் சிறிது காலத்தின் பின்னரே உளமருத்துவத் துறையை நாடுகின்றனர். இதற்கு சமூக நாணமும் சமூகத்தில் நிலவுகின்ற மூடநம்பிக்கைகளும் காரணமாகின்றன.

உளநோயின் அறிகுறிகளை சூனியம் ஏவல், கிரகக் கோளாறு, தெய்வக்குற்றம் என்பவற்றால் ஏற்படும் அறிகுறியாகக் கருதி மந்திரவாதிகள், சோதிடர்கள், பூசாரிகள் என்பவர்களின் உதவியை முதலில் நாடுவதினால் காலவிரயம் ஏற்பட்டு நோயின் தன்மை தீவிரமடைகிறது. தீவிர குழப்பத்திலுள்ள நோயாளி ஒருவரினால் அவருக்கு மாத்திரமன்றி சமூகத்தில் உள்ள மற்றவர்களுக்கும் தீங்கு ஏற்படுவதற்கு இடமுண்டு.

> **உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாக காணப்படும் இன்றைய காலகட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றுக்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத்துறையில் அநுபவம் பெற்றவர்களும் நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த. கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு. தி. சுவீந்திரன் பி.ஏ (உளவியல்) எம்.பில். உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களை பகிர்வர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.**

இந்நோயாளிகளின் பிறழ்நம்பிக்கை, மாயப்புலன் உணர்வுகள் காரணமாக தற்கொலை செய்து கொள்வதற்கோ, சில வேளைகளில் மற்றவர்களுக்குத் தீங்கு விளைவிப்பதற்கோ சாத்தியம் உள்ளது. இந்நிலையில் இவர்களுக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கத் தேவையேற்படுகின்றது.

ஒரு சில நோயாளிகள், அவர்களின் மருந்துகளின் பக்கவிளைவுகளைச் சந்திக்கும் வேளைகளிலோ அல்லது மருந்துகள் உட்பட எவற்றையும் உட்கொள்ள மறுக்கும் சந்தர்ப்பங்களிலோ, மருந்துகளின் பாவனையின் பின் குறிப்பிட்டளவு முன்னேற்றம் ஏற்படாத சந்தர்ப்பத்திலும் 'மின்சார வலிப்புச் சிகிச்சைக்கு' உட்படுத்துவது பயன்மிக்கது. மேற்கூறிய சிகிச்சைமுறைகளைவிட பல்வேறுபட்ட உளவியல் சிகிச்சை முறைகளும், இந்நோயாளியின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும். மனச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் குடும்பத்தில் இருந்தால், மற்றக் குடும்ப அங்கத்தினர் இந் நோயைப் பற்றி சரியான அறிவைக் கொண்டிருப்பது மட்டுமல்ல, இந்நோயாளியை எவ்வாறு அணுக வேண்டும் என்றும் அறிந்திருத்தல் அவசியம்.

குடும்ப நடத்தை மாற்று சிகிச்சை மூலம் (Family Behaviour Theraphy) நோயாளிகளினால் குடும்பத்தில் ஏற்படும் தேவையற்ற பிரச்சினைகள் குறைவது மாத்திரமல்ல, நோயாளி குணமடைவதைத் துரிதப்படுத்தவும் உதவும். ஒரு நோயாளி அளவுக்கதிகமான விமர்சனத்திற்குள்ளாக்கப்படும்பொழுதும், நோயாளியின் மீது அளவுக்கு மீறிய அக்கறையைச் செலுத்தும்போதும், குடும்பத்தில் வெறுப்புணர்வு குடும்பத்தில் காணப்படும் பொழுதும் இந் நோயாளிகள் குணமடைவது தாமதப்படுத்தப்படுகின்றது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நோயாளியின் குடும்பத்தில் இப்படியான சந்தர்ப்பங்கள் இருக்கும் பட்சத்தில் இவற்றைத் தவிர்க்குமாறு அறிவுரை கூறுவது அவசியம்.

(தொடரும்)

# உண்மையில் அழகு எது?

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

குடும்பத்தில் அனைவரும் சந்தோஷங்களை, பிரச்சினைகளை, துன்பங்களை, எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தப் பரிமாற்றமும், நெருக்கமும், குடும்ப உறவு என்கிற பாலத்தை மேலும் பலமுள்ளதாக மாற்றும். வாரம் ஒரு முறையாவது குடும்பத்தில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து, மனம் விட்டுப் பேசி, எண்ணங்களை, சுக, துக்கங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உறவுகள் பலப்படுவதை சீக்கிரமே உணர்ந்து கொள்ளுவீர்கள்.

மூன்றாவது, பாதுகாப்பு உணர்வு. ஒரு குடும்பத்துக்கு பாதுகாப்பு உணர்வை, குடும்பத்தலைவன் தருகிறான் என்பது உண்மையானாலும் கூட, குடும்பத்தினர் ஒவ்வொருவருக்கும், மற்ற அனைவருமாகச் சேர்ந்து, பாதுகாப்பான உணர்வை, மன தைரியத்தை வழங்கமுடியும். இந்த மன தைரியம் தான் துன்பத்தில் மனது துவண்டு விடாமல் தூக்கிப் பிடித்து நிறுத்துகிறது.

ஒரு கதையோடு, இந்த அத்தியாயத்தை ஆரம்பிக்கலாமா? ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்தின் தலைவர் இறந்து விட்டார். விதவைத் தாயும், அவருடைய நான்கு பெண்களும் தான். சாதாரணமான வசதி படைத்த குடும்பம் அது. ஒருநாள் அந்த நாலு சகோதரிகளும் தங்கள் வீட்டுக்கு அருகில் இருந்த நீரோடைக்குச் சென்றார்கள். தென்றல் காற்று, இனிய மாலைப்பொழுது, ரம்யமான சூழ்நிலையில், ஒரு சகோதரி தன் கைகளை நீட்டினாள். அழகான உள்ளங்கை. செதுக்கினாற் போன்ற விரல்கள். தன் விரலில் அணிந்திருந்த வைர மோதிரத்தை எடுத்து, உள்ளங்கையில் வைத்து, சகோதரிகளைப் பார்த்து பாருங்கள்! என் கை வெல்வெட் போல எவ்வளவு மிருதுவாக இருக்கிறது? அதிலே வைரம் இன்னும் அதிக ஜொலிப்புடன் தெரிகிறது இல்லையா? என்று பெருமையாய்ச் சொன்னாள். மூத்த சகோதரியின் வைரம் மின்னும் வெல்வெட் கையைப் பார்த்த இரண்டாவது சகோதரி, இதோ வந்துவிட்டேன்! என்று சொல்லிவிட்டு அருகில் ஒரு செடியில் பூத்திருந்த மலரைப் பறித்து எடுத்துக்கொண்டு வந்தாள். அதைத் தான் உள்ளங்கையில் வைத்துக் கையை மூடி, லேசாகக் கசக்கினாள்.

*நன்றி:- சுவாமி சுகபோதானந்தா*

(தொடரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி 81

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | ■ | 16 | 17 | 18 |
| ■ | 19 | 20 | ■ | 21 |
| ■ | 22 | ■ | 23 | ■ |

### இடமிருந்து வலம்

1) பல தத்துவஞானிகளையும், விஞ்ஞானிகளையும் உருவாக்கிய பழம்பெரும் நாடு. இந்நாட்டின் தலைநகரில் இவ்வருட ஒலிம்பிக் நடைபெறுகிறது.
7) பயிர்களின் தானிய கொத்து. (திரும்பியுள்ளது).
10) பூசனை. (குழம்பியுள்ளது).
16) ஆண் யானை
19) அழகற்றவர்களை இப்படி அழைப்பர் (திரும்பியுள்ளது)
23) நான்காம் வேற்றுமை.

### மேலிருந்து கீழ்

1) உலக சாதனை பட்டியலின் ஆங்கிலச் சொல்.
3) முரட்டுத்தனம் (குழம்பியுள்ளது)
4) கண்ணுக்குள் உள்ள பகுதிகளில் ஒன்று.
5) முருகன் (குழம்பியுள்ளது)
19) பழம் பெரும் மொழிகளுள் ஒன்று. (தலைகீழாக உள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.79க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

நா.வத்சலா பிரியதர்சினி, இல 51, 3ஆம் குறுக்குத் தெரு, தில்லையடி, புத்தளம்

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

- செல்வி. ஏ.ஜெனிட்டா, ராணி மஹால், திகன, ரஜவெல்ல.
- திருமதி. சு.ஞானராசா, இல 993, அன்புவழிபுரம், திருகோணமலை.
- செல்வி. ரமீஸா யாசீம், இல 67ஏ, நுவரெலியா ரோட், ஹாலி-எல.
- ஸ்ரீ.குணாதீதன், 10, தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.
- ஐ.விஜயபாலன், இல 212, பிரதான வீதி, கொழும்பு - 11.
- சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை, 84/10, பாரதி வீதி, திருகோணமலை.
- திருமதி. ஜே.எஸ்.லெட்சுமி, மருந்தகம் பிபிலை எஸ்டேட், பிபிலை.
- யோசப் டொரிங்டன் ஸ்பெக், 59/1, லேடி மெனிங் டிறைவ், மட்டக்களப்பு.
- திருமதி. எம்.சுந்தரேசன், 49, நர்சிங்ஹோம் வீதி, ஹட்டன்.
- ரபீக்கா முஹம்மது யூசுப் ஜான், இல 31, கல்லூரி வீதி, திருகோணமலை.

## குறுக்கெழுத்துப் போட்டி 79 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ச | 2 ந் | 3 நி | 4 யா | 5 சி |
| 6 கா | ■ | 7 ம் | ■ | 8 ர |
| 9 தே | 10 ல் | 11 ம | ■ | 12 ம் |
| 13 வ | 14 ம் | 15 தி | 16 ர | ■ |
| 17 ன் | 18 ப | ■ | 19 ம் | ■ |
| ■ | 20 ஆ | 21 ரை | 22 வ | ■ |

## போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 11.08.2004க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி இல-81**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ. இல - 1772,**
**கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

**சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.**


# ராதா ரெக்ஸ்ரைல்ஸின்

## வண்ணச் சேலை பரிசுப் போட்டி

எல்லாவிதமான,ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என எல்லோருக்கும் பிடித்தமான ஆடை அணிகளின் அட்சயபாத்திரம். எல்லாத் தெரிவுகளும் ஓரே கூரையின் கீழ்.

**RATHAA TEXTILE**
377,379A,Galle Road,Wellawatta,Colombo-06.
(Opposite of Delmon Hospital) Tel:2364792

Branch:
No,33,37th Lane,
Colombo-06.
☎: 2364727

**மகளிர் மட்டும்** **மகளிர் மட்டும்**

55

பெயர்:- ............................
முகவரி:- ............................
................................................
தொழில்;- ............................
கையொப்பம்:- ......................



- ஒவ்வொரு வாரமும் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே வண்ணச் சேலை பரிசு வழங்கப்படும்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பதிவுத் தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா)
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: **11-08-2004**

அனுப்ப வேண்டிய முகவரி:-
'ராதாவின் வாரம் ஒரு வண்ணச்சேலை'
தினமுரசு வாரமலர்,த.பெ.இல-1772,
கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு சேலை? 53
## ஜாஎல வாசகிக்கு அதிர்ஷ்டம்!

**இவ்வாரம் சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

**ஏ.திரேசம்மா,**
**வேன் காட் இல 525/1பி,**
**நீர்கொழும்பு வீதி, ஜாஎல.**

பரிசு பெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்த வாரம் யாருக்கு? ஒரு வாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா. இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசுபெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்ற பின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# 'விலாசம்...'

இடைவேளைக்குப் பிறகு எவருமே வகுப்பெடுக்க விரும்பாத பாடசாலை அது.

அநேகமாக எவருமே விடுப்பெடுக்க விரும்பாத இருபதாம் திகதி அன்று.



சம்பள நாள்!

சும்மா சொல்லக் கூடாது.... அன்றைய தினம் வரவுப் பதிவேட்டில் எவருக்குமே சிவப்புக் கோடு விழுவது கிடையாது.

லுக்மான் ஹக்கீம் மீண்டுமொரு தடவை கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தான். ஜொஹறா உம்மா என்ற பெயர் எழுதப்பட்டிருந்தது. யார் இந்த ஜொஹறா உம்மா.......?

யார் அனுப்பிய கடிதம் இது?

அவன் கடமையாற்றும் பாடசாலையின் விலாசம் போட்டு ஜொஹறா உம்மாவுக்கு வந்திருக்கிறது.

எந்தெந்த டீச்சரை எப்படி எப்படித் திட்டித் தீர்க்கலாம் என்று திட்டம் தீட்டி...... மனசுக்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்த அதிபர், 'ஆசிரியர் கூட்ட அறை'யை நோக்கி ஓடிக்கொண்டிருந்த அதே நேரம்தான் லுக்மான் ஹக்கீமிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தார்.

ஜொஹறா உம்மாவைத் தேடி அலைந்தான் லுக்மான். மஹ்பூபா டீச்சர், அப்துல் ஸலாம் சேர், நளீமா டீச்சர், சித்தி டீச்சர், சாலிஹ் சேர், முனவ்பர் சேர், சபுரா உம்மா டீச்சர், அபூசாலிகு சேர், ஜெஸீ டீச்சர், உம்மு குல்தூம் டீச்சர், ஹம்ஸா சேர், யூஸுப் சேர்.

எல்லோரிடமும் காட்டியாயிற்று.

"நேத்துப் புதுசா வந்த வொலண்டிய மெடமோ தெரியா....

போய்க் கேளுங்க ஒபிஸ் அங்கிள்......" - என்றாள் றம்ஸியா.

"கன்டீன் தாத்தாவோ தெரியா....." - என்றாள் ஆபிலா.

ரியாட் மௌலவியும், நஸ்லியா மௌலவியாவும் மாலை நேர அரபு வகுப்புக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

"ரியாட் மௌலவி இது யாருன்னு பார்த்துச் சொல்லுங்க...."

"எனக்கும் தெரியாது தொர.... நம்ம 'நவ்றா பேபி'க் கிட்டக் கேளுங்க....."

"சரி மௌலவி...."

ஜொஹறா உம்மாவைத் தேடி நான்கு மாடிக் கட்டிடங்களிலும் நாயாய் அலைந்தான் லுக்மான். இது தியத்தலாவையாக இருந்தாலாவது.... ஜொஹறா ஹுஸைனிடமாவது கடிதத்தைக் கொடுத்து விடுவான்.

சம்பளச் 'செக்'கை மாற்றிக் கொள்ளும் அவசரத்திலிருந்த ஆசிரியர்களுக்கு லுக்மான் காட்டிய கடிதத்தின் பெயர்கூட ஒழுங்காகக் காதில் விழவில்லை.

★ ★ ★

மறுநாள் -

அதிபருக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது.

"எங்கட ஜொஹறா தாத்தாவோட கொஞ்சம் பேசேலுமா?

அவட மவள் ஹொரோடிய..... அவ வராட்டில்.....

அவட மவள் சுவர் சாகிய....... அவக்கு பவுர் நோகிய......"

"எந்த ஜொஹறா உம்மா.....?" என்று கேட்டார் அதிபர். உதவிக் கல்விப் பணிப்பாளர் வந்து உட்கார்ந்ததும் உடனே தொலைபேசித் தொடர்பைத் துண்டித்தார். லுக்மான் வந்தான்.

"சேர் அந்த 'ஜொஹறா உம்மா'ட கடிதத்தை இன்னும் கொடுக்கவில்லை....... அது யாரோ தெரியவில்லை சேர்."

"சரி, வை.... பார்ப்போம்..... பகலாகி விசாரிப்போம்...... இப்ப போய்...... தொரக்கி... 'கீரைக் கஞ்சி' வாங்கி வா போ.....!" - அதிபரிடம் காசை வாங்கிக்கொண்டு கீழிறங்கினான் லுக்மான்.

நாலாயிரம் ரூபாய்க்கு இப்படியொரு நாயலைச்சல்! தன் பேடோடும் குஞ்சோடும் கூடமைத்து வசிக்க ஒரு கிளையற்றுத் தவிக்கின்ற குருவி அவன்!

கவலைகள் சுமந்த நெஞ்சோடு....... அவன் அதிபரிடம் போனான் கஞ்சோடு!

எட்டரை தாண்டி வந்த எவரோடோ சூடாகிப் போயிருந்தார் பணிப்பாளர்!

லுக்மான் ஹக்கீம் இடாப்புகளை அடுக்கத் தொடங்கினான்.

ஜகுபர் சேர் அடிக்கடி பாடுகிற ஒரு பாடலை அவனது வாய் முணுமுணுத்தது:

"ஒரு பிள்ளை தன் கல்வியில் சிறந்து.....

ஒரு பிள்ளை தன் கல்வியை இழந்து......

ஏழ்மையில் நாளும் ஏங்கியே வாடும்
நாயனின் தீர்ப்பு இது! - இங்கு
யார் இதை மாற்றுவது?"

"சேர்"

"யார்?"

"நான்தான்... ஜொஹறா உம்மா......"

"நீங்க தானா அது?"

"ஆமாம்.... தம்பி.."

"யாரு நீங்க?"

"ரஹீன்ட உம்மா"

"எந்த ரஹீம்?"

"ஒண்ணாம் வகுப்பு பீ, ல."

"கவுஸ் நானாட மகனா?"

"இல்லை."

"பிஸ்ருல் ஹாபிட?"

"இல்லை."

"ரியாஸா யாஸீன்ட?"

"இல்லை."

"மதார் நானாட?"

"ஆ..... அவர்டயேதான்....."

"ஆ.... அந்த வெள்ளை..... ஒசந்த..... கறுப்பு...... கட்டை?"

"சும்மா போங்க தம்பி... அவனேதான்......ரெண்டுல நிஷா படிக்குது..... மூணுல மாலிக்கு....... நாலுல அத்து ஜப்பார்... ஆறுல பரீது...."

"2005க்கும் வருங்களா?"

"சும்மா போங்க தம்பி...... அதில்ல... இந்தா நேத்தெனக்கொரு கடிதம் வந்துச்சா....?"

"வந்துச்சாவா?"

"ஏன் தம்பி கோவிச்சுக்கிறீங்க....?"

"பின்னே...... ஸ்கூல் விலாசம் போடலாமா?"

"..... என்ன தம்பி செய்யிறது? நீங்களே சொல்லுங்க.... காலையில ஏழு மணிக்கு நான் ஸ்கூலுக்கு வந்தா வீட்டுக்குப் போறதே இரவைக்குத் தானே....

இவன்..... சின்னவன்..... என்ட ரஹீமுக்கு இளையது மொண்டசூரி போவுது.... அது முடியுது பதினொன்னரைக்கு. ரஹீமுக்குப் பன்னெண்டு மணிக்கு உடும்......

ஒண்ணரை மணிக்கு மாலிக்குக்கு ஸ்கூல் உடும்..... மத்ததுக்கெல்லாம் ரெண்டு மணிக்கு ஸ்கூல் உடுது... இதுக்குள்ள எப்படித் தம்பி நான் ஊட்ல இருப்பேன். இந்த லட்சணத்துல...... எங்களுக்கு வீடாவது விலாசமாவது.....?" - என்று சொல்லி முடித்தாள் ஜொஹறா உம்மா.

லுக்மான் ஹக்கீம் எதுவுமே பேசாமல் - கடிதத்தைக் கொடுத்தான்.

- கிண்ணியா அமீர் அலி -

# மாறாத பாசம்

ஜன்னல் சிறையுடைத்து மெல்லென மேவி வந்த தென்றல் ஜன்னலருகேயிருந்த மேசையின்மீது பார்த்தபோது புயலென புறப்பட்டுச் சென்றுவிட்டது. காரணம் இன்னும் மிதுவால் பிரித்துப் படிக்காமல் கிடக்கும் அனாதைக் கடிதம். அப்படியென்ன தான் அந்தக் கடிதத்தில் இருக்குதோ! இதே சந்தேகத்தில்தான் மிதுவும் அக்கடிதத்தைத் தொட முயன்றாள். விரல்கள் ஏனோ வீணாய் நடுங்கத் தொடங்கி, மனம் பதற்றத்துடன் கடிதத்தைத் தொட முடியாமலே..... என்ன நினைத்தாளோ, ஜன்னல் அருகே போய் நின்றாள். தண்டவாளத்தின் நெடுநேரத் தாகம் தீர்க்க வந்த இரயிலைப் பார்த்தபடி



திகைத்தாள். இந்த இரயில் போலவே அந்த நாளும் அவள் நினைவில் வந்து பயமுறுத்திப் போனது.

வசந்தி - இராஜகோபால் தம்பதிக்கு ஒரே மகள் மிதுலா. இவள் முதலாம் ஆண்டு உயர்தர மாணவி. இரயில் பாதை வழியில் ஒரு அழகான வீடு. அன்பான பெற்றோர். அமைதியான வாழ்க்கை. இதில் இப்படியொரு புயல் புகுந்து விளையாடும் என்பது அவளுக்குத் தெரியாது.

அன்றும் வழமைபோல கணக்கியல் வகுப்புக்குப் போனாள் மிதுலா.

"இன்றைக்கு சேர் வர லேட்டாகுமாம்... சிலவேளை தான் கிளாஸ் நடக்கும்; இல்லேன்னா, எல்லோரும் திங்கட்கிழமை வரணுமாம்" என்று ராகேஷ் வந்து வகுப்பறையே அதிரும்படி கத்தினான்.

"சரி கொஞ்சம் வெயிட் பண்ணிப் பார்க்கலாமே" என்று ரம்யா சொல்ல மாணவர்கள் தங்கள் வேலையைக் காட்ட ஆரம்பித்தார்கள். யாரோ அழைத்தாற்போல் மனம் சொல்ல மிது தன் விழிகளால் தேடினாள். "இல்லை சும்மா பிரம்மை" என்று மீண்டும் முன்னாள் திருப்பிக் கொண்டாள். மீண்டும் ராகேஷ் தன்னைப் பார்த்தபடி இருந்ததை நினைவில் கொண்டுவந்து.... தன் விழிகளை அவன் பக்கம் திருப்பினாள். அவனில் எந்தச் சலனமும் இல்லை. மிதுவை நோக்கியே பார்த்திருந்தான். சட்டென்று திரும்பிக்கொண்டவள், ரம்யாவை அழைத்தாள். ரம்யாவும் மிதுவும் நெருங்கிய தோழிகள். இருப்பினும் மிது சாதுவானவள். ஆண் நண்பர்களோடு கதையே இல்லை. ரம்யா இதற்கு நேர்மாறானவள்.

"ரம்யா...... ரம்யா" மிது அழைத்ததும் என்னடி என்றாள் ரம்யா. மிது ரம்யாவை நோக்கி, "ராகேஷ்..... ரா..கேஷ்" என்று இழுத்ததும் ரம்யா தன் பெரிய விழிகளை உருட்டிக்கொண்டு ராகேஷை நோக்கினாள். அவன் ரம்யா தன்னை கவனித்ததும் சட்டென்று குனிந்தான். ரம்யா மேலும் விளக்கம் தேவையில்லாதபடி மிது, "இப்ப பாரு வேடிக்கையை" என்றவள், தன் நோட்டுக் கொப்பியில் ஒரு ஏட்டைக் கிழித்து என்ன எழுதினாளோ தெரியவில்லை. எண்ணங்களின் சுமை தாங்காமல் எழுத்துக்கள் நொண்டியடித்தது போல அவசர அவசரமாய் எழுதி மிது கொடுத்ததாக சொல்லி ராகேஷிடம் கொடுத்தாள். வகுப்பறையில் மாணவர்கள் தங்கள் தங்கள் நண்பர்களோடு உலக சமாச்சாரங்களை உளறிக்கொண்டிருப்பதால் இதை யாரும் கவனிக்கவில்லை. அதை வாங்கிக்கொண்ட ராகேஷ் சட்டென்று எழுந்து வெளியில் போய்விட்டான். மிதுவிற்கு தலைகால் புரியவில்லை.

"என்னடி ரம்யா என்னத்த கொடுத்த, ஏதும் பிரச்சினையாகிவிடப் போகுது. அவன் பொல்லாதவன்; ஏதும் செய்து விடப்போறான்" என்றாள் மிது கலங்கிய கண்களுடன்.

"ச்சீ..... சும்மா இருடி. இதற்கெல்லாம் பயந்துகொண்டு....... அவன் திமிரை எப்படி அடக்கிறேன் பாரு" என்று சவால் விடுவதுபோலச் சொன்னாள். மீண்டும் வகுப்பறையினுள் வந்த ராகேஷ் "இனியும் வெயிட் பண்ணி பிரயோசனம் இல்ல. நாங்க வீட்டுக்குப் போகிறோம்" என்றான். அவன் சொல்லைக் கேட்டு சந்தோஷத்துடன் தலையாட்டியபடி எல்லோரும் கலைந்து சென்றுவிட்டனர். தம் கொப்பிகளையும் எடுத்து மிதுவும் ரம்யாவும் வர, "நானும் உங்களோடே வருகிறேன்" என்றது ஒரு குரல், அவர்களின் சிரிப்பையும் நட்பின் பகிர்வையும் தடுத்து.

அவன் தான் ராகேஷ். மௌனித்துப் போன இரு பெண்களும் தங்களுக்குள்ளே ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். ரம்யா தான் மீண்டும் பேசத் தொடங்கினாள்.

"எங்கே?" என்றாள் ராகேஷைப் பார்த்து....

"சும்மாதான் வீட்டுவரை வந்து விட்டிட்டு போறேன், மிது விரும்பாட்டி பரவாயில்லை. நா சொல்ல வந்தத இப்பவே சொல்லிடுறேன்" என்றான் ராகேஷ்.

ரம்யா தொடர்ந்தாள். "என்ன சொல்லனும் மிது மட்டுமில்ல, நீங்க வீட்டுவரை வருகிறதென்றால் எனக்கும் விருப்பமில்லை" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"சொரி ரம்யா. மிது என்னையே விருப்பம் என்று சொன்ன பிறகு நான் ஏன் பயப்படவேணும்? நா சொல்ல வந்தது..... என் நெடுநாள் ஆசை எல்லாமே இன்னும் இரண்டே நாளில் அழகான லெட்டரிலேயே எழுதிப் போடுகிறேன். மிது மாதிரியே லெட்டரிலேயே பதில் அனுப்புனா போச்சி.... அப்ப தா என்னை மிதுவால் புரிஞ்சுக்க முடியும்" என்று கடகடவென கதைத்துவிட்டு பதிலுக்குக் காத்திராமல் போய்விட்டான்.

மிதுவிற்கு பாறாங்கல்லையெடுத்து தலைமேல் போட்ட மாதிரி இருந்தது. ரம்யா என்னதான் ஆறுதல் சொன்னாலும் அவளை ஆதரித்துப் பேசவும் முடியாமல் எதிர்த்துப் பேசி ஒதுக்கவும் முடியாமல் தவித்தாள்.

"திங்கட்கிழமை நா சும்மா சொன்னேன்னு சொல்லிச் சமாளிச்சிடலாம்" என்ற ஒரு ஆறுதல் வார்த்தையோடு ரம்யா விடை பெற்றாள். மிதுவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

ரம்யா பேசாமல் இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினை வந்திருக்காதே? என்று வருந்தினாள். உண்மையாகவே அவன் சொன்ன மாதிரி இன்று ராகேஷ் என்று எழுதப்பட்டு கடிதம் ஒன்று வந்து இருக்கிறதே.... அம்மா, அப்பா பார்த்திருந்தால் என்ன நடக்கும்..... கடிதவுரை இப்படி விரிக்கப்பட்டிருப்பதால் நிச்சயம் அம்மா பார்த்திருப்பாள். எனக்கு கடிதம் இதுவரை தனிப்பட்ட முறையில் வந்ததில்லையே.....? ரம்யா கூட போனில் தானே பேசுவாள். என்ன நடக்கப் போகுதோ...... போன கிழமை அடுத்த வீட்டு கீத்தாவிற்கு இப்படி லெட்டர் வந்ததும் அவள் மேல் உயிரையே வைத்திருந்த அப்பா எப்படி ஏசினார். அம்மா எப்படி அடித்தாள். அவள் படிப்பையே நிறுத்திவிட்டார்களே! அவசர அவசரமாய் கல்யாண ஏற்பாடுகள் நடக்குதே! எனக்கும் இந்த நிலை தானா? என்று கற்பனைக் குதிரையின் கடிவாளத்தைக் கத்தரித்துவிட்டு கற்பனையின் உச்சத்திலே நின்றாள். இல்லை கீத்தா உண்மையிலேயே ஒரு மோசமான தகுதியில்லாத ஒருவனை காதலித்ததால் தானே அந்த நிலைமை. நான் அப்படி இல்லையே என்று சமாதானப்படுத்திக்கொண்டவள் மீண்டும் சோர்ந்தாள். ரம்யா எழுதிய விளையாட்டுக் கடிதம் என்னைத் தப்பாகவல்லவா புரியவைத்திருக்கும். அதனால்தானே அவன் இன்று எனக்குக் கடிதம் எழுதி என் நிம்மதியைக் கெடுத்துவிட்டிருக்கிறான் என்று நினைத்து நினைத்து கண்ணீர் மொழிகொண்டு அவளது கண்கள் கதை சொல்லிக் கொண்டிருந்தன. மீண்டும் கையில் எடுத்தாள், முதலிலேயே தொட முயன்று தோற்றுப்போன அந்தக் கடிதத்தை.... அறைக் கதவு திறக்கப்பட்டு அப்பா வந்து நிற்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டவள், கடிதத்தை காட்டவும் முடியாமல் கிழிக்கவும் முடியாமல் உள்ளத்தின் ஓரமாய் எங்கோ உறங்கியிருந்த உணர்வுகள் அவளை உசுப்பிவிட்டு வேடிக்கை பார்த்தன. கண்ணீர் தடையின்றி பாய்ந்தது. இராஜகோபால் மிதுவின் அருகில் வந்து அணைத்தபோதுதான் அவள் விம்மி அழவே ஆரம்பித்தாள்.... மகளின் அழுகுரல் கேட்டு ஓடிவந்த வசந்தி, அவள் கையில் இருந்த கடிதத்தை வாங்கி கிழித்துப் போட்டாள்.

"மிது ஏனம்மா அழுகிற...... உன்னைப் பத்தி எங்களுக்குத் தெரியாதா........ நீ எங்க மகள். இப்படியெல்லாம் பண்ணமாட்டாய். எனக்கு நல்லாத் தெரியும். யாரோ ஒருத்தன் லெட்டர் போட்டால் இப்படியா பயந்து சாவாய். நாளைக்கே அவன் யாரென்று விசாரித்து பேசவேண்டியதை - கொடுக்க வேண்டியதைக் கொடுக்கலாம். நீ நல்ல பொண்ணு. அழாதே" என்று இராஜகோபால் மிதுவை அணைத்தபடி பேசினார்.

வசந்தியும் சரி அதை விட்டிட்டு, வாங்க சாப்பிடலாம் என்று அழைத்தாள்.

மிது தன் கண்களைத் துடைத்தபடி 'என் தெய்வங்களே என்னை ஏற்றுக்கொண்ட பிறகு இனி எவனுக்குப் பயம்' என்ற உறுதியோடு சமையலறையை நோக்கி நடந்தாள்.

- ஆர். சுபாஷினி, ஹட்டன்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## மௌனம் மனதை நிலைப்படுத்தும்

செல்வத்தை இழந்தால் - எதனையும் இழக்கவில்லை. ஆரோக்கியத்தை இழந்தால் - ஏதோவொன்றை இழந்துவிட்டீர்கள். ஒழுக்கத்தை இழந்தால் - அனைத்தையும் இழந்துவிட்டீர்கள்.

ஒரு தரம் இறைவனை அநுபவம் செய்து விட்டால் அதன் பின்னர் அவரைவிடச் சிறந்த ஒருவரைத் தேட வேண்டிய தேவை இருக்காது.

பிறப்பின் முடிவு இறப்பு - இறப்பின் முடிவு பிறப்பு.

ஒரு மனிதன் தனக்குள்ளே அமைதியைக் காணாவிட்டால் இந்த உலகில் அமைதி இருக்க முடியுமா?

நம்பிக்கையற்ற மனிதனுக்கு அமைதி இருக்காது. மனதில் அமைதியற்றவனுக்கு எவ்வாறு மகிழ்ச்சி இருக்க முடியும்?

இறைவனுக்கு பரந்த முதுகுண்டு. உங்களிடம் சுமையிருந்தால் உங்களிடம் இருந்து அவர் அதை எடுப்பதற்கு அனுமதியுங்கள்.

மௌனம் என்பது சத்தமில்லாமல் இருப்பது மட்டுமல்ல. அத்துடன் மனதை நிலைப்படுத்தி வைப்பதுமாகும்.

புகழ்ச்சியை நான் அநுபவித்தால், இகழ்ச்சியால் எளிதாகத் தாக்கப்படுவேன் என்பது அர்த்தமாகும்.

நீங்கள் விடுதலையின் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டால் மட்டுமே உங்களை நீங்கள் விடுதலை பெற்றவர் என்று அழைக்க முடியும்.

உங்கள் சிந்தனையை வகைப்படுத்துவதற்கும், இறைவனை நினைப்பதற்கும், தினசரி காலையில் சில கணங்களைச் செலவு செய்ய முடியுமானால் உங்கள் நாள் அற்புதம் நிறைந்ததாக இருக்கும்.

கோபத்தீயினால் நீங்கள் எரியும்போது, புகை உங்கள் கண்களில் புகுந்துவிடும்.

**"இன்றைய நாளுக்கான நல்ல எண்ணங்கள்" என்ற நூலிலிருந்து....**

# இலக்கிய நயம்



## "அவர் அருகில் இருந்த போது வெட்கம் ஆசை எழுந்த போது ஏக்கம்..."

### தருவது முழடில்யன்

பகலெல்லாம் ஒளிக்கதிர்களை வீசிய சோர்வில் ஓய்வெடுக்க இறங்கிச் சென்றான் கதிரவன். தூரத் தெரிந்த மலைகளினிடையே திருடன் போல அவன் பதுங்குவதைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் பார்கவி.

பறவைகள் தம் குஞ்சுகள் இருக்கும் கூடுகளுக்கு விரைந்துகொண்டிருந்தன. பார்கவிக்கு எழுந்து வீடு செல்ல வேண்டும் என்று தோன்றவில்லை. 'நன்றாக இருளட்டும். அப்போதாவது இந்த நினைவுக் குமிழிகள் அதற்குள் புதைந்து மறைந்து போகாதா!' என்றெண்ணினாள். நீருக்குள் அழுத்த அழுத்த மேலெழும் பந்து போல மனதின் மேல்தளத்திற்கு வந்துகொண்டிருந்த நினைவுகளால் அசௌகரியமடைந்தவளாகச் சிறிது எழுந்து உலாவினாள்.

முல்லைப் பூக்கள் மலர ஆரம்பித்திருந்தன. புதர்களிடையே மலர்ந்திருந்த காந்தள் பூக்களும் சிவப்பு மஞ்சளாய் சிரித்தாடின. தூரத்தே பெண்மானைத் தழுவி இருந்த கரிய பிடரியுடைய கலைமானையும் கண்டாள். 'எனக்கு மட்டும் ஏன் இந்தத் தனிமை?' என்று கேட்டு மறுபடி சலித்துக்கொண்டாள். தொழுவம் செல்லும் பசுவின் மணியோசையும் அதனோடு இணைந்து ஆயர்களின் குழலோசையும் மிக மெல்லியு இசையாகப் பின்னணியில் கேட்டன. 'எல்லா இன்ப அறிகுறிகளையும் தன்னிடம் வைத்திருக்கும் இந்த மாலைப்பொழுது, என்னிடம் மட்டும் சிறிதளவேனும் இரக்கமல்லாமல் நடந்துகொள்கிறது' என்று பொழுதையும் மனதுக்குள் சபித்தாள் பார்கவி.

திரும்பப் போய்க் கல்லில் அமர்ந்தாள். முழங்கால்களைக் கைகளால் கட்டிக் கொண்டாள். கதிரவன் ஒளிந்துகொண்டதும், காற்று குளிரைப் பூசிக்கொண்டு தென்றலாக அலைந்தது. உடல் நடுங்கும் விதமாக மெல்லெனத் தன் மீது படர்ந்த தென்றலையும் பார்கவியினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. 'அவர் இருந்தபோது எங்கே போயிருந்தன இவையெல்லாம்?' என்று யோசித்தாள். 'அரசன் இருக்கும்போது மிகப் பணிவாக உலவும் சேவகர்களும் மந்திரி பிரதானிகளும் அவன் போய் விட்டால் சுதந்திரமாகத் தம் அட்டகாசங்களை ஆரம்பித்துவிடுவது போலல்லவா இவை இன்று கும்மாளமிடுகின்றன....' என்று சினந்தாள். கூடவே 'இதே இடத்தில் அவர் என்னுடன் இருந்தபோது, இந்த மாலைப் பொழுது என்னிடம் எவ்வளவு கனிவாக நடந்துகொண்டது' என்றும் எண்ணினாள்.

ஆனால் 'நாம்தான் அச்சத்தாலும் வெட்கத்தாலும் அவரை ஏமாற்றி அனுப்பி விட்டோம்' என்று வருத்தப்பட்டாள். தன்னைத் தானே கடிந்துகொண்டு, அன்றைய நாளை மனதுக்குள் மீட்டினாள்.

பார்கவியை அத்தனை நெருக்கத்தில் பார்க்க நேர்ந்ததில் சங்கீதன் மிகவும் கிளர்ச்சியடைந்திருந்தான். அவளது சேலை முந்தானை காற்றில் பறந்து இலேசாக, மிக இலேசாகவே அவன் மீது உரசிச் சென்றதை ஒரு பேறு போல உணர்ந்தான். உடல்களும் சற்று நகர்ந்தால் உரசிக்கொள்ளும் தூரத்திலேயே அமர்ந்திருந்தார்கள்.

பக்கவாட்டிலேயே அவள் அழகைக் கண்களால் விழுங்கி அவதிப்பட்டுக்கொண்டிருந்தான் சங்கீதன்.

அவள் பருவத்தின் வெறியைச் சமாளிக்க மாட்டாததாய் திணறிய ரவிக்கையைப் பார்க்க நேர்ந்த ஒரு கணத்தில் திகைத்துத் தடுமாறினான்.

அவன் பார்வை அலைந்த இடங்களும், அதனால் அவன் அப்படி அவதிப்பட்டதும் அவளுக்குப் பெரும் இன்பமாயிருந்தது.

இன்பமான ஊகங்களுக்கு இடங் கொடுத்த வளைவுகளுடன் கண்ணைப் பறித்த எழுச்சிகளில் சித்தம் தடுமாறியிருந்த சங்கீதன், தன்னைச் சமனப்படுத்தவும் சும்மா இருக்கும் அந்தரத்தை முடிவாக்கவுமாக அருகே இருந்த புல்லை வலது கையால் கிள்ளினான்.

அவன் கரம் அசைந்தது கண்டு திடுக்குற்றுத் திரும்பினாள் பார்கவி. ஒரு கணம் தான். அவன் தோளில் அவள் மோதிக் கொண்டாள். அவளுக்கு உடல் முழுவதும் மயிர்க்கூச்சல் உண்டானது. சங்கீதன் கரம் அவளை இறுக அணைத்து மீண்டது.

தாமரைத் தளிர் போன்ற மிருதுவான அவள் உடலின் மோதலால் சங்கீதனும் ஒரு விநாடி நிலைகுலைந்து போனான்.

அவள் என்ன நினைத்துக்கொண்டாளோ என்ற பயத்தில் அவசரமாக விலகி அமர்ந்தாள்.

ஏன் விலகி அமர்ந்தீர்கள்? என்று கேட்கத் தைரியமில்லாமலும், மிதமிஞ்சிய நாணத்தால் என்ன செய்வது என்று விளங்காமலும் சேலையைச் சரிப்படுத்திக் கொண்டு நிமிர்ந்து இருந்தபடி, ஆனால், கண்களைத் தரையில் பாய்ச்சி வெகு நேரம் பேசாமல் இருந்தாள் பார்கவி.

இவள் மௌனம் வேறு அவனை மேலும் சங்கடப்படுத்தியது. ஏதோ செய்யக் கூடாத குற்றத்தைச் செய்துவிட்டவன் போல மனதில் விவரிக்க இயலாத கூச்சத்துடனும் வருத்தத்துடனும் அப்படியும் இப்படியுமாக அசைந்தான். 'இந்தத் தனிமையில் அவள் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டது நியாயமா?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு, மனசாட்சி குத்தியதால் பெரிதும் திண்டாடினான்.

அவனுடைய அவதியைப் பார்த்து அவள் இரங்கினாள். 'நான்தான் திடுக்குற்று உதறி அவனைக் குற்றவாளியாகக் காட்டி விட்டேனா?' என்று மனம் நொந்தாள். உண்மையில் காலங் காலமாக அவன் கைகளுக்குள் சிறைப்பட்டுக் கிடக்கவே அவள் விரும்பினாள்.

'ஆனால் இந்த வெட்கம்...... பார்! அவனை எவ்வளவு தூரம் மனம் குமையச் செய்துவிட்டது!'

இப்போது யோசிக்கையில் அவனை அணைத்துப் பிழிந்துவிடும் ஆவேசம் பார்கவியுள் கிளர்ந்தது.

'அருகில் இருந்தபோது வெட்கம் விடவில்லை. வெட்கத்தை அடியோடு புதைத்துவிட்டு ஆசை எழுந்து நிற்கும் போது அவர் அருகில் இல்லை. இந்த மாலைப்பொழுது வேறு இரக்கமே அற்ற கொலைகாரனாக அல்லவா வதைக்கிறது!

சே...... அவருக்கும் இரக்கமில்லை; இந்த மாலைக்கும் இரக்கமில்லை!'

அடிவானத்தால் விழுங்கப்படும் சூரியப் பந்தைப் பார்த்தபடி வேதனையோடு அமர்ந்திருந்தாள் பார்கவி. இருள் வழிந்து நிலமெங்கும் பரவியது.

*பல்கதிர் மண்டிலம் பகல்செய்து*
*ஆற்றிச் சேய்உயர் பெருவரைச்*
*சென்று அவண் மறையப் பறவை*
*பார்ப்புவயின் அடையப் புறவின்*
*மாஎருத்து இரலை மடப்பிணை தழுவ*
*முல்லை முகவாய் திறப்பப் பல்வயின்*
*தோன்றி தோன்றுபு புதல்விளக்கு*
*உறாஅ மதர்வை நல்லான் மாசுஇல்*
*தெண்மணி கொடுங்கோற் கோவலர்*
*குழலோடு ஒன்றி ஐதுவந்து இசைக்கும்*
*அருள் இல் மாலை........*
*( நற்றிணை - 69 : 1-9)*

# சிந்தியா பதில்கள்

**தலைநகரில் சந்தியில் வைத்து, எல்லோரும் காணும்படியாக புளொட் மோகனைச் சுட்டுக் கொன்று இரத்தவெள்ளத்தில் மிதக்கவிட்டுப் போனவர்களை இன்னும் கண்டுபிடிக்கவில்லையா?**

*-கே.தனபால், தெஹிவளை.*

"கருணா குழுவினரோடு இணைந்து யாரையும் செயற்பட வேண்டாம் என எச்சரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே....." என்று தமிழ் ஊடகங்கள் சொல்வதைப் பார்த்தால், இவர்களால் கொலைகள் செய்து சமூகத்தைச் சுத்தப்படுத்தவென (?) அதிகாரமளிக்கப் பட்டவர்கள்தான் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. பிறகென்ன?

ட்டுட்டு

**கருணைக் கண்களை நீங்கள் எங்கே கண்டிருக்கிறீர்கள்?**

*-சிவபாலன் அகல்யா, மண்டூர் - 2.*

பசுமாடுகளிடம்!

ட்டுட்டு

**ஆசியக் கிண்ண வெற்றி எப்படி?**

*-ஏ.எல். வாஜிதீன், ஏறாவூர்.*

ஒருநாள் போட்டிகளின் ஆட்டநாயகன் துடுப்பாட்டமோ பந்துவீச்சோ அல்ல களத்தடுப்புதான் என்று மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது.

ட்டுட்டு

**சிந்தியா, உங்களை வீட்டுக்கு அழைத்து வடை, பாயாசத்துடன் விருந்து வைக்க விரும்புகிறேன். வருவீர்களா?**

*-கோபிபிரியா, வெலிமடை.*

பாயாசமா.....ஐயையோ....ஆளை விடுங்கள்!

ட்டுட்டு

**ஆண்டுதோறும் சட்டக் கல்லூரியில் சேரும் மாணவர்கள் தொகை அதிகரித்து வருகிறது. நாட்டில் இவ்வளவு தொகையாகச் சட்டத்தரணிகள் வந்தும், குற்றவாளிகள் பெரும்பான்மையும் தப்பித்து சமூகத்தில் உயர் மனிதர்களாக உலவி வருகிறார்கள்தானே....! சட்டம் படித்தவர்களால் நாட்டுக்கு என்ன பயன்?**

*-எப்.எம்.எம்.மிஹ்லார், கொழும்பு - 10.*

இப்படியே மற்ற மற்றத் தொழில் செய்பவர்களாலும் பயன் என்ன என்று கேட்டுக்கொண்டிருக்கலாம். நாடு இப்படியே இருக்கும் வரை, 'எவராலும் எந்தப் பயனும் இல்லை' என்ற பதில்தான் வந்துகொண்டிருக்கும்.

பிரபல ஆங்கில எழுத்தாளர் குஷ்வந்த்சிங் சட்டம் படித்து வழக்கறிஞராகவும் தொழில் புரிந்தவர். தன் சுயசரிதையில் அவர் எழுதியிருப்பது : ஒரு அட்வகேட்டை விட ஒரு விலைமாது சமூகத்திற்குச் சேவை செய்கிறாள். இந்த ஒப்புவமை நியாயமற்றதாகத் தோன்றலாம். இவளாவது ஒரு சமூகத் தேவையை நிறைவேற்றுகிறாள். இவள் தன்னிடம் வருபவர்களுக்கு அவர்கள் கொடுத்த பணத்திற்காக இன்பமளிக்கிறாள். ஒரு அட்வகேட் இதைக்கூடச் செய்வதில்லை.

**சுயநலத்தோடும் கள்ளத்தனத்தோடும் தமிழ் மக்களை முட்டாள்களாக்கித் தங்களைப் பிரபலப்படுத்திக்கொண்டவர்களின் இறப்பை இந்த சமூகம் ஆரவாரமாகக் கொண்டாடுகிறது. மக்கள் நலனை எண்ணி எத்தனையோ தியாகங்களைச் செய்த பலரது உயிர்கள் பலவந்தமாகப் பறிக்கப்பட்டதை இந்த சமூகம் கண்டுகொள்வதே இல்லையே....?**

*-எஸ்.சிவனேசன், யாழ்ப்பாணம்.*

நீதி நியாய உணர்வற்று, அச்சமும், மந்தைத்தனமும், சுயநல ஆசைகளுமாக எழுச்சி ஆரவாரம் கொண்டிருக்கும் இந்த சமூகத்தில் அவர்கள் கண்டுகொள்ளப்படாததே அவர்களுடைய சிறப்பு!

ட்டுட்டு

**பிரமிப்பூட்டும் 'த டே ஆ.்.ப்டர் ருமாறோ' படத்தைப் பற்றிச் சொல்லுங்களேன்?**

*-முஹமட் மஜிஸ், மீராவோடை - 04.*

வளிமண்டலத்தை வெப்பமேற்றும் வாயுக்களை மனிதகுலம் அதிக அளவில் வெளியிடுவதால் துருவப் பிரதேசங்களில் பனி உருகுகிறது. இதன் விளைவாக கடல் நீர் மட்டம் அதிகரிக்கிறது. இன்னொரு புறம் இந்தத் துருவப் பனி உருகுதலால் உலகக் கடல்களில் இயற்கையாக உள்ள நீர்ச் சுழல்கள் பாதிக்கப்படலாம். இச் சுழல்கள் பூகோள அளவில் இயங்கும் பெரிய வெப்பக் கடத்திகள். இவற்றால்தான் உலக வெப்பச் சமநிலை பேணப்படுகிறது. இவை பாதிக்கப்பட்டால் ஐரோப்பாவிலும் அமெரிக்காவின் கிழக்குப் பகுதியிலும் வெப்பநிலை பெருமளவுக்குக் கீழிறங்கும். இது 20,000 ஆண்டுகளுக்கு முன் நிலவிய பனிக்காலம் போன்ற நிலைமையை உருவாக்கலாம்....

இதைக் கதைக் கருவாக எடுத்துக்கொண்டு கிரா.்.பிக்ஸ் கலந்து மிரட்டியிருக்கிறார்கள். திரையில் காண்பிக்கப்படுவது தொழில்நுட்ப ஏமாற்று என்று நன்கு தெரிந்திருந்தாலும் திறந்த வாய் மூடாமல் சீற் நுனிக்கு வந்து பதற்றமடைவதைத் தவிர்க்க முடியவில்லை. 'இன்டிபென்டன்ஸ் டே', 'கோட்ஸில்லா' போன்ற படங்களைத் தந்த ரோலண்ட் எம் ரிச்சின் மற்றுமொரு அசத்தல் இது.

மனிதகுலம் நாளை சந்திக்கப் போகும் பிரச்சினைகளிலிருந்தும் கதை தேடுகிறார்கள் அவர்கள். இன்னமும் பழிவாங்கல், பறந்து பறந்து சண்டையிடுதலிலிருந்து 'தமிழ்ப் படங்களைப்' பிரிக்கவே முடியவில்லை.

ட்டுட்டு

**த்ரிஷா தினமும் என் கனவில் வந்து "அப்படிப் போடு....அப்படிப் போடு...." என்று குதிக்கிறாரே....என்ன செய்ய?**

*-எம்.விமல்நாதன், கண்டி.*

பக்கத்தில் ஏதும் பாரமான பொருட்களோ, படுத்துத் தூங்குபவர்களோ இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு தூக்கத்திற்குப் போங்கள்!

ட்டுட்டு

**கிழக்கில் 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட பல இளைஞர்கள் சுடப்பட்டு தலைகள் விழுந்துகொண்டிருக்கின்றன..... அத்துருகிரியவில் எட்டுப் பேர்..... மட்டக்களப்புச் சிறைக்குள்ளேயே கருணாவின் வலதுகரம்...பம்பலப்பிட்டியில் புளொட் மோகன்....குறுகிய காலத்தில் பல தடைகள் நீங்கி வருகின்றன அல்லவா?**

*-எஸ்.எழிலின்பன், கொழும்பு 05.*

இந்தக் கொலைகளையும் துணிவாய்க் கண்டித்துக்கொண்டிருக்கும் ஒன்றோ இரண்டோ 'துரோகிகள்'தான் இன்னும் மிச்சமிருக்கிறார்கள். அவர்களையும் போட்டு முடித்துவிட்டால் தமிழ் சமூகம் சுத்தமாயிடும். பிறகு, விடுதலைதான்!




(இன்னும் விளக்கத்திற்கு நாளிதழ்க் கட்டுரையாளர்களை நாடுக!)

ட்டுட்டு

**நீங்கள் மிக உயர்வாக நினைப்பது எதை?**

*-எம்.மருதகாசி, வத்தளை.*

எவரெஸ்ட் சிகரத்தைத்தான்!

ட்டுட்டு

**எப்போதாவது தாங்கள் செய்த குற்றத்தை பகிரங்கமாக ஒத்துக் கொண்டிருக்கிறீர்களா?**

*-மனோகோபாலன், ஹப்புத்தளை.*

ஒத்துக் கொள்வதால் பெரிய பாதிப்பில்லை என்று தெரிந்த இடங்களில்!

ட்டுட்டு

**சிந்தியா! படித்தவனுக்கும் படிக்காதவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன சொல்ல முடியுமா?**

*-எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை - 01.*

படிக்காதவனுக்கு தனக்கு ஒன்றும் தெரியாது என்பது மட்டுமாவது தெரியும். படித்தவனுக்கு அதுவும் தெரியாது.

ட்டுட்டு

**எது பெருமை?**

*-பூ.ரவி.மட்டக்களப்பு.*

நம்மவர்கள் பெருமைப்பட்டுக் கூத்தடிக்கும் விஷயங்களைப் பார்த்தால், நம்மைப் பற்றிப் பெருமைப்பட முடியாதுள்ளதுதான் உண்மை. இதைச் சிரிக்கச் சிரிக்கச் சொல்லி ஆரோக்கிய ஊசி ஏற்றுபவர்களைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடலாம் போல் தோன்றுகிறது. பேசித் திருந்தாதவர்களும் நகையாடினால் திருந்துவார்கள் என்ற நம்பிக்கைதான்.... டாக்டர் எம்.கே.முருகானந்தனின் "ஒரு டாக்டரின் டயரியில் இருந்து...." நூலில் ஒரு பகுதி... சிரித்தபடி யோசிப்பதற்காக :

அதிகாலை நித்திரை விட்டெழுந்து கடற்கரை ஓரமாக அல்லது நீர்நிலையை அண்மித்த இடங்களில் தெற்குத் திசையை நோக்கி மூக்கு நுனியைப் பார்த்தபடி மலசலம் கழிக்க வேண்டும் என்று எனக்குச் சைவ வினாவிடையில் போதிக்கப்பட்டுள்ளது. ஆனால், நீர்நிலைகள் குன்றிவிட்ட காரணத்தால், நாம் வடலிகளுக்கும், ஈச்சம் பற்றைகளுக்கும், வயல்களுக்கும் மனித எருக்களைப் பசளையிட்டு காடு வளர்த்துச் சூழலைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறோம்?

அதன்பின் குளக்கரையில் அடிக் கழுவி, அதே நீரால் வாய் கொப்பளித்து, முகம் கழுவி, தலைக்கு நீராடி, ஆடை துவைத்துச் சுத்தமாக ஆலயம் சென்று தரிசனம் செய்யச் சொன்ன எமது கலாசாரப் பாரம்பரியம் போற்றுதற்குரியது.

இராமன் லிங்கத்தை வைத்துப் பூசித்த புண்ணிய தலத்தைத் தரிசிக்கும் வாய்ப்பு சில வருடங்களுக்கு முன் கிடைத்தது. அதிகாலையிலேயே பொழுது புலருமுன் அரையிருட்டில் எம்மைப் புண்ணிய தீர்த்தத்திற்கு அழைத்துச் சென்றார் எமது கைட்.

கடற்கரையில் நாற்றம் தாங்க முடியவில்லை. சேற்று நாற்றமாக்கும் என மூக்கைப் பிடித்துக்கொண்டு நீரினுள் மூழ்கிவிட்டுத் தலையை வெளியே எடுத்தால் இலேசான வெளிச்சத்தில் லட்டு மாதிரி ஏதோ மிதந்து வருகிறது. கடவுளின் அருட்பிரசாதமாக்கும் எனப் பக்தியோடு கையை நீட்டினால் அருகிலிருந்தவர் நமுட்டுச் சிரிப்போடு லுங்கியை உணர்த்திக் கொண்டு 'பாரம் கழிந்துவிட்ட' திருப்தியோடு காலை அகட்டி வைத்து நடந்து செல்கிறார்.

நாவலர் பெருமான் அருளிய சைவ வினாவிடையின் தாக்கம் தமிழ்நாட்டிலும் பரவியிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தபோதும், அவர் சொற்படி அவர்களும் காலைக்கடன் கழிப்பது கண்டு பெருமையடைந்தேன்.

ட்டுட்டு



# கிரிக்கெட்டின் வரலாறு 7


டபிள்யூ.ஜி.கிரேஸ் உலகின் முதலாவது முதல் தரப் போட்டியில் மூன்று சதங்களைப் பெற்றுக்கொண்டபோதும் அவரால் உலகின் முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்குபற்ற இயலாது போய்விட்டது.

முதன்முதலில் இவர் 1880இல்தான் தனது முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்கு பற்றியுள்ளார். அவுஸ்திரேலியாவுக்கு எதிராக முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடிய கிரேஸ் பின்னர் 1889\90ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்து அணிக்குத் தலைமை தாங்கியுள்ளார். இக் காலகட்டத்தில் அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இங்கிலாந்து அணிக்கு வெற்றிகளை ஈட்டிக் கொடுத்துள்ளார். இதில் ஒரு போட்டியின்போது அவர் மிகவும் பெறுமதி மிக்க 190 ஓட்டங்களை எடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

டபிள்யூ.ஜி.கிரேஸ் தொடர்பில் பல சுவாரஷ்யமான கதைகள் கூறப்பட்டு வருகின்றன. இக் கதைகள் இன்று கூடப் பிரசித்தி பெற்றவைகளாகக் கருதப்படுகின்றன.

மாநிலப் போட்டியொன்றில் கிரேஸ் பங்குபற்றியபோது இரசிகர்கள் அலைமோதிக் கொண்டிருந்தனர். குறிப்பாக கிரேஸ் விளையாடும்போது அவரது இரசிகர்கள் இவ்வாறு அலைமோதுவது இயல்பாகும்.

பந்துக்கு முகங்கொடுக்க கிரேஸ் மைதானத்துக்கு வந்தபோது அரங்கு நிரம்பிக் காணப்பட்டது. விளையாட்டு இரசிகர்கள் கரவோசை எழுப்பி மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர். நடுவரிடம் தனது நிலையைப்



W.G.கிரேஸ்

பெற்றுக்கொண்ட கிரேஸ் முதலாவது பந்துக்கு முகங்கொடுக்கத் தயாரானார். வேகமாக ஓடிவந்து வீசிய பந்து கிரேஸின் துடுப்பைத் தாண்டி நடு விக்கெட்டில் பட்டு விக்கெட் பறந்துவிட்டது.

பந்தை வீசியவரும் ஏனைய களத் தடுப்பாளர்களும் மகிழ்ச்சி ஆரவாரம் காட்டிய போது அரங்கில் இருந்த இரசிகர்களிடையே பலத்த மௌனம் நிலவியது.

கீழே விழுந்து கிடந்த விக்கெட்டை எடுத்து மீண்டும் ஊன்றி, அதன் மீது பேல்ஸ் ஸையும் வைத்த கிரேஸ், மீண்டும் பந்துக்கு முகங்கொடுக்கத் தயாரானார். என்ன நடக்கிறது என்பதை அறியாத எதிரணி ஆட்டக்காரர்கள் நடுவரை நோக்கினர்.

நீங்கள் அவுட்டான வீரர் எனக் கூறிய நடுவர் ஒற்றை விரலை நீட்டினார்.

இதன்போது நடுவரிடம் சென்ற கிரேஸ் "ஆயிரக்கணக்கான இரசிகர்கள் இங்கே அமர்ந்திருப்பது நீங்கள் நீட்டுகின்ற விரலைப் பார்ப்பதற்காக அல்ல. நான் பந்துக்கு முகங்கொடுப்பதைப் பார்ப்பதற்காகவே அவர்கள் கூடி இருக்கின்றார்கள்" எனக் கூறிய கிரேஸ், பந்து வீசுபவரை நோக்கி மீண்டும் தனக்குப் பந்து வீசுமாறு கோரியுள்ளார்.

அன்று கிரேஸுக்கு இருந்துவந்த வரவேற்பின் முன்பாக நடுவராலும் எதிரணி வீரர்களாலும் கிரேஸை மீறிச் செயற்பட இயலாது போயுள்ளது. இதனால் கிரேஸ் மீண்டும் பந்துகளுக்கு முகங்கொடுத்துச் சதமொன்றை அடித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

கிரேஸ் 43 வருடங்களாக முதல் தரப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். இக் கால கட்டத்தில் 869 போட்டிகளில் கலந்துகொண்ட அவர் 54211 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் 124 சதங்கள் அடங்குகின்றன. அதே நேரம் சிறந்த பந்துவீச்சாளராகவும் திகழ்ந்த கிரேஸ் 50980 ஓட்டங்களைக் கொடுத்து 2809 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

875 கெச்களை இவர் பிடித்துள்ளார். 1915ஆம் வருடம் ஒக்டோபர் மாதம் 23ஆம் திகதி கெண்ட் மாநிலத்தில் நொடின்ஹெம்மில் கிரேஸ் காலமானார்.

**-மைந்தன்**



# இலங்கை அணிக்கு புதிய நம்பிக்கை

**ஆசியக் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியது, இலங்கை அணிக்குப் புத்துணர்ச்சியூட்டி யுள்ளது. சுமார் 18 மாதங்களாக தளர்வுப் போக்கோடு காணப்பட்ட இலங்கை அணி வீரர்களை மீண்டும் உற்சாகப்படுத்தியது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார். இலங்கை அணியின் தலைவர் மாவன் அத்தபத்து.**

**இறுதிப் போட்டியில் தோல்விகண்ட இந்திய அணியின் தலைவர் சௌவுரவ் கங்குலி கூறும்போது, இலங்கை அணியின் பந்து வீச்சு பிரமாதம் என்று சொல்ல முடியாது. எனினும், எமது வீரர்கள் பந்தைத் தடுக்கத்தான் செய்தார்களே தவிர ஓட்டங்களைக் குவிக்க வேண்டுமென எதிர்த்தாடவில்லை எனத் தெரிவித்த அவர், அடுத்து ஹொலண்டில் நடைபெற இருக்கும் முக்கோணப் போட்டியில் வெற்றி பெறுவோம் எனத் தெரிவித்தார். இது வழமையாக இந்திய அணி கூறும் காரணம்தான் என்பதால் அடுத்த போட்டி எப்படி அமையப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.**

**இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் வாய்ப்பைத் தவற விட்ட மற்றுமொரு அணியான பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல்ஹக், போனஸ் புள்ளிகள் வழங்குவது தொடர்பாகக் கவலையை வெளியிட்டார்.**

**அவர் மேலும் கூறும்போது, ஆசியக் கிண்ணத்தைப் பொறுத்தவரை பாகிஸ்தான் சிறப்பாக விளையாடியது. போனஸ் புள்ளியின் அடிப்படைக் கொள்கையே சரியில்லை. இந்தப் போட்டியில் இந்தியா இரு ஆட்டங்களில் தோல்வி கண்டபோதும் இறுதி வாய்ப்பை**



சௌவுரவ் கங்குலி



**எட்டியிருக்கிறது. பாகிஸ்தான் ஒரு போட்டியில்தான் தோல்வி கண்டது. ஆனாலும், ஒரு புள்ளி வித்தியாசத்தில் இறுதியாட்டத்திற்குத் தெரிவாகவில்லை. போனஸ் புள்ளி முறையில் உடனடியாகச் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். இதுகுறித்து கிரிக்கெட் தெரிவாளர்கள் இன்னும் நிதானமாகச் சிந்திக்க வேண்டும் என இரசிகர்களும் எதிர்பார்ப்பது புரிகிறது.**

**அடுத்த 9ஆவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 2006இல் பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது குறிப்பிடத் தக்கது. முதன்முறையாக 1984ஆம் ஆண்டு ஆசியக் கிண்ணப் போட்டி ஷார்ஜாவில் நடத்தப்பட்டது.**

**ஆசியக் கிண்ணத்தை இலங்கை அணி இம்முறையோடு மூன்றாவது தடவையாகச் சுவிகரித்துள்ளது. 1985-86ஆம் ஆண்டுகளிலும், 1997-98ஆம் ஆண்டுகளிலும் தற்போதுமாக மூன்று முறை வெற்றிபெற்ற இலங்கை அணி, இலங்கையில் நடந்த இறுதிப் போட்டிகளிலேயே வெற்றி கண்டது குறிப்பிடத் தக்கது.**

## எந்தக் கிழமையில் பிறந்தீர்கள்? என்ன அதிர்ஷ்டம் பெறுவீர்கள்?

மின்சார உலகின் வேகத்திற்கு ஏற்ப மனிதனுடைய பிறப்பு,இறப்பு பற்றிய விரிவான விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய அவசியமற்ற இவ் வுலகில் மானிடத் தேவைக்கு ஏற்ப விரைவாக அவர்களது பிறப்பு எண்ணையும் (திகதி) பிறந்த கிழமையினையும் (திங்கள் - ஞாயிறு) கொண்டு தீர்க்கமாக என் அருள் ஞான ஜோதிட சித்தத்தில் கணிக்கப்பட்ட சுருக்கமான உங்கள் பலா பலன்களாகும்.

சொல்பவர் :
ஜோதிட அறிஞர், பேராசிரியர்,
டாக்டர் **பீ.கே. சாமி J.D.G.A.N.,**
(J.P.சமாதான நீதிபதி, கொழும்பு - இலங்கை)

## ஆதிக்கம் 4: பிறந்த கிழமை செவ்வாய்

நாற்குணம் ஆணுக்கும் பெண்ணுக்கும் கண்டிப்பாக இருக்க வேண்டியவை. நாற்படை ஒரு நாட்டுக்குக் கண்டிப்பாக இருக்க வேண்டும். ஒரு நாட்டுக்கு நான்கு படைகள் காவல். மனிதனுக்கு நான்கு குணங்கள் சிறப்பு. இப்படியான ஆதிக்க எண் 4இல் அவதரித்திருக்கின்றீர்கள். அதனோடு சேர்ந்து சிறப்பும் சீரும் மிக்க செவ்வாய்க்கிழமையினையும் விதியாகப் பெற்றுள்ள நீங்கள் பாக்கியம் செய்தவர்கள்.

கல்வி ஒரு மனிதனின் முதலாவது கண்.

அந்தக் கல்வியைத் தொடர்ந்து கற்கக் கூடிய திறமையும் வசதியும் உங்களுக்கு இருந்தாலும் தொடர்ந்து படிக்கக் கூடிய வாய்ப்பினை நீங்கள் இழந்துவிடுவீர்கள். அதாவது ஏதோ ஒரு காரணத்தினால் கல்வி தடைப்பட்டுவிடும். இருந்தாலும் நீங்கள் வருந்த வேண்டியதில்லை. அன்பு, கருணை, இரக்கம், விருந்தோம்பல் போன்ற சிறப்பான பண்புகள் உங்களிடம் காணப்படுகின்றன. பரந்து விரிந்த மனதைக் கொண்டுள்ள நீங்கள் பிறருக்கு உதவி புரிவதில் முன்னணியில் திகழ்வீர்கள்.

பொய், வஞ்சகம், துரோகம், கள்ளம், கபடம், பொறாமை போன்ற தீய குணங்களை விட்டும் நீங்கியவர் நீங்கள். பிறர் மீது அன்பு காட்டுவீர்களே தவிர பொறாமைப்படவோ, வஞ்சகப்படவோ மாட்டீர்கள். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கொள்கையுடையவூர் நீங்கள். பிறரின் உயர்ச்சியில் நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். அவர்களின் மகிழ்ச்சியில் மனநிறைவு பெறுவீர்கள். அந்தளவுக்கு மிக உயர்ந்த, உன்னதமான, மேன்மையான, புனிதம் நிரம்பிய பண்பு உங்களுக்கு இருப்பதையிட்டு நீங்கள் சந்தோசம் அடையலாம்.

வேலை அல்லது தொழில் விடயத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அதே நேரம் கண்டிப்பும் உங்களிடம் இருக்கும். அது தொழில் முன்னேற்றத்தையும், தொழில் பக்தியினையும் அடிப்படையாகக் கொண்டதே தவிர தனிப்பட்ட நோக்கம் எதுவும் இல்லை.


வீண் காரியத்தில் ஒருபோதும் ஈடுபடமாட்டீர்கள். யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் என்பது போல ஒரு காரியம் செய்வதாக இருந்தால் தனக்கு அதனால் நன்மை அல்லது இலாபம் இருக்கின்றதா என்பதை ஆராய்ந்துதான் அந்தக் காரியத்தினைச் செய்வீர்கள். அதே போல அந்தக் குறிப்பிட்ட காரியத்தினால் பிறருக்கு நன்மை அல்லது இலாபம் இருக்கின்றதா என்று ஆராய்ந்து நன்மை, இலாபம் இருந்தால்தான் செய்வீர்கள். ஒன்றுக்குமே பிரயோசனமற்ற வீணான காரியங்களை ஒருபோதும் செய்ய மாட்டீர்கள். கடலில் மழை பெய்வதை விட காட்டில் மழை பெய்வது சிறப்பானது என்ற தன்மை கொண்டவர் நீங்கள். எவ்விதமான வேலையாக இருந்தாலும் அதனைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். எந்தப் பிழைகளோ அல்லது குறைபாடுகளோ அற்றதாகச் செய்ய வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்து அந்தக் காரியத்தை மிகச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள்.

பிறருடைய விடயங்களில் மூக்கை நுழைக்கும் கெட்ட குணம் உங்களுக்குக் கிடையாது. எளிமையான, அழகான வாழ்க்கையினை விரும்பும் உன்னதமானவர் நீங்கள். இதனால் ஆடம்பரமான, கேளிக்கைகள் நிறைந்த, வீண் செலவுகள் கொண்ட வாழ்க்கையினை வெறுப்பீர்கள். வைத்தியக்கலை, சோதிடக்கலை போன்ற துறைகளைக் கற்க வேண்டும். இவை பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் மிக்கவர் நீங்கள். தெரிந்துகொள்வதுதான் உங்கள் நோக்கமே தவிர இவற்றைத் தொழிலாகச் செய்யும் எண்ணம் உங்களிடம் இருக்காது.

நம்ப நட நம்பி நடவாதே என்ற கொள்கை உங்களிடம் கிடையாது.

*(அடுத்து ஆதிக்கம் 4 புதன்கிழமை பிறந்தவர்களைப் பற்றி பார்ப்போம்)*

"மாஜிக் தந்திரங்கள்" குறித்த பயிற்சியும் அதனோடு ஒட்டிய சுவைமிகு தகவல்களும் தொடர்ந்து வெளிவரும். மாஜிக் பிரியமுடைய நீங்களும் மாஜிக் நிபுணராகத் திகழ எமது வாழ்த்துக்கள்.



# மாஜிக் தந்திரங்கள்

இதை வேறு வகையிலும் கூட இன்னும் சிறப்பாகச் செய்யலாம். எப்படி என்றால் - காட்சியாளர் உள்ளேயிருந்து வெளியே வரும்பொழுது முதுகுப் பக்கம் ஸ்டாண்டை மாட்டிக்கொள்ளாமல் சிறுமியை மட்டும் கையில் பிடித்துக்கொண்டு வந்து சபையோருக்கு முன் காட்ட வேண்டும். சிறுமியும் சிரித்துக்கொண்டே சபையோரைப் பார்த்து "வணக்கம்" என்று சொல்லியபின், சிறுமியை பெட்டியருகே கூட்டி வந்து, பெட்டியின் நான்கு கதவுகளையும் திறக்கச் செய்து, சிறுமியைத் தூக்கி பெட்டியின் நடுவில் நிற்க வைத்து, அதன் தலையின் மேல் கறுப்புக் கைக்குட்டையைப் போர்த்திவிட்டு, உள்ளே செல்வது போல உள்ளே சென்று ஸ்டாண்டை முதுகின் பக்கம் மாட்டிக்கொண்டு, மேடைக்கு வந்து, சிறுமியின் பக்கம் வந்து தலையில் மூடப்பட்ட கைக்குட்டையை இடது கையினால் எடுத்துக் கீழே வீசி எறிந்துவிட்டு, முதலில் தன் பக்கமுள்ள கதவை மூடுவது போல மூட வேண்டும்.


இந்தச் சமயம் உதவியாளரும் வலது பக்கமுள்ள கதவை மெதுவாக மூட வேண்டும். பிறகு முன் பக்கக் கதவை மூட வேண்டும். இந்தச் சமயம் காட்சியாளர் பெட்டியை நெருங்கி நின்று கதவின் கொக்கிகளைச் சேர்ப்பது போல நடிக்க வேண்டும். இந்தச் சமயம் பெட்டியினுள் உள்ள சிறுமி கட்சியாளரின் முதுகில் தொங்கும் ஸ்டாண்டிற்குத் தாவி ஏறிவிட வேண்டும். உடனே காட்சியாளர் இடது கையினால் பின்புறக் கதவை மூடிக் கொக்கிகளை மாட்ட வேண்டும். உதவியாளர் மறுபக்கமுள்ள கொக்கிகளை மாட்ட வேண்டும்.

உதவியாளர் பெட்டியை விட்டுச் சிறிது தூரத்தில் நின்றுகொண்டு, மந்திரக் கோலை ஆட்டி, பெட்டியில் உள்ள சிறுமி வெளியே செல்லும்படி மந்திரம் போடுவது போல நடித்து, வேலையாளருக்குச் சைகை செய்ய வேண்டும். இந்தச் சமயம் உதவியாளர் ஒரு கம்பியை எடுத்து அதன் கூர்ப் பகுதியைச் சபையோருக்குக் காண்பித்துவிட்டு, பெட்டியின் நடுத் துளையில் கூர்ப் பகுதியை வைத்து மெதுமெதுவாகச் சிறுமியின் உடலில் கம்பியைச் சொருகுவது போல பாவனை செய்து அழுத்திக் குத்த வேண்டும். இந்த விதமாகப் பல வித பாவனையுடன் முன் பக்கக் கம்பிகளைச் சொருகிவிட்டு, கைமணியை எடுத்து அதை அடித்துக் கொண்டே மூன்று முறை சுற்றி வர வேண்டும்.

மூன்றாவது சுற்று முடிந்தவுடன் கம்பிகளை ஒவ்வொன்றாக வெளியே இழுத்துக் கீழே போட வேண்டும். இந்த விதமாக எல்லாக் கம்பிகளையும் எடுத்தபின் காட்சியாளர் பெட்டிக்குப் பக்கத்தில் வந்து நின்று முதலில் பின் கதவைத் திறந்துவிட்டு பெட்டியை நெருங்கி நிற்க வேண்டும். இந்தச் சமயம் சிறுமி ஸ்டாண்டிலிருந்து பெட்டிக்குத் தாவி, பெட்டிக்குள் நிற்க வேண்டும். சிறுமி பெட்டிக்குள் சென்றவுடன் மெதுவாகப் பக்கக் கதவைத் திறக்க வேண்டும். பிறகு முன் பக்கக் கதவை மெதுமெதுவாகத் திறக்க வேண்டும். இந்தச் சமயம் சிறுமி சிரித்துக்கொண்டே "வணக்கம்" என்று சபையோர் கேட்கும்படி சொல்ல வேண்டும். உடனே முன் திரையை விட்டுவிட வேண்டும்.

இதைக் கண்ட சபையோர் கம்பியைப் பெட்டியின் உள்ளே சொருகும்பொழுது சிறுமி எங்கே மறைந்தாள்? எப்படி உள்ளே இருந்தாள்? என்று நினைத்து ஆச்சரியப் படுவார்கள்.

***குறிப்பு*** :- இந்தக் காட்சியை நடத்த சிறுமியை நன்கு பழக்க வேண்டும். சிறுமி ஸ்டாண்டில் நிற்கும்பொழுது அதன் கைகள் வெளியே தெரியக் கூடாது. காட்சியாளர் ஸ்டாண்டை மாட்டிக்கொண்டு மேடைக்கு வந்தபின் தன் முதுகைச் சபையோர் பக்கம் திருப்பவே கூடாது. மிகக் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். சிறுமி ஸ்டாண்டிலிருந்து பெட்டிக்குள் போகும் பொழுதும், பெட்டியிலிருந்து இறங்கும் பொழுதும் மிகக் கவனமாக நடக்க வேண்டும்.



## ஒரு கிளாஸ் பாலை மாயமாய் மறையச் செய்து மறுபடி வரவழைத்தல்

இந்தக் காட்சியை நடத்த தனிப்பட்ட முறையில் ஒரு டப்பா தயாரிக்க வேண்டும். இதன் வாய்ப் பக்கம் நீண்ட சதுரமாக இருக்க வேண்டும். அதாவது நீள்வசமாக 4 செ.மீற்றரும், குறுக்கு வசமாக 3 செ.மீற்றரும் இருக்க வேண்டும். உயரம் 18 செ.மீற்றரும் இருக்க வேண்டும். இதை முதலில் ஒரு குழாய் போலத் தயாரிக்க வேண்டும்.

பிறகு, அதன் ஒரு பக்க விளிம்பிலிருந்து சுமார் இரண்டு செ.மீ. இடம் விட்டு, சுமார் 6 செ.மீற்றர் நீளத்தில் ஒரு தகடு வெட்டி அதை குழியினுள் கள்ள அறை போல தடுத்து அதன் ஓரத்தை குழாய் தகரத்துடன் சேர்த்து நீர் கசியாத அளவிற்கு ஒட்டி விட வேண்டும். அதன்பின் அந்த வாய்க்கு ஏற்ற அளவில் தகடு வெட்டி அதை அடிப்பாகமாக வைத்துப் ஒட்டிவிட வேண்டும். எந்த ஒட்ட வைப்பிலும் நீர்க் கசிவு ஏற்படக் கூடாது.

இந்த விதமான டப்பா ஒன்று தயாரித்து அதற்கு மனதில் தோன்றிய ஒரு வர்ணம் அடித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

காட்சி ஆரம்பமாகுமுன் மேசையின் மேல், இந்த டப்பாவையும், ஒரு கிளாஸில் பாலையும் வைத்துக்கொண்டு காட்சியாளர் மேடைக்கு வந்து, டப்பாவையும், ஒரு கிளாஸில் பாலையும் எடுத்து வந்து, அதைச் சபையோருக்கு நேராக டப்பாவில் விட்டு மறுபடி பாலை டப்பாவிலிருந்து டம்ளருக்கு விட்டு, மறுபடியும் அந்தப் பாலை டப்பாவில் விட்டு, ஸ்ரூலின் மேல் வைத்து, டப்பாவின் வாயில் ஒரு கறுப்புக் கைக்குட்டையைப் போட்டு மூடி, மந்திரக் கோலினால் மந்திரம் போடுவது போல பாவனை செய்து கைக்குட்டையை எடுத்துவிட்டு டப்பாவை எடுத்து அதிலுள்ள பால் கள்ள அறைக்குப் போகும்படி சாய்த்துப் பிடித்து பால் வெளியே வராத அளவிற்கு டப்பாவைப் பிடித்து கிளாஸில் பால் விழும்படி சாய்த்தால் பால் கள்ள அறையில் நிற்கும். வெளியே வராது. கிளாஸில் பால் விழாதது கண்டு சபையோர் பால் எங்கே? என்று யோசித்து ஆச்சரியமடைவார்கள்.

மறுபடி டப்பாவை வைத்து கறுப்புக் கைக்குட்டையால் மூடி, மற்திரக்கோலைக் கொண்டு மந்திரம் போடுவது போல நடித்து, கைக்குட்டையை எடுத்துவிட்டு, டப்பாவை எடுத்து உள்ளே பார்த்துப் புன்முறுவல் செய்து, டப்பாவை எடுத்து அதை மறுபக்க மாகத் திருப்பி கள்ள அறையிலிருக்கும் பால் வெளியே வரும்படி செய்து, கிளாஸில் பாலை விழும்படி செய்தால், சபையோர் இதைக் கண்டு பால் எப்படி மறைந்தது, இப்போது எப்படி டப்பாவில் வந்தது என்று ஆச்சரியப்படுவார்கள்.

***குறிப்பு*** :- இந்த வகையான டப்பாவைத் தயாரித்த பின் பாலைக் கள்ள அறைக்குப் போகச் செய்ய, கள்ள அறை எந்தப் பக்கம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள, டப்பாவினுள் எட்டிப் பார்க்கக் கூடாது. கள்ள அறை இருக்கும் பக்கத்தைத் தெரிந்து கொள்ள டப்பாவின் மேல் கள்ள அறை இருக்கும் பக்கத்தில் சுமார் ஒரு செ.மீ. குறுக்களவில் ஒரு வட்ட அடையாளம் நன்றாகத் தெரியும்படி தைத்துவிட வேண்டும்.

தொடர்ந்து வரும்...........

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை.
*-காதில பூ கந்தசாமி-*

**வ**ணக்கமுங்கோ வணக்கம்! இலங்கையில ஏற்பட்டிருக்கிற இடியப்பச் சிக்கலைத் தீர்க்க என்ன பாடுபட வேண்டிக் கிடக்குது பாத்தீங்களா? இப்பிடி வந்தா அப்பிடிப் போகுது, அப்பிடி வந்தா இப்பிடிப் போகுது எண்ட கணக்கா, எந்த வழமா வந்தாலும், சிக்கல் பிடிபடுகுதுமில்லை, விடுபடுகுதுமில்லை.

யுத்த நிறுத்தமெண்டிறாங்கள். குண்டு வெடிக்குது. சூடு பறக்குது, நாளாந்தம் நிச்சயிக்கப்பட்ட சில மரணங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்குது.

பேச்சுவார்த்தை எண்டிறாங்கள், நிபந்தனைகள் விதிக்கிறாங்கள். இதைத்தான் பேசலாம் எண்டு ஒரு பக்கம். அதைப் பேசக் கூடாதெண்டு இன்னொரு பக்கம். பேச்சுவார்த்தை நடக்கிறதே கேள்வியாப் போயிருக்கு. பேசினாலும் எதைப் பேசிறது, பேசிற பேச்சில இணக்கம் வர வழியிருக்கா, இல்லை இது வெறும் சுணக்கத்துக்கு வழி தேடுற மற்றொரு யுக்தியா எண்டு சந்தேகங்கள் கிளம்புது.

இந்த நிலையில எங்கட நடுவர்களாக இருந்து நாட்டுக்கு நாடு போய் வாற நோர்வேக்காறரிட்ட நிலைமையை அறிஞ்சுகொள்ள ஒரு பேட்டி கண்டிருக்கிறன். கேட்டியளெண்டால் கொஞ்சம் தெளிவு பிறக்கும்.

***கா.பூ*** : ஹலோ மிஸ்டர் நோர்வே! ஹெள டு யு டு?

***நோ*** : ஃபைன்!

***கா.பூ*** : யேஸ் யேஸ். யூ ஆர் ஃபைன். பட் வீ ஆர் இன் பெய்ன்! அது சரி, இப்ப என்ன சிற்றிவேஷன்?

***நோ*** : சிற்றிவேஷன் நோர்மல். பட் பேச்சுவார்த்தைக்கு நோ வே.

***கா.பூ*** : நோர்வே தலையிட்டும் நோ வேயா?

***நோ*** : அது மிஸ்டர் கா.பூ! நாங்கள் வெறுமனே ஏற்பாட்டாளர்கள். ரெண்டு பக்கமும் உடன்பட்டாச் செய்து குடுப்பம். அவங்கதான் உடன்பட வேணும். எங்கட கையில இது இல்லை.

***கா.பூ*** : அவங்க உடன்படுறதாயிருந்தால், அவங்களே பேசிக்கொள்ளுவாங்களே! நீங்க எதுக்கு? உடன்படுறவங்களச் சந்திக்க வைக்கிறதுக்கு ஆள் தேவையா? உடன்படாதவங்களைச் சந்திச்சுப் பேச வைக்கத்தானே இடைத் தரகர் தேவை?

***நோ*** : ஐ ஆம் சொறி! வீ ஆர் ஹெல்ப்லஸ்!

***கா.பூ*** : அப்ப இதில உங்கட இறுதி இலக்கு என்ன?

***நோ*** : நோபல் பிறைஸ்! - நோ....... சொறி........ ஐ மீன்...... நத்திங்...... நத்திங். பட், சமாதானம்! சமாதானம்தான் இறுதி இலக்கு.

***கா.பூ*** : அப்ப இப்ப வெடிக்கிற குண்டுகளும் சூடுகளுந்தான் உங்கட சமாதானத்துக்குப் பாதையா?

***நோ*** : அது இனந்தெரியாதவை செய்யிற வேலை. அதுதான் நெருப்போட விளையாட வேண்டாம் எண்டு சொல்லியிருக்கிறமே.

***கா.பூ*** : நெருப்ப மூள விட்டிட்டு, அது எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் பரவ விட்டிட்டு, இப்ப நெருப்போட விளையாட வேண்டாமெண்டால் என்ன அர்த்தம்?

***நோ*** : இப்பிடி எதுவும் நடக்காமல்தான் யுத்த நிறுத்த உடன்படிக்கை எழுதி வைச்சிருக்கிறமே?

***கா.பூ*** : அந்த உடன்படிக்கையில போட்டிருக்கிற யுத்த நிறுத்த மீறல்கள் என்னென்ன எண்டு தெரியுமா!

***நோ*** : ஏதோ...... பொதுமக்கள் பாதிக்கப்படுற விஷயங்கள், புலிகளையும் அரசாங்கத்தையும் பாதிக்கிற விஷயங்கள் எண்டு கொஞ்சம் எழுதியிருந்ததா ஞாபகம்.

***கா.பூ*** : அப்ப, பொதுமக்களைப் பாதிக்கிற சம்பவங்கள் நடக்கேக்க நீங்கள் எங்க போயிருந்தனீங்கள்.

***நோ*** : யூ ஸீ மிஸ்டர் கா.பூ. இதுகளில தலையிட்டா யுத்த நிறுத்தம் குலைஞ்சு போயிடுமெண்டதால நாங்கள் எதையும் செய்ய ஏலாது பாரும்.

***கா.பூ*** : அப்ப சூடுகள் நடக்கேக்க.

***நோ*** : அதிலயும் நாங்கள் விசாரிக்கப் போனா விஷயம் பிழைக்கும்.

***கா.பூ*** : இப்ப குண்டுகள் வெடிக்கவும் துடங்கிட்டுது..... இதுவும் யுத்த நிறுத்த மீறலோ எண்டு உங்களுக்கு இன்னுந் தெரியேல்லயெண்டெல்லோ அறிக்கை விடுகினம் உங்கட கண்காணிப்புக் குழுக்காறர்?

***நோ*** : அதை யுத்த நிறுத்த மீறலெண்டா, யுத்தம் வந்திடுமே?

***கா.பூ*** : அப்ப எதுதான் யுத்த நிறுத்த மீறல்?

***நோ*** : அதுதான் எங்களுக்கும் தெரியேல்லை. எங்களைப் பொறுத்தமட்டில இரண்டு பக்கமும் இணங்கி, இது யுத்த நிறுத்த மீறல்தான் எண்டு ஒத்துக்கொள்ளாதவரை எதுவுமே யுத்த நிறுத்த மீறலில்லை.

***கா.பூ*** : வெரி வெரி குட் பொலிஸி! அப்ப இப்பிடியே போனா எப்ப சமாதானம் வரப்போகுது?

***நோ*** : அதாவது பாரும் கா.பூ! முந்தி எந்தச் சம்பவம் நடந்தாலும் அதைக் கண்டிக்கிற காலம் இருந்தது. அது யுத்த காலம். இப்ப எந்தச் சம்பவம் நடந்தாலும் அதை மன்னிக்கிற காலம். இதுதான் சமாதான காலம். இப்பிடியே எல்லாத்தையும் மன்னிச்சு மன்னிச்சு, கடைசியில யுதத்தத்தையும் கூட யுத்த நிறுத்த மீறலில்லை எண்டு ஏற்றுக்கொள்ளுற நிலையொண்டு வரும். அதுதான் சமாதானம். கொஞ்சநாள் பொறுத்திரும் கெதியில வந்திடும்.

***கா.பூ*** : நல்லது மிஸ்டர் நோர்வே! உங்கட சமாதான முயற்சிக்கு நோபல் பிறைஸ் கிடைக்க வாழ்த்தரிய வாழ்த்துக்கள் கூறி விடை பெறுகிறேன் நான்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(08.08.2004 தொடங்கி 14.08.2004 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

கார்க்கடகம் - சூரியன், சிங்கம் - வியாழன், புதன், செவ்வாய், துலாம் - கேது
மேடம் - இராகு, மிதுனம் - சனி, வெள்ளி
சந்திரன் மேடம், இடபம், மிதுனம், கார்க்கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் நிலை உயர்ச்சி, பண வரவு, மனக் குறை நீங்கும், குடும்ப நன்மை, பிரயாண மிகுதி, உத்தியோக நன்மை, பலவித பேறு, மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் மேன்மை, உயர்ந்த எண்ணம், வெளியிடப் பயணம், அன்னியர் நட்பு, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் சிறப்பு, வீண் விரயம், மனக் கலக்கம், பெரியோர் உதவி, குடும்பக் கவலை, பிள்ளைகளால் நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் கலக்கம், செலவு மிகுதி, அன்னியர் நட்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வியில் மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் மேன்மை, உயர்ந்த நிலை, காரியச் சிறப்பு, குடும்பச் சிறப்பு, பிள்ளைகளால் மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் சொற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் பலிதம், உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01**

**இடபம்** : (கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னரை) தொழில் சிக்கல், பண விரயம், பெரியோர் உதவி, கௌரவம், உத்தியோக முயற்சி, மனக் குறை நீங்கும், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் சிறப்பு, பண வரவு, அன்னியர் உதவி, வீண் பிரயாணம், தேகசுகம் பாதிப்பு, குடும்ப மேன்மை, சுபகாரிய நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் கஷ்டம், வீண் துயர், மனத் துயர் நீங்கும், இனசன நன்மை, குடும்ப சுகம், உத்தியோக மேன்மை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை ) தொழில் பலிதம், பண வரவு, காரியானுகூலம், குடும்பக் கஷ்டம், மனக் குறை நீங்கும், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 03**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் வெறுப்பு, மனக் குழப்பம், அன்னியரால் தொல்லை, பணச் செலவு, உத்தியோக அலைச்சல், வீண் குறை கேட்டல், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் நன்மை, காரியானுகூலம், இனசன நன்மை, குடும்ப சுகம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04**

# மாணிக்கங்கள்

நேரில் வருபவர்களுக்கு மட்டுமே இந்தப் பாக்கியம்.
ஒவ்வொரு பிரச்சினைக்கும் அபூர்வமாகச்
செயற்படக்கூடிய அபூர்வ சக்தியுள்ள மாணிக்கக் கற்கள் உண்டு.
முதலில் ஜாதகக் கணிப்பைப் பார்வையிட்ட பின்னரே
தெய்வீக உரு செய்து கொடுக்கப்படும்.
தேவையானவர்கள் மட்டுமே நேரில் வரவும்.

பேராசிரியர். டாக்டர் பி.கே.சாமி J.D.G.A.N.JP
இல. 162 கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு — 13.
தொலைபேசி — 2342463, 2342464




# கி மோ னா


## நிபுணத்துவ கைரேகை


கைரேகை என்பது ஒரு கடல் போன்றது. அப்படியே அதை ஆராய்ச்சி செய்வதென்றால் ஆதி பராசக்தியின் அருட்கடாட்சம் வேண்டும். இக் கூற்றுக்கமைய உலக நாடுகளுக்கு சென்று கைரேகைக் கலையை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆராய்ந்து நிபுணத்துவம் பெற்ற என்னைச் சந்தியுங்கள். உங்கள் கைரேகையை பார்த்துப் பலா பலனை தெரிந்து கொள்ள முன்னறிவித்தலுடன் வந்தால் கைரேகை வாசிக்க காலநேரம் கொடுக்கப்படும்.

Tel: 2344832
கே.கங்காதரன் (M.A) J.P.
162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.
Booking Time 4.00 p.m To 7.00 p.m Only


ஜப்பானியப் பண்பாட்டை விளக்கும் நிகழ்ச்சி ஒன்றில் அவர்களின் பாரம்பரிய கிமோனா உடைகளை அணிந்து ஜப்பானிய மங்கையர் பச்சைத் தேநீர் தயாரிக்கும் காட்சி இது. இந் நிகழ்ச்சி கடந்த 4.7.2004 இல் டோக்கியோவில் நடைபெற்றது. ஏராளமானோர் கூடியிருக்க, பொழுதுபோக்கிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சி, பலருக்கும் தேநீர் பருகும் ஆர்வத்தைத் தூண்டிவிட்டதோடு தாங்களே தேநீர் தயாரித்துக்கொள்ள விருப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இப்படித் தங்களை மாற்றும் அளவுக்கு நிகழ்ச்சியைத் தயாரித்த ஜப்பானிய மங்கையரை "தேநீர் தேவதைகள்" என்று செல்லமாக அழைத்தார்களாம். இனி தேநீர் தாகம் எடுக்கும்போது மற்றவரை எதிர்பாராமல் நாமே விரைந்து செயற்படுவது நல்லது.


## முதல் வீடமைப்பு வங்கி விருது

A+(Sri) RATING
FROM FITCH RATINGS



இலங்கை வீடமைப்பு துறை, அபிவிருத்தி மற்றும் சேமிப்பு பழக்கத்தில் பரந்த அளவில் தலைமுறைகளாக பங்கு பெறச் செய்வதற்காக நாம் பல வீடமைப்பு கடன் திட்டங்கள், வைப்பு மற்றும் சேமிப்புத் திட்டங்கள் என பல்வேறு வருமான மட்டத்தை உடையவர்களுக்கு ஏற்ப அறிமுகப்படுத்தியுள்ளோம்.

**பஹன் பியச**
உங்கள் வீடமைப்பு கனவை நனவாக்குவதற்கான இலகுக் கடன் திட்டம்

**ரன் விமன**
சொந்த கைத்தொழில் புரியும் தனியார் முதலீட்டாருக்கான கடன் திட்டம், வியாபாரம் மற்றும் அவர்களது ஊழியர்கள் மற்றும் ஊழியர் சங்கங்கள்

**சுவ சக்தி**
வீடமைப்பு கடன் வழங்கலுக்கான பெருந்தோட்ட வீடமைப்பு குடியிருப்புப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டம்

**சிரம அபிமானி**
சேமலாப நிதியுள்ளோருக்கு வீட்டை கட்டுவதற்கு, வாங்குவதற்கு பெருப்பிப்பதற்கான கடன்திட்டம்

**கப்துர**
கவர்ச்சிகரமான மாத வருமானத்திற்கான நிலையான வைப்புத் திட்டம்.
உயர் நிலையான வைப்பின் போது கடன் பெறுவதற்கான தகைமை பெறுகின்றனர்

**சௌபாக்கியா**
நம்பிக்கையான பாதுகாப்பான நாளாந்த வட்டியுடனான சேமிப்பு கணக்கு





25 வருடங்கள் தேசத்திற்காக தமது சேவைகளை அர்ப்பணித்துள்ளது

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:
அரச ஈட்டு முதலீட்டு வங்கி அல்லது
எமது மாவட்ட இணைப்பு உத்தியோகஸ்தர்கள்
தேசத்துக்கான வீடமைப்பு வங்கி

பிரதான காரியாலயம் : இல.269, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே: 2573561, 2573347, 2573568 பக்ஸ்: 2573346
மின்அஞ்சல் : smibgm@itmin.com வெப்தளம்: WWW.lanka.net/smib
கண்டி கிளை : இல.127-1/1, [illegible] வீதி, கண்டி. தொ.பே: 081-2222819, 081-4471826
மின்அஞ்சல் : smibkdy@itmin.com
கம்பஹா கிளை : இல.232, கொழும்பு வீதி, கம்பஹா. தொ.பே: 033-2221316/7
மின்அஞ்சல் : smibgph@itmin.com
காலி கிளை : இல.16, 2ம் மாடி, [illegible] மாவத்தை, காலி. தொ.பே: 091-2246788
குருணாகல் கிளை : இல.30, 2ம் மாடி, [illegible] மாவத்தை, குருணாகல். தொ.பே: 037-2231234
மத்துகம கிளை : இல.38, [illegible] வீதி, மத்துகம (1ம் மாடி) தொ.பே: 034-2243713


# ஸ்பைடர் மேன்



பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர் ஆலன் ராபர்ட். உயரமான கட்டடங்கள் மீது ஏறுவதில் அசகாய சூரனான இவரை, "ஸ்பைடர் மேன்" என்றும் அழைப்பதுண்டு. புதிய மொபைல் அறிமுகப்படுத்தியுள்ள இந்தோனேசியா சட்லைட் கார்ப்பரேசனுக்குச் சொந்தமான ஜகார்த்தா நகரிலுள்ள 361 அடி உயரமான 27 மாடிக் கட்டடத்தின் மீது இவர் ஏறி சாகசம் புரிந்தார். இது சினிமா அல்ல நிஜம்.

# புதிய கிமோனா




வினோத உடைப் போட்டிகள் பற்றி அறிந்திருப்பீர்கள். இது கொஞ்சம் வித்தியாசமான நாய்களுக்கான போட்டி. ஒவ்வொன்றையும் புதுமையாகச் செய்துவிட வேண்டுமென்பதில் வல்லவர்களான ஜப்பானியர்களுக்கு இப்படியும் ஒரு ஆசை. கோடை காலத்தில் ஜப்பானியர் அதிகமாக அணியும் கிமோனா ஆடையை தனது செல்ல நாய்க்குட்டிக்கு ஏற்றவாறு வடிவமைத்து அணிவித்திருக்கிறார் ஜப்பானியர் ஒருவர். தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற வினோத உடைப் போட்டியில் கலந்துகொண்டு முதல் இடத்தைப் பெற்ற கிமோனா நாய் இது தான்.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி கோகிலா சக்திக்கா

## 02.08.2004



தேவராஜா-கோகிலா தம்பதிகளின் செல்வப் புதல்வி- சக்திக்கா தனது முதலாவது பிறந்தநாளை NEW JERSEY (U.S.A) யில் 02-08-2004 அன்று அம்மா- அப்பா மற்றும் உறவினர்களுடன் கொண்டாடினார். சக்திக்காவை அவரது அப்பம்மா கனகம்மா, அம்மப்பா ராஜேந்திரம், அம்மம்மா விஜயகுமாரி, பெரியப்பாமார்களான - மகேந்திரராஜா, சற்குணராஜா (குருக்கள்), கீர்த்திராஜா (Germany) நவா சித்தப்பா, மாமிமார் ரதிவதனி - மதிவதனி, மாமாமார் லவண் உதயராஜ் டிலக்ஷன், சித்திமார் யசோதா, சிந்துஜா மற்றும் மாமாமார், மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், பெரியம்மாமார்கள், உறவினர்கள் அனைவரும் பாண்டிருப்பு-02 ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:- S. கனகம்மா அப்பம்மா, பாண்டிருப்பு-02,
தொ.பே.- 0672220681.